
யா/புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்

# விஷ்ணு தீபம்



## 60ஆவது ஆண்டு நிறைவு விழா மலர்



# விஷ்ணு தீபம்

2018

யா/புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்

புத்தூர்

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | விஷ்ணு தீபம் |
| ஆண்டு | : | 2018 ஐப்பசி 01ஆம் திகதி |
| இதழாசிரியர் | : | திருமதி. பத்மினிதேவி சகலகலாநிதி |
| வெளியீடு | : | விஷ்ணு தீபம் மலர்க் குழுவினர் |
| அச்சுப்பதிப்பு | : | மதி கலர்ஸ்<br>முத்திரைச்சந்தி,<br>நல்லூர்<br>021 2229285 |
| பதிப்புரிமை | : | யா/ புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் |
| பக்கங்கள் | : | VI + 110 |

## யாழ்/புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் – புத்தூர்

# மகுட வாசகம்- Motto

"கற்றாய்ந்தொழுகு"

# நோக்கக் கூற்று - Vision

"சிறுவர்களின் இயல்பான திறன்களை விருத்தி செய்வதன் மூலம் தேர்ச்சி பெற்ற நல்விழுமியப் பண்பு பேணும் முழுமையான பிரஜைகளை உருவாக்குதல்"

# பணிக்கூற்று - Mission

I. அடிப்படைத் தாய்மொழித் தேர்ச்சியில் விருத்தி பெறச்செய்தல்

ii. ஆங்கிலம் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் கற்பதற்கான ஆர்வத்தை தூண்டுதல்

III. நல்விழுமியங்களைப் பேணும் திறனை ஊட்டுதல்

IV. உடலஉள ஆற்றல் வெளிப்பாட்டுக்கான சந்தர்ப்பங்களினூடாக ஆளு மையை வளர்த்தல்.

# கல்லூரிக் கீதம்

இராகம் - மோகனம் தாளம் - சதுஸ்ர ஏகம்

வாழிய வாழிய

ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் என்றும் வாழியவே
( வாழிய )

நீர்வளம் நிலவளம் நிறைந்த நிகரிலாப் புதுவை தனிலே
சீருறு கல்வியை ஆற்றி சிறப்புடன் விளங்கும் நற்கூடம்
( வாழிய )

கலைமகள் பாதம் பணிந்து கருத்துடன் கல்வியைக் கற்று
ஒளிமயமாக இவ்வுலகு ஓங்கியே ஒளிபெறச் செய்வோம்
( வாழிய )

நல்லறம் என்றும் வாழ்க நற்பணி என்றும் வளர்க
மெய்ஞான மார்க்கத் துடனே விஞ்ஞானத்துறைகளும் வளர்க
( வாழிய )

ஆயகலைகளும் வளர்க அகிலத்தோரெல்லோரும் வாழ்க
அவனியில் புதுமைகள் நிறைந்தே அன்புடன் இனிதே வாழ்க
( வாழிய )

# தமிழ்த் தாய் வாழ்த்து

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமென திகழ் பரத கண்டமதில்
தெக்கணமும் அதிற் சிறந்த திராவிட நல் திருநாடும்
தக்க சிறு பிறை நுதலும் தரித்த நறுந் திலகமுமே!
அத்திலக வாசனை போல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெரும் தமிழணங்கே!
பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்து துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள் முன்னிருந்தபடி இருப்பது போல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமுந்துளுவும்
உன்னுதரத்தே யுதித்தயொன்று பலவாயிடினும்
ஆரியம் போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம் வியந்து செயன் மறந்து வாழ்த்திடுமே

மனோன்மணியம் பெ. சுந்தரம்பிள்ளை

# தமிழ் மொழி வாழ்த்து

தான தனத்தன தான தனத்தன தான தந்தானே
வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழியவே!
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ்நாடே!
வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ் மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழியவே!

சுப்பிரமணிய பாரதியார்

# வைர விழாக் கீதம்

இராகம் - கம்சத்வனி　　　　　　　　　　　தாளம் - ஏகம்

வைரவிழாக் காணும் புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயமே
ஏவிளம்பி ஆண்டிலே ஏற்றம் பெற்று வாழியவே
சைவமும் தமிழும் தலம் உயர்ந்து ஓங்கிடவே
தமிழ்த்தாயை தரணியிலே தலை நிமிரச் செய்திடுவோம்

( வைரவிழா )

ஆவரங்கால் புத்தூரில் ஆலம் விருட்சமாய் வளர்ந்து நிற்கும்
அரிய பல சாதனைகள் படைத்திட்ட ஆலயமே
கல்வியும் ஒழுக்கமும் காலத்தால் அழியாச் சொத்து என்போம்
நிலைநாட்டி நிமிர்ந்து நிற்கச் செய்திடுவாள்

( வைரவிழா )

கிராமம் சிறிதெனினும் சாதனைகள் பெரிதாகும்
அதிபர் திரு.செந்தில்வடிவேல் தலைமையில் சிறப்புற்று ஒளிர்கிறது
ஒளிமிக்க ஆசிரியர் குழாம் ஓரணியில் திகழ்கிறது
ஓங்கியே வளர வேண்டும் ஓங்கு புகழ் பெறவும் வேண்டும்

( வைரவிழா )

ஊர் மக்கள் ஒற்றுமையின் ஓர் அரிய நிலையமிது
புவனேஸ்வரி அம்பாளின் அருளாட்சி நிலைக்கிறது
கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையிலே சரித்திரமும் படைத்து நிற்பாள்
தரமான ஆங்கிலமும், தமிழும் தலைநிமிர்ந்து ஓங்கி நிற்கும்

( வைரவிழா )

விஞ்ஞான ஆய்வுகூடம், விந்தையிலும் விந்தையது
நுண்கலை ஆக்கங்களும் தாராளம் தாராளம்
சுற்றுலாச் செயற்பாடும் துடிப்பான நிகழ்வுகளே
விளையாட்டுத் துறைகளும் வீறுநடை போட்டு நிற்கும்

( வைரவிழா )

உயர்மாடிக் கட்டிடங்கள் ஓங்கி ஓங்கி வளர வேண்டும்
மகுடவாசகமும் மண்ணில் நிலை பெற்று உயரவைக்கும்
மனங்குளிர்ந்த மருதமும் நெய்தலும் வளம் மிக்க அழகாகும்
வழிவழியாய் வாழ்ந்து நிற்க வாழ்க! வாழ்க! என வாழ்த்துகிறோம்

( வைரவிழா )

ஆக்கம் – திருமதி. பத்மினிதேவி சகலகலாநிதி
B.A Dip.in.Edu.... (Tamil)
யா/ புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்

# வைரவிழா மலர்க்குழு

ஆலோசனையும் வழிப்படுத்தலும் - திரு.க. செந்தில்வடிவேலு (அதிபர்)

மலராசிரியர் - திருமதி பத்மினிதேவி சகலகலாநிதி

மலர்க்குழு அங்கத்தவர்கள் - திரு.சி.ஸ்ரீஇராகவன்

திரு.கு.வசந்தமாறன்

திரு.பா.சத்தியநாதன்

திரு.க.பிறேமானந்

திரு.ஆ.இராஜபாலசிங்கம்

திருமதி.கல்பனா.தசரதன்

செல்வி. சி.பிரதீபா

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | வாழ்த்துச் செய்திகள் | 01 - 34 |
| 2. | யாழ்/புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலய வளர்ச்சிக்கு உழைத்த அதிபர்கள் | 35 |
| 3. | பாடசாலையின் சுருக்க வரலாறு | 36 - 37 |
| 4. | மன்றங்கள் | 38 - 39 |
| 5. | அன்பு ஒரு மகாசக்தி | 40 - 43 |
| 6. | என் அம்மா | 44 |
| 7. | புதிய தலைமுறையின் புரட்சியா சித்த மருத்துவம் ? | 45 - 46 |
| 8. | எனது விஷ்ணு வித்தியாலயம் மாணவன் முதல் அதிபர் வரையான மீள்நோக்கும் - வாழ்த்தும் | 47 - 53 |
| 9. | தாய்மையின் தூய்மை | 54 |
| 10. | நாலும் இரண்டும் | 55 - 59 |
| 11. | இயற்கையில் உள்ள காதல் | 60 |
| 12. | மாணவர் மையக் கலைத்திட்டம் - ஆரம்பக்கல்வி ஒரு பார்வை | 61 - 68 |
| 13. | தினமும் Plan பண்ணினதால் நான் Expert... | 69 - 70 |
| 14. | இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள் | 71 - 72 |
| 15. | ஆசிரியத்துவமும் வாழ்வும் | 73 - 74 |
| 16. | மறக்க முடியாத கல்லூரி நாள்களும் நினைவுகளும் | 75 - 76 |
| 17. | அரசபாடசாலைகளின் அதிபர்களும் தலைமைத்துவச் சவால்களும் | 77 - 80 |
| 18. | புவனா அக்காவும் புலமைப் பரீட்சையும் (சிறுகதை) | 81 - 83 |
| 19. | சிந்தனை | 84 - 86 |
| 20. | விஷ்ணுவின் விடியல் | 87 - 88 |
| 21. | கல்விச் செயற்பாடுகளும் பெற்றோரும் | 89 - 93 |
| 22. | வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள் | 94 - 95 |
| 23. | Importance of the English Language in Today's World | 96 - 98 |
| 24. | ஆலமர விழுதுகளாய் | 99 - 101 |
| 25. | முதியோரைப் பேணுவோம் | 102 - 104 |
| 26. | கல்லுக்கு உயிர்கொடுத்த கலைஞன் ஓவியர் மைக்கல் ஏஞ்சலோ | 105 - 109 |
| 27. | ஆசிரிய ஆளனி விபரம் | 110 |

# புத்தூர் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய ஸ்தானீககுரு கே. கோகிலரதசர்மா அவர்களின் ஆசியுரை

அறிவுப் பசி போக்கும் அற்புத ஆலயமே பாடசாலை. அருள் சேர்க்கும் ஆலயமும், அறிவூட்டும் பாடசாலையும் மனிதனின் வாழ்வைப் பண்படுத்த உதவுகின்றன. அவை இரண்டும் அருகருகே அமைந்திருப்பதும் பெருமைக்குரியதாகும். புத்தூர் ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் கோவிலும் , புத்தூர் ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயமும் அவ்வாறு அமைந்திருப்பது இவ்வூருக்குப் பெருமை சேர்ப்பதாகும்.

பாடசாலை மாணவர்களுக்கு அறிவை மட்டும் ஊட்டுவதோடன்று, விளையாட்டு, பொது அறிவு, கலைஞானம் முதலிய இணைப்பாடவிதானச் செயற்பாடுகளையும் ஊட்டுவதோடு பண்பாடுகளையும் சேர்த்துப் பயிற்றுவித்து குழந்தைகளை உயர்ந்தவர்களாக்குகிறது. அதனாற்றான் ஆசிரியர்கள் தெய்வங்களாகப் போற்றப்படுகிறார்கள்.

பாடசாலையின் தோற்றம், வளர்ச்சி என்பன கணிப்பிற்குரியன. அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் ஆகிய பல தரப்பினரின் கூட்டு முயற்சியில் அதன் வளர்ச்சி தங்கியுள்ளது. பழைய மாணவர்கள், மற்றும் ஊர்ப் பிரமுகர்களான நலன்விரும்பிகளின் பங்களிப்பும் இதில் அடங்குகின்றன. இவை யாவும் சேர்ந்து ஒரு பாடசாலையின் மதிப்பை உயர்த்துகின்றது. அதனால், ஊர் பெருமை கொள்கிறது. ஊரிலுள்ள சிறார்கள் நலம் பெறுகிறார்கள். இந்த வரலாறுகள் தகவல்கள் யாவும் பதிவு செய்யப்படவேண்டும்.

அதற்கு வகை செய்வதே இந்த மலர் வெளியீடு. அதனால் இது மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு செயற்பாடாகும். மலர் வெளியீட்டில் ஈடுபடுவோர்க்குப் பாராட்டுக்களைத் தெரிவித்து, பாடசாலைச் சமூகத்தினர் அனைவருக்கும் எனது நல்லாசிகளைக் கூறி அம்பிகையை வேண்டி நிற்கின்றேன்.

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!!

**கே.கோகுலரதசர்மா**

# ஆசிச்செய்தி

புத்தூர் யா/புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலய வைரவிழாக் கொண்டாடும் மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர், கல்விச் சமூகத்தினர்க்கு இறை இயேசுவின் அருளும் ஆசியும் நிறைவாக வேண்டி, வைரவிழா வாழ்த்துக்களைக் கூறி நிற்கின்றேன். கடந்த அறுபது ஆண்டுகளாக, இப்பகுதியில் வாழும் மக்களின் கல்வித் தேவையை, ஆளும் விருத்தியை பூர்த்தி செய்துள்ளது என்று கூறினால் அது மிகையாகாது. ஒரு மனிதனின் அழியாச் செல்வம் கல்வியாகும். கல்வியினால் மனிதனின் ஆற்றல்கள், சிந்திக்கும் திறன்கள், செயற்பாட்டு வினைத்திறன்கள் அபிவிருத்தியடைகின்றன. வைரவிழாக் கொண்டாடும் இவ் வித்தியாலயமும், இங்கு கல்வி கற்ற, கற்கின்ற மாணவர்களின் அபிவிருத்தியில் மேற்கூறியவற்றை நிறைவாக வழங்கியுள்ளது என்பதில் சந்தேகம் கிடையாது.

எனவே கடந்த அறுபது ஆண்டுகளாக, அப்பகுதி வாழ் மக்களின் மனிதவள மேம்பாட்டை விருத்தி செய்ய உழைத்த இவ்வித்தியாலயத்தின் ஆசிரியர்கள், அதிபர்கள் . அனைவருக்கும் பாராட்டுக்கள். இக் கல்விச்சாலை மேன்மேலும் கல்வியில், ஒழுக்கத்தில் சிறந்தோங்க, மீண்டும் இறை இயேசுவின் அருளும், ஆசியும் நிறைவாகப் பெற வேண்டி நிற்பது.

**அருட்பணி.கி.ஜெயக்குமார்,**
**பங்குத்தந்தை,**
**அச்சுவேலி,**
**புத்தூர்.**

# வாழ்த்துச் செய்தி

யா/புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம், புத்தூர் பாடசாலையின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெறவிருக்கும் சிறப்பு நிகழ்வுகளின் போது வெளியிடப்படவிருக்கும் விஷேட மலருக்கான வாழ்த்துச் செய்தி ஒன்றை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

ஆவரங்கால் பிரதேசத்தில் மருதமும் நெய்தலும் சேர்ந்த சூழலில் அமையப் பெற்றுள்ள இப் பாடசாலையானது 1957ம் ஆண்டில் ஊர்ப் பெரியவர்களின் உதவியுடன் ஓலைக்கீற்றுக் கொட்டகைகளின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு ஆண்டு 1 தொடக்கம் 11ஆம் ஆண்டு வரையான வகுப்புகளில் கணிசமான அளவு மாணவர்களை கொண்டு இயங்குவதுடன் ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைகளில் சிறந்த அடைவு மட்டங்களை பெற்றிருப்பது மகிழ்விற்குரியது.

நவீன தொழில்நுட்ப கற்கை நெறிகளிலும் கூடிய அறிவை இம் மாணவர்கள் பெற்றிருப்பதுடன் 2011இல் நடைபெற்ற போட்டிகளில் கோட்ட, வலய, தேசிய மட்டங்களில் பல விருதுகளை வென்றெடுத்தமை இவர்கள் தொழினுட்ப கல்வியில் மேம்பட்டமைக்கு சான்றாகும்.

“அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை” என்ற நவீன கல்வி கொள்கைக் கமைவாக அனைத்துப் பாடசாலைகளும் நவீன வளங்களுடன் புனரமைக்கப்பட்டுள்ள இவ் வேளையில், அவ்வப் பகுதியிலுள்ள மாணவர்களுக்கு சிறந்த கல்வி அறிவை ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் கூடிய கற்பித்தல் மூலம் வழங்குவதற்கு முன்வர வேண்டும் எனத் தெரிவித்து ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தின் வைர விழா நிகழ்வுகள் சிறப்புற நடைபெற வாழ்த்தி எனது வாழ்த்துரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி.

**நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்**
**முதலமைச்சர்,**
**வடமாகாணம்.**

# வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சரின் வாழ்த்துச் செய்தி

யா/ புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் 60ஆம் ஆண்டு நிறைவினை கொண்டாடும் இந்நாளில் பாடசாலையையும் பாடசாலை சமூகத்தையும் வாழ்த்துவதில் பெருமைப்படுகின்றேன்.

பாடசாலை பல வழிகளிலும் மேம்பாடடைந்து வருவதையிட்டு மகிழ்வடைகின்றேன். மேலும் மாணவரின் அடைவு மட்டங்கள் கல்வியிலும் இணைப்பாட செயற்பாடுகளிலும் மேலோங்க வேண்டும் என்பதில் பெற்றோர், மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள் நலன் விரும்பிகள் யாவரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் மாணவரின் வாண்மை விருத்தியை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

பல்வேறு மட்டங்களிலும் நடைபெறும் வாண்மை விருத்தி செயற்பாடுகளில் மாணவரை ஆர்வத்துடன் பங்குகொள்ளச் செய்வதன் மூலம் தமிழ், சைவப் பண்பாட்டு பாரம்பரிய மரபுகளை வளர்க்கக் கூடிய எதிர்கால சமூகத்தை உருவாக்கும் பாடசாலையாக விளங்கவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன்**
**வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு**
**அலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும்**
**இளைஞர் விவகார அமைச்சு,**
**வட மாகாணம்.**

# வட மாகாண கல்வி, பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளரின் வாழ்த்துச் செய்தி

யாழ்/புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தின் 60ஆவது அகவை நிறைவை முன்னிட்டு வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

1957ஆம் ஆண்டு இப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதுடன் ஆவரங்கால் பிரதேசத்தில் மருதமும் நெய்தலும் சேர்ந்த சூழலில் புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் அருகே இப் பாடசாலை அமையப்பெற்றுள்ளது. கஸ்டப் பிரதேச பாடசாலையாக இருந்து தரம் 5 முதல் 11 வரையான வகுப்புகளை கொண்டு படிப்படியாக வளர்ச்சி அடைந்து வருவதை எண்ணி பெருமகிழ்ச்சி அடைகின்றேன். க.பொ.த (சா/த) தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைகளில் சிறந்த அடைவு மட்டங்களைப் பெற்று சிறப்பாக இயங்கி வருகின்றமை பாராட்டத்தக்கதாகும்.

பாடசாலையின் பௌதீக, கல்வி, விளையாட்டு, கலாசாரம் போன்ற துறைகளின் வளர்ச்சியை ஆவணப்படுத்தும் சான்றுகளாக காலத்துக்கு காலம் வெளிவரும் பாடசாலை சஞ்சிகைகள் அமைகின்றன. அந்த வகையில் இவ் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடப்படும் மலர் எதிர் கால சந்ததியினருக்கு வரலாற்றுப் பதிவாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இப் பாடசாலை வலய, மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் பல சாதனைகளைப் படைக்க எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன் 60ஆவது ஆண்டு நிறைவு வெளியீடாக வெளியிடப்படவுள்ள இம் மலர் வெளியீடு சிறப்புற அமைய எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சி.சத்தியசீலன்**
**செயலாளர்,**
**கல்வி பண்பாட்டு அலுவல்கள்,**
**விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,**
**வடமாகாணம்.**

# காலத்தால் அழியாத கலங்கரை விளக்கம்

ஒருவன் தன்னையும் தரணிவாழ் மக்களையும் அறிவதற்கு கல்வியும் அதனால் ஏற்படக்கூடிய அனுபவ அறிவும் மிக அவசியமானது. கடந்தகால எமது சமுதாயம் இதை பெறுவதற்கு சமூக ஒடுக்குமுறைகளும் பொருளாதார பிரச்சினைகளும் முக்கிய காரணமாக அமைந்தன. ஐரோப்பியரின் வருகையின் பின்னர் மதரீதியான பிரச்சாரங்களுடன் அதற்கு தேவையான கல்வி அறிவையும் நம்மவர் பெறக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்பட்டன. இருந்தாலும் ஒன்றில் மதரீதியாக அவர்களை அனுசரித்து போகவேண்டிய நிலைமை அல்லது பொருளாதார வசதிகள் மேம்பட்டிருக்க வேண்டிய தேவையிருந்தது. இதனால் நலிவுற்ற சமூகமக்கள் இதற்கு ஈடுகொடுக்க முடியாத நிலையிருந்தது. பிற்காலத்தில் இந்துதத்துவ அடிப்படையில் பல கல்லூரி கள் தோன்றினாலும் அவற்றிலும் சுதந்திரமாகவும் சமூகப்பாகுபாடு கடந்த நிலையிலும் கற்க முடியாத நிலையில் நலிவுற்ற சமூகமக்கள் இருந்தன. நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் இலவசக் கல்வியின் தந்தை எனக்கூறப்படுகின்ற முன்னாள் கல்வி அமைச்சர் C.W.W கன்னங்கரா அவர்களது எண்ணக்கருவில் உதித்து அமுலாக்கப்பட்ட திட்டங்களின் ஊடாக வறியவர்களும் கற்கக்கூடிய சூழ்நிலைகள் ஏற்படுத்தப்பட்டன.

இதன் பின்னரும் சமூக ஒடுக்கு முறைகளுக்கு உட்பட்ட மக்கள் சுதந்திரமாகவும் சுயமரியாதையுடனும் தமது கல்வியை தொடரமுடியாதிருந்தது. இந்தக்காலத்தில் அதாவது 1950ம் ஆண்டிற்கு பிந்திய காலத்தில் இந்த மக்கள் வாழும் பகுதிகளில் அரசினால் பல பாடசாலைகள் உருவாக்கப்பட்டிருந்தாலும் சில இடங்கள் அரசியல் காரணங்களால் ஒதுக்கப்பட்டு வந்தன. அந்த வகையில் முற்றுமுழுதாக தமிழரசுக்கட்சியின் தீவிர ஆதரவாளர்களாயிருந்த அச்சுவேலியில் இருந்து தெற்கே நீர்வேலி வரையும் மேற்கே குட்டியப்புலம் வசாவிளான் வரையு முள்ள நலிவுற்ற சமூக மக்கள் உரியவாறு கல்வி கற்க முடியாது அரசியல் ரீதியாக ஒதுக்கப்பட்டி ருந்தனர். இதனால் இம்மக்களுக்கென ஒரு பாடசாலையை உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இதன் பொருட்டு சிந்தித்த எமது மக்கள் ஒன்று கூடி எடுத்துக்கொண்ட தீர்மானத்திற்கு அமைவாக ஒரு செயற்பாட்டுக்குழு தெரிவு செய்யப்பட்டிருந்தது. அவர்களது தீவிர முயற்சியினா லும் அப்போது பாராளுமன்ற உறுப்பினராக இருந்த கோப்பாய் கோமகன் திரு.கு.வன்னிய சிங்கம் அவர்களது அனுசரனையாலும் 1957ம் ஆண்டு புரட்டாதி மாதம் விஜயதசமி தினத்தன்று சம்பிரதாய பூர்வமாக இப்பகுதி மக்களின் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்து கொண்டிருக்கும் ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் அங்குரார்ப் பணம் செய்யப்பட்டு 1958ம் ஆண்டு தைமாதம் முறைப்படியான பாடசாலையாக அமைக்கப்பட்டுள்ளது

இது சைவவித்தியா விருத்திசங்கத்தினது மேற்பார்வையிலும் முகாமையிலும் ஆரம்பிக் கப்பட்டாலும் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் கு.வன்னியசிங்கம் அவர்களின் முயற்சியினால் அரசஉதவி நன்கொடை பெறும் பாடசாலையாக பதிவு செய்யப்பட்டு இன்று வைரவிழா காண்கின்றது. இந்தப் பாடசாலை ஆரம்பிக்காதிருந்தால் எமது மக்களில் பலர் கல்வியை தொடர முடியாத நிலைமைகள் ஏற்பட்டிருக்கும். இப்பாடசாலையானது ஆரம்ப காலத்தில் கல்வி, கலை, விளையாட்டு ஆகிய துறைகளில் பல முன்னணிப் பாடசாலைகளுக்கு உதாரணமாக விளங்கி யுள்ளது என்றால் மிகையாகாது.

இப்பாடசாலை 1961ம் ஆண்டு அரச பாடசாலையாக அங்கீகரிக்கப்பட்ட பின்னர் பாடசாலை நிர்வாகத்தில் ஏற்பட்ட சில பிரச்சினைகளால் பாராளுமன்ற உறுப்பினரின் முகதாவில் தேர்தல் ஒன்றுக்கு செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டது. 2 மணியுடன் நிறைவடைந்த பாடசாலையை அந்நாளைய கல்லூரிகள் போல் 3.30 மணிக்கு நிறைவுறுத்துவதற்காகவே தேர்தலைச் சந்தித்தது. இதில் 3.30 மணியுடன் பாடசாலை முடிவடையும் என்ற தீர்ப்பு வந்தவுடன் பல மாணவர்களும் ஆசிரியர்களும் பாடசாலையை விட்டு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்நிலைமையிலிருந்து பாடசாலை மீட்டெடுக்க பல வருடங்களானது குறிப்பிடத் தக்கது. இருந்தாலும் தற்போதைய வைரவிழாவை அண்மித்த காலங்களில் பல சாதனை களைக்கண்டு பெருமையுறுவது அதன் பழைய மாணவர் என்ற நிலையில் எனக்கும் பெருமை யாக இருக்கிக்கின்றது. இத்தனை பெருமைகளுடன் இன்னும் பல்லாண்டு காலம் வளர்ந்து நூற்றாண்டு விழா கண்டு காலத்தால் அழியாத கலங்கரை விளக்கமாக திகழ எனது நல்லாசியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**அ.பரஞ்சோதி**
**பழையமாணவரும்,**
**கௌரவ வடக்குமாகாண சபை உறுப்பினரும்**

# வடமாகாண கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

யா/புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயமானது அறுபதாவது ஆண்டு நிறைவினை யொட்டி வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

புத்தூர் கிராம மாணவர்களினது கல்வித் தேவையினை நிறைவு செய்யுமுகமாக 1957ஆம் ஆண்டில் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பப் பாடசாலையாக ஆரம்பிக்கப் பட்ட இப்பாடசாலை, படிப்படியாக வளர்ச்சி பெற்று தற்போது தரம் 11 வரை வகுப்புக்களைக் கொண்ட தரம் II வகை பாடசாலையாகத் திகழ்கின்றது.

இப்பாடசாலை மாணவர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த (சா.த) பரீட்சை என்பவற்றில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வருகின்றனர். 2014 ஆம் ஆண்டில் இப்பாடசாலையினது விஞ்ஞான ஆய்வு கூடமானது இடைநிலைப்பிரிவில் சிறந்த ஆய்வு கூடமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பாடசாலை மாணவர்கள் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் தங்களது திறமைகளை வெளிக்காட்டி வருகின்றனர். தமிழ்தினப்போட்டிகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் இப்பாடசாலை மாணவர்கள் வலய, மாகாண நிலைப் போட்டிகளில் பங்குபற்றி வருகின்றனர்.

வைரவிழா காணும் இப்பாடசாலை மேலும் வளர்ச்சி பெற்று இப்பிரதேச மாணவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்க வாழ்த்துகின்றேன்.

**செ.உதயகுமார்,**
**மாகாணக் கல்விப் பணிப்பாளர்,**
**வடக்கு மாகாணம்.**

# வலயக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

நெய்தல் நிலமும், மருத நிலமும் நெருங்கி, நீர் வளம் மலிந்த யா/புத்தகலட்டிக் கிராமம் புத்தூக்கமும் புதுப்பொலிவும் அழகும் வாய்ந்தது. ஆலயங்களும் வித்தியாலயங்களும் இக்கிராமத்தின் அழகை மேலும் மெருகூட்டும். இவ்வகையில் விஷ்ணு வித்தியாலயம் இக்கிராமத்திற்கு எழில் ஏற்றுவதோடு. ஒளியும் ஊட்டுகின்றது.

அறுபது ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட இக் கலைக்கூடம் ஆரம்பத்தில் குடித்தொகைப் பரம்பலுக்கேற்ப குறைந்தளவு மாணவ ஆசிரியர்களைக் கொண்டிருந்தாலும் மானிட வளர்ச்சிக்கேற்ப மாணவர்களும் அவர்களை ஆற்றுப்படுத்தும் ஆசிரியர்களும் அமையப் பெற்றிருப்பது சிறப்பானதாகும். அத்தோடு மாணவர்களின் பல்துறை ஆற்றல்களை விரிவுபடுத்துவதற்கு விஞ்ஞான கணனிக்கூடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. இச் செயற்பாடானது கிராம, நகர வேறுபாட்டை நீக்கி மாணவரின் கல்வி நிலையை மேம்படுத்தும் நன்நோக்காகும்.

இவ்வித்தியாலத்தின் வரலாற்றுச் சுவடு தொழில் நுட்பத்துறை கலைத்துறை ஆகியவற்றில் பல விருதுகள் வென்று வித்தியாலயத்தின் கடந்த கால சாதனைகளை காட்டுகின்றது.

வைரவிழாக்காணும் இவ் வித்தியாலயம் நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் பல வெற்றிகள் வென்று ஏற்றம் பெற வாழ்த்துவதோடு வரலாற்றைக் காண்பிக்கும் இம்மலரினையும் மனநிறைவுடன் வாழ்த்துகின்றேன்.

**S.சுந்தரசிவம்,**
**வலயக்கல்விப் பணிப்பாளர்,**
**வலயக்கல்வி அலுவலகம்,**
**யாழ்ப்பாணம்.**

# பிரதேச செயலாளரின்
# வாழ்த்துச் செய்தி

கல்வியில் முதன்மையாக விளங்கும் யாழ்ப்பாணக் குடா நாட்டின் புத்திஜீவிகள் அதிகம் காணப்படும் வலிகாமம் பிரதேசத்தின் யா/புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் அறுபதாம் ஆண்டு நிறைவினை முன்னிட்டு வெளியிடும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வெய்துகிறேன்.

எமது பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்காகவும் நற்பழக்க வழக்கமுள்ள மாணவர்களை உருவாக்குவதிலும் இப் பாடசாலை பெரும் பங்கெடுக்கிறது. மேலும் மாணவர்களின் கலைகளினை வளர்க்கவும் அரும்பாடுபடுகிறது.

இப்பாடசாலை வலய மட்ட, தேசிய மட்ட போட்டிகளில் கலந்து கொண்டு விருதுகளையும் பெற்றுக் கொண்டமை போற்றுதற்குரியது. அறிவியல் மட்டுமன்றி தகவல் தொழினுட்பவியலிலும் சிறப்பு பெற்று வருகிறது. இதற்கு எடுத்துக்காட்டாக தேசிய தகவல் தொழினுட்பம் மற்றும் தொலைத் தொடர்பு சிறப்பு விருதுகள் 2011ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்றமை பெருமைக்குரிய விடயம் ஆகும்.

கல்வி, அறிவியல், தொழில்நுட்பம் மட்டுமன்றி விளையாட்டுக்களிலும் முதன்மை பெறும் இப் பாடசாலை மென்மேலும் எல்லாத்துறைகளிலும் முதன்மை பெறவும் மாணவர்கள் மேன்மை அடையவும் வாழ்த்துவதுடன், இறைவன் அருளாசி கிடைக்க வேண்டும் என மனமுவந்து பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி. சுபாஜினி மதியழகன்**
**பிரதேச செயலாளர்,**
**வலிகாமம் கிழக்கு,**
**கோப்பாய்.**

# கோட்டக்கல்விப் பணிப்பாளரின் உள்ளத்திலிருந்து

யா/புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தின் வைரவிழாவை முன்னிட்டு வெளிவரும் இதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டு 60ஆவது ஆண்டினை சிறப்பிக்கும் வகையில் இன்று இச் சஞ்சிகை வெளிவருவது சிறப்பிற்குரிய விடயமாகும்.

கோப்பாய் கோட்டத்தில் இவ் வித்தியாலயம் 1957ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டபோது 46 மாணவர்களையும், 04 ஆசிரியர்களையும் கொண்டிருந்திருக்கிறது. இன்று சுமார் 200 மாணவர்களையும், 17 ஆசிரியர்களையும் கொண்டு சிறந்த இடைநிலைப் பாடசாலையாக அமைந்துள்ளது. தரம் 05 மற்றும் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்டிருப்பது பாராட்டத்தக்க விடயமாகின்றது. கல்வியுடன் ஏனைய இதர இணைப்பாடவிதான செயற்பாடுகளையும் மாணவர்களுக்கு புகட்டுவதில் இவ் வித்தியாலயம் சிறப்புப் பெறுகின்றது.

இச்சஞ்சிகை வெளிவருவதற்கு அதிபர், ஆசிரியர்கள், மற்றும் மாணவர்களின் விடாமுயற்சியே சான்றாகின்றது. மாணவர்களை நல்வழிப்படுத்தி அவர்களை சமூகத்தில் நன்மக்களாக மாற்றவேண்டிய சாலச்சிறந்த பணியாகவே ஆசிரியப்பணி அமைகின்றது. இந்நூல் வெளிவருவதில் ஆக்கம் புரிந்து அயராது பாடுபட்ட அனைவரையும் மனதாரப் பாராட்டுவதுடன் இச் சஞ்சிகை தொடர்ந்து வெளிவரவும், வித்தியாலயத்தின் பெறுபேறு சிறப்படைந்து மேலும் முன்னேற்றமடையவும் இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நா.சிவநேசன்,**
**கோட்டக்கல்விப் பணிப்பாளர்,**
**கோப்பாய்.**

# வாழ்த்துச் செய்தி

யா/புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் இவ்வாண்டு வைரவிழா காணுவதையிட்டு பேருவகையடைகின்றேன். நான் யா/புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்திற்கு வந்தபோது ஆசிரியராக எனது கடமையை பொறுப்பேற்றுக் கொண்டேன். நான் இங்கு வந்து சிறிது காலத் தின் பின் போட்டிப் பரீட்சை மூலம் அதிபராக பதவியுயர்வு பெற்றேன். மேலும் சிறிது காலத்திற்குள் இலங்கை கல்வி நிர்வாக சபைக்குள் உள்வாங்கப்பட்டு பதவி உயர்வு பெற்றேன். அந்த வகையில் என்னுடைய அனைத்து முன்னேற்றங்களும் யா/ புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலத்திற்குள் வந்தபின்பு நிகழ்ந்துள்ளது. இந்தவகையில் உயர்ந்த நிலைக்கு இட்டுச் சென்ற விஷ்ணு வித்தியாலயத்திற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

இப்பாடசாலையில் கல்விகற்கின்ற பிள்ளைகள் கல்வியில் உயர்ந்து விளங்க வேண்டும். கடமையை செவ்வனே ஆற்ற வேண்டும் .பண்பிலும், பணிவிலும் நன்மதிப்பிலும் அவர்கள் உயர்வுபெற்று எதிர்காலத்தில் விஷ்ணுவிற்கு மகுடம் சூட்டவேண்டும். வைரவிழா காணும் இவ்வித்தியாலயம் பௌதிகவளங்களாலும் உயர்வுபெற்று கா.பொ.த.சாதாரணதரம், கா.பொ.த.உயர்தரம் வரை இவ்வித்தியாலயம் வளர வாழ்த்துக்கள் பலகூறி இறையாசிவேண்டி எனது வாழ்த்துச் செய்தியை நிறைவுக்கு கொண்டுவருகின்றேன்.

**திரு.கு.வசந்தமாறன்**
**பிரதிஅதிபர்**

# வாழ்த்துச்செய்தி

"கற்றாய்ந்தொழுகு" எனும் மகுட வாசகத்தை தன்னகத்தே கொண்டு கல்விப்பணி யாற்றும் யாழ்/ புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் வைரவிழா காண்பது பெருமகிழ்வைத் தருகின்றது. இவ்விழாவினை உரிய தினத்தில் நடாத்த வேண்டுமென மிக ஆர்வத்துடன் உதவிபுரிந்த பாடசாலை சமூகத்தை இந்நேரத்தில் பாராட்டிக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இப்பாடசாலையானது 1957ஆம் ஆண்டு விஜயதசமி தினத்தன்று இப்பிரதேசத்தில் வாழ்ந்த முன்னோர்கள் தமது பிள்ளைகள் தமது பிரதேசத்திலே கல்வி பயிலவேண்டும் என்னும் அவாவினால் உருவாக்கப்பட்ட பாடசாலையாகும். கிராமியச் சூழலில் அமைந்துள்ள பாடசாலை களின் கல்வித்தரத்தினை மேம்படுத்துவதென்பது இலகுவான விடயமல்ல. கல்வியின் போட்டித் தன்மை நகர்பாடசாலைகளை நோக்கிய நகர்வு என்பன காரணமாக கிராமப்புற பாடசாலைகள் சில தனது தனித்துவதன்மைகளை இழந்து நிற்கின்ற இவ்வேளையிலே இப்பாடசாலையானது 60 ஆண்டுகள் தனக்கென தனித்துவத்தோடு நிலைத்து நின்று கல்வி வழங்கி தனது வைர விழாவினைக் கொண்டாடும் இவ்வேளையிலே இப்பாடசாலையை ஆரம்பித்தவர்கள் இதற்கான காணிகளை அன்பளிப்பு செய்தோர், நிதி உதவி வழங்கியோர், சங்கம் அமைத்து நிர்வாகம் செய்த பெரியோர்கள், கட்டுமானப்பணிகளுக்கு உதவி புரிந்தோர்கள், பாடசாலையை ஆரம்ப காலத்தில் தற்துணிவோடு பொறுப்பேற்று நடத்திய அதிபர், அவருக்கு உறுதுணையாக இருந்த ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை மீது நம்பிக்கை வைத்து தமது பிள்ளைகளை பாடசாலையில் இணைத்துக் கொண்ட பெற்றோர்கள் அனைவரும் இந்நேரத்தில் மதிப்போடும் நினைவு கூரப்பட வேண்டிய வர்களாவர்.

அத்தோடு பாடசாலை வரலாற்றில் ஒரு வருட காலம் சுமார் 250 இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு அதிபர் உட்பட 6 ஆசிரியர்கள் கடமையாற்றி இருந்தோம். அவ்வேளையில் எம்மோடு தோளோடு தோள் நின்று உழைத்தவரும் இப்பாடசாலையின் சேவைக்காலத்திலே இறைவனடி சேர்ந்தவருமான கணிதபாட ஆசான் அமரர் கார்த்திகேசு - லங்கேசன் அவர் களையும் இந்நேரத்தில் நினைவு கூரப்பட வேண்டியது கட்டாயமாகும்.

மாறி வரும் உலகிற்கேற்ப பாடசாலையின் பௌதீக வளங்களும் உட்கட்டமைப்புக் களும் அதிகரிக்கப்படுவது இயல்பானதாகும். ஆனால் ஒரு பாடசாலையை உயர்வடையச்

செய்வதில் சமூகத்தினருடைய பங்களிப்பு கட்டாயமானதாகும். இவ்விழா மூலம் சமூகத்தவர்கள் பாடசாலையோடு இணைந்து நிற்கின்றனர். அவர்கள் தொடர்ந்தும் பாடசாலையோடு பங்களிப்பு செய்து ஒத்துழைப்பு நல்கவேண்டுமென இந்நேரத்தில் வேண்டுகின்றேன்.

இப்பிரதேச சிறார்கள் இப்பாடசாலையின் பயனால் அறிவிலும் பண்பிலும் சிறந்தவர் களாக மேம்பாடடைய வேண்டுமெனவும் இவ்வைரவிழா சிறப்பாக நடைபெற வெளியிடப் படுகின்ற மலர்பொலிவுற்று விளங்கவேண்டுமென வாழ்த்தி மேலும் பாடசாலையின் பணி சிறப்புற சமேதரராக வீற்றிருக்கும் இராமலிங்கேஸ்வரருடைய பொற்பாதங்களையும், மணற் பகுதி ஸ்ரீ புவனேஸ்வரி அன்னையினது கழலடிகளையும் போற்றி வணங்குகின்றேன்.

வாழ்க! வளர்க!! வளம்பெறுக!!!

**திரு.சி.ஸ்ரீஇராகவன்,**
**பிரதி அதிபர்,**
**யா/ புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்.**

# வாழ்த்துச் செய்தி

யாழ் குடாநாட்டிலே பெயர் பெற்ற ஊர்களில் புத்தூர் மிகவும் பிரபல்யமானது. நீர்வளமும், மண்வளமும் மிக்க விவசாயக் கிராமமாக ஆவரங்கால் கிழக்குப் பகுதி விளங்குகின்றது. இது ஒரு கல்வி கற்ற கல்விமான்கள் நிறைந்த கிராமமாக விளங்குகின்றது.

புவனேஸ்வரி அம்மனின் அருளாட்சி விளங்கிக் கொண்டிருக்க அதன் அருகே அழகாக அமைந்துள்ளது எமது புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம். சைவத்தையும் தமிழையும் அதன் கலாசாரத்தையும் நெறி பிறழாது கல்வியூட்டி வரும் எங்கள் வித்தியாலயமானது அறுபதாவது அகவை கொண்டாடுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த அறுபதாவது ஆண்டு வரலாற்றில் பல ஆசிரியர்கள், அதிபர்கள், பேராசிரியர்கள், கணக்காளர்கள் போன்ற கல்விமான்களை உருவாக்கியதுடன் இவர்களைக் கடந்து சிறந்த மனிதநேயமுள்ள நல்ல மனிதர்களை சமூக ஆர்வலர்களை பிரசவித்துள்ளாள் விஷ்ணுத்தாய் என்றால் அது மிகையல்ல.

காலத்திற்கு காலம் செயற்றிறனும் அர்ப்பணிப்பும் மிக்க பல முதல்வர்களின் வழி காட்டலிலும் அயராத உழைப்பின் விளைவாக கல்வித்தரத்திலும் இணைப்பாட விதான செயற் பாட்டிலும் எமது மாணவர்கள் பல சாதனைகளைப் புரிந்ததோடு பௌதீக வளங்களையும் கணிசமான அளவு பெற்றுள்ளோம்.

இப்படிப்பல சாதனைகள் புரிந்து வரும் எமது வித்தியாலயம் மேலும் பல நூற்றாண்டுகள் கடந்து இன்று போல் என்றும் வான்புகழ் ஓங்கி வாழவேண்டுமென எல்லாம் வல்ல புவனேஸ் வரி அம்பாள் பாதம் பணிந்து ஆசிகளை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**திரு. சி. ஆனந்தராசா,**
**செயலாளர்,**
**பாடசாலை அபிவிருத்திக்குழு.**

# வாழ்த்துச் செய்தி

கடந்த 60 வருட காலமாக ஈழத்தமிழரின் கல்விச் சமூகத்தில் குறிப்பாக புத்தூர் பிரதேசத்தில் கல்விப் பணியாற்றிக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணம்,புத்தூர் புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலய வைரவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

போருக்குப் பிற்பட்ட காலங்களில் இப் பாடசாலையுடன் எனக்கு நெருங்கிய ஒரு தொடர்பு ஏற்பட்டதுடன் இப்பாடசாலை சிறார்களுக்கு பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. போர்க்கால சூழ்நிலைகளினால் துவண்டு கிடந்த கல்விச் சமூகம் இன்று மிகப் பாரிய எழுச்சியை நோக்கி சென்று கொண்டிருக்கிறது.

தரமான கல்வி, நிலையான பண்பாடு, கலாசாரம் , விழுமியங்களைக் கொண்ட ஒரு கல்விச் சமுதாயத்தை வளர்த்து எடுப்பதன் மூலமே நல்லதொரு சமுதாயத்தை மீண்டும் கட்டியெழுப்ப முடியும்.

“இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்கள்” எமது இளைஞர்கள் மத்தியில் எமது கலை, கலாசாரப் பண்பாட்டு, விழுமியங்கள் மிகவும் குறைந்து செல்வது வருந்தத் தக்கது. இவ் வேதனைகளைப் போக்க எமது சமுதாயத்தின் இன்றைய இளைஞர்கள் எம்மால் முடியும் என்ற கருத்துடன் சமூக எழுச்சிக்கான செயல் ஒழுங்கினை உருவாக்க வேண்டும்.

நல்ல பல காரியங்களை , சமூகசீர்திருத்தங்களை மாணவ சமுதாயமாகிய நீங்கள் செய்யின் இச் சமூக எழுச்சிக்கான அனைத்து செற்பாடுகளுக்கும் நானும் என் நண்பர்களும் பின்னால் நிற்போம். எம் இளைஞர்கள் உறுதியுடன் செயற்பட்டால் எம் மண்ணின் நிலைப் பாட்டை அடியோடு மாற்றி புதுமை புனைந்து மீண்டும் ஒரு தலைநிமிர் சமூகமாக நாம் எழுந்து நிற்க முடியும்.

க. செல்வேள்,
தலைவர்,
**ur friend foundation**

# புத்தகலட்டி விஷ்ணு வித்தியாலயம் வைர விழாவை முன்னிட்டு வழங்கும் நல்லாசிகள்

வாழ்க ! வளர்க ! என்றும் விஷ்ணுவின் பாதங்கள்
பணிந்து வணங்கி பத்திநெறி கொண்ட
புத்தகலட்டி விஷ்ணு வித்தியாலய சூழல் வாழ் மக்கள்
பக்திநெறி கண்டு தலைவணங்குகின்றோம்
வைரவிழா காணும் வித்தியாலயத்தின் சிறப்பு இயல்புகளை
மூன்று காலகட்டமாக பகுத்து வாழ்த்துக் கூறுவதும்
ஆசி கூறுவதும் சாலப்பொருத்த முடையதாகும்
என நினைக்கின்றேன்.

1957 ம் ஆண்டு ஊரில் உள்ள பெரியவர்கள் ,சமூக முன்னோடிகள் யாவரும் ஒன்று கூடி தீர்மானித்து தமக்கு ஒரு பாடசாலையை நவராத்திரி தினத்தன்று இந்து போட் மூலம் தாபித்தார்கள் அயற்கிராமங்களில் இருந்து பாலர் வகுப்புத் தொடக்கம் சாதாரண வகுப்பு வரையும் மாணவர்களை சேர்த்துக்கொண்டார்கள். கல்வி நடவடிக்கைகள் பற்றி நினைவு கூருதல் பொருத்தமுடையதாகும்.

நம் பாடசாலை ஆசிரிய வளத்தில் மிகவும் உச்ச நிலை பெற்ற ஆசிரியர் குழாத்தில் முத்தமிழ் வித்தகர்கள் பலரை எண்ணிப்பார்த்தல் சிறப்புடையதாகும். தமிழுக்கு ஒரு சீனித்தம்பி ஆசிரியர், சகல பாடங்களுக்கும் ஒரு கிருஸ்ணபிள்ளை ஆசிரியர், இயல் இசை நாடகத்திற்கு ஒரு கதிரவேல் ஆசிரியர் (அடிகளார்) போன்ற பல ஆசிரியர்கள், எங்கள் பாடசாலை என்ற பற்றுடனும், ஈடுபாட்டுடனும் சேவையாற்றினார்கள். கல்விக்கு உரமிட்டு வளர்த்த அப் பெரியோர்களுக்கு எமது நல்லாசிகளை வைரவிழா காணும் இன்று அவர்கள் பாதாரவிந்தங்களில் சமர்ப்பிக்கின்றோம். இன்று அப்பெருமக்கள் எம் மத்தியில் இல்லாது விட்டாலும் அவர்களது நல்லாசிகள் என்றும் பாடசாலைக்கு துணை நிற்கும்.

விஷ்ணு வித்தியாலயம் வெற்றிகள் பல கண்டு விருதுகள் பல வென்று விஷ்ணு வித்தியாலயம் முதல் நிலை பெறுவது மட்டுமல்லாது இயல், இசை, நாடக விழாக்களில் சிறப்புப் பெற்ற "பக்தமார்கண்டேயர்" "அரிச்சந்திர மயான காண்டம்" போன்ற நாடகங்களைப்பார்த்து, பிரமித்து புகழை மேம்படுத்திய விஷ்ணு வித்தியாலயத்திற்கு வைரவிழாவில் நல்லாசிகள் குவியட்டும்.

பாடசாலை சகல துறைகளிலும் ஏற்றம் பெற சேவையாற்றிய கல்விச்சமூகம் வைரவிழா காணும் விஷ்ணுவித்தியாலயத்துக்கு நல்லாசி வழங்கிக் கொண்டிருக்கிறார்கள் வாழ்க!

பாடசாலைக்கீதம், பாடசாலைக்குரிய இலட்சினை ஆகியவற்றை உருவாக்கிய சிவராசா ஆசிரியர், என்றும் நீடூழி வாழ்க அவர்களையும் வாழ்த்தி அவர்களது புகழ் பாடசாலை வரலாற்றில் இடம் பிடித்தமைக்கு அவர்களுக்கும் நல்லாசிகள் உரித்தாகுக.

பாடசாலை வளர்ச்சிப்பணி தொடர பாடசாலைச் சமூகம் தம்மாலான பணிகளைச் செய்ய சகலரும் ஒன்றுபட்டு பல முன்னேற்றங்களைக் காண வேண்டும். இக் கல்வி நிலையத்தின் சேவையால் இக்கிராமத்தில் பல துறைகளிலும் விற்பன்னர்களை, உருவாக்கி சங்கீத வித்துவான்களை, துறை போந்த அறிவியலாளர்கள், கணக்காளர்கள் பலரை உருவாக்கி இருக்கும் இப்பாடசாலை மேலும் பல சிறப்புக்களை தன்னகத்தே விருத்தி செய்து நூற்றாண்டு விழா காணவேண்டும் என வாழ்த்தி நீடூழிகாலம் வளர்க! வளர்க! என வாழ்த்துகிறோம்.

**த. மணிசுந்தரம்,**
**ஓய்வு நிலை அதிபர் தரம்1**
**(அதிபராக 1986-1996 ம் ஆண்டு வரை)**

# கல்வி ஒளி வீசும் கலங்கரை விளக்கு ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயம்

"இன்னறுங் கனிச்சோலை செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம்பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர்விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

என்ற பாரதியார் கூற்றுக்கு செயல் வடிவம் கொடுத்தாற் போல் ஊர்ப் பெரியவர்கள் பலர் சேர்ந்து 1957 ஆம் ஆண்டில் உருவாக்கிய செழுங்கலைக்கூடமே புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணுவித்தியாலயம் ஆகும். பிரதேசமக்களின் அறியாமை இருளை நீக்கி ஒளியை ஊட்டும் பணியிலே இப்பாடசாலை அறுபது ஆண்டுகள் பூர்த்தி செய்திருப்பது அனைவராலும் பாராட்டப்பட வேண்டியதே.

உடல்வலிமையைக் கொண்டு உழைத்து வாழவேண்டும் என்ற தன்மான உணர்வு மிகுந்தவர்களான இப்பிரதேச மக்களின் தொழில் வாண்மையை ஓங்கச் செய்வதில் இப்பாடசாலையின் பங்கும் பணியும் சிறப்பானது . எதிர்கால உலகுக்கு வேண்டிய தொழிற்திறன் தேர்ச்சிகள் பொதிந்ததாக கலைத்திட்டம் அமைய வேண்டும் என்ற நவீன கல்விச்சிந்தனையை காலத்தால் முந்தியே இப்பாடசாலை கைக்கொண்டு பணியாற்றியமையால் தொழில்வாண்மை சிறந்த பல விற்பன்னர்களை உருவாக்க முடிந்தது என்றால் அது மிகையாகாது.

ஒற்றுமை , கீழ்படிவு, பெரியோரைக்கனம் பண்ணல், ஆசிரியரை மதித்தல் ஆகிய நற்பண்புகள் மிக்க சமூகம் வாழ்கின்ற யாழ்ப்பாணத்தின் ஒருசில கிராமங்களில் இதுவும் ஒன்றாகத் திகழ்கின்றது. இக்கிராமத்தில் கல்விப்பணியாற்றும் பேறு எனக்கும் கிடைத்ததை யிட்டு மகிழ்வடைகின்றேன்.வரலாற்று இடப்பெயர்வின் பின் பாடசாலை சொந்த இடத்திலே இயங்க ஆரம்பித்த போது அதாவது 1997ம் ஆண்டில் இப்பாடசாலைக்கு ஆசிரியராக வந்தேன். அன்றைய அதிபர் திரு. நா.சிவஞானம் அவர்களின் தலைமையில் பல செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுத்தோம். அவரது ஓய்வின் பின்னர் 2006ம் ஆண்டில் பதில் அதிபர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட எனக்கு 2009இல் அதிபர் சேவை 2 கிடைக்கப் பெற்றது பலரதும் ஆதரவுடன் பாடசாலையின் செயற்பாட்டினை முன்னெடுத்துச் செல்ல முடிந்தது. அப்போதைய

உபஅதிபர் திரு.சு.நடராசா அவர்களும், அவரின் ஓய்வின் பின் உபஅதிபராக திரு.சி. ஸ்ரீஇராகவன் அவர்களும் ஆசிரியர் குழாத்தையும் பெற்றார், பழைய மாணவர்களின் ஒத்துழைப்பையும் பூரணமாக கிடைக்கச் செய்தமையால் 2011ஆம் ஆண்டிலே ஜனாதிபதி மாளிகைக்குக் கூட 50 மாணவர்களை அழைத்துச் செல்ல முடிந்தமையை பெரும் சாதனையாகவே கருதுகின்றேன்.

வகை II பாடசாலைகளிலே இதுவும் ஒன்று. கணனிக் கற்கையை முற்கொண்டு ஆரம்பித்த பாடசாலைகளிலே இதுவும் ஒன்று. 2009ம் ஆண்டில் 11 கணனிகளுடன் இது ஆரம்பிக்கப் பட்டது. கணனி அலகுக்கு பொறுப்பாக இப்போது பரீட்சைத் திணைக்களத்தில் பிரதிப் பரீட்சை ஆணையாளராக கடமையாற்றும் திரு.சி. பிரகாசன் அவர்கள் செயற்பட்டார்கள். அவரது நெறிப் படுத்தலில் கல்வியமைச்சு நடாத்திய மென்பொருள் ஆக்கப் போட்டியிலே எமது மாணவர்கள் மாகாணமட்டத்தில் 6ஆவது இடத்தையும், தேசியமட்டத்தில் 4ஆவது இடத்தையும் பெற்று சுமார் 2 மில்லியன் பெறுமதியான பரிசினையும் வென்றிருந்தனர்.

இத்தகைய வியக்கத்தக்க சாதனைகள் பல புரிந்த இப்பாடசாலை இன்றும் தனது கல்வி அடைவில் உயர்ந்து செல்வதை சென்ற ஆண்டின் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் பெறுபேற்றிலே செல்வன் ந.கவிஸ்னா அவர்கள் பெற்றுக் கொண்ட பெறுபேறு பறை சாற்றுகின்றது.

17 ஆண்டுகள் இப்பாடசாலையின் சேவைக்காலத்திலே ஒன்பது ஆண்டுகள் ஆசிரியராகவும் எட்டு ஆண்டுகள் அதிபராகவும் பணியாற்றி மகிழ்ந்திருக்கிறேன். பல மாணவர்களுக்கு நல்வழிகாட்டிய கலங்கரை விளக்கான இப்பாடசாலை அறுபதாவது அகவையை கொண்டாடுவதையிட்டும் அந்நினைவை அறிக்கையாக்கி மலர் வெளியிடுவதை யிட்டும் மகிழ்வடைவதுடன் இம் முயற்சியில் ஈடுபட்டுழைக்கும் அனைத்து உள்ளங்களையும் பாராட்டி இன்னும் பல நூற்றாண்டுகள் இக்கல்விக்கூடம் ஒளிவீசிப் பிரகாசிக்க வேணடுமென வாழ்த்துகிறேன்.

நன்றி

**திரு.கு.ரவிச்சந்திரன்,**
**அதிபர்,**
**யா/அத்தியார் இந்துக்கல்லூரி.**

# வாழ்த்துச்செய்தி

கல்விப் பணியில் 60வருடங்கள் தன்னை ஈடுபடுத்திய யாழ்/புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தின் வைரவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதையிட்டு நான் பெரு மகிழ்வடைகின்றேன்.

இப்பாடசாலையின் கல்விப் பணி மகத்தானது. கல்வியில் அனைவருக்கும் வாய்ப்பு என்பதற்கிணங்க தனது சேவையை வழங்கி வந்துள்ளது. இப்பாடசாலையை நிறுவுவதிலும் அதனை முன்கொண்டு செல்வதிலும் பல இடர்களையும் இதனை நிறுவியவர்களும் முகாமைசெய்தவர்களும் அனுபவித்துள்ளனர்.இப்பாடசாலையினால் இதனை சூழவுள்ள மக்கள் பலர் கல்வி வாய்ப்புக்களை பெற்றிருப்பது இப்பாடசாலையின் கல்விப்பணிக்கு சான்றாகும்.

இப்பாடசாலையின் 60 வருட கல்விப்பணியில் நான் 8 வருடங்கள் கற்பித்து இருப்பது எனக்கு மிக மகிழ்வைத் தரக்கூடியது. இப்பாடசாலையின் கற்பித்தல் பணி மிக மகிழ்வான தருணங்களைத் தந்துள்ளது. அதுமட்டுமல்லாது எனது வாண்மை விருத்திக்கு மிகச்சிறந்த களமாக காணப்பட்டது. நான் கற்பித்த காலத்தில் எனக்கு வழிகாட்டிய அதிபர்களை நினைவு கூரும் சந்தர்ப்பத்தில் எனது சக ஆசிரியர்களுடனான இடைத்தொடர்புகள் மிகவும் உன்னத நிலையில் இருந்ததும் மறக்க முடியாத ஞாபகங்கள். நான் கற்பித்த காலத்தில் என்னிடம் கற்ற மாணவர்களும் என்றென்றும் நினைவில் நிற்பவர்களாக உள்ளனர்.

இப்பாடசாலை ஆரம்பத்திலும் பல்வேறு பௌதீகவளம் பற்றாக்குறையுடன் இயங்கியதும் தற்பொழுது பௌதீக வளத்தேவை நிறைவை நோக்கி செல்வதும் இப்பாடசாலை எதிர்காலத்தில் சிறந்த கல்விச்சேவையை செய்வதற்கு பலம் சேர்க்கும். இப்பாடசாலை நூற்றாண்டை நோக்கி கம்பீரமாக வீறுநடை போட்டுச் செல்ல எல்லாம் வல்ல புவனேஸ்வரி அம்மாளின் ஆசிகளை வேண்டி நிற்கின்றேன்.

**திரு.ந.மகேந்திரராசா,**
**அதிபர்,**
**யா/ இந்து ஆரம்ப பாடசாலை.**

# வாழ்த்துச்செய்தி

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆவரங்கால் கிழக்கு கிராமத்தில் கடந்த அறுபது ஆண்டு களாக மிகச் சிறந்த கல்விப்பணியை வழங்கிக் கொண்டிருக்கும் புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தின் வைர விழா மலருக்கு வாழ்த்துச் செய்தியும், ஆசிச்செய்தியும் வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். 1957ஆம் ஆண்டு ஒரு விஜயதசமி தினத்தில் இவ்வூர்ப் பெரியோர்களால் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை எத்தனையோ இடர்பாடுகளையும் கஷ்டங் களையும் வெற்றிகரமாக முறியடித்து இன்று ஒரு பெரு விருட்சமாக உருவெடுத்து வீறுநடை போடுகின்றது. இப்பாடசாலையின் அமைவிடம் சுற்றுப்புறச்சூழல் என்பன பாடசாலையின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு மிகவும் உறுதுணையாக விளங்கி வருகின்றது என்று கூறினால் அது மிகையாகாது.

இப்பாடசாலையில் நான் இருபத்தைந்து வருடங்கள் ஆசிரியராகவும், உபஅதிபராகவும் கடமையாற்றியமை எனக்குக் கிடைத்த பெரும் வரப்பிரசாதமாகவே கருதுகின்றேன். அமரர் நடராஜா, பாலசிங்கம், மற்றும் திரு.சுந்தரம், திரு. நா. சிவஞானம்(கனடா) திரு.கு.ரவிச்சந்திரன் (யாழ்/நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி அதிபர்) ஆகிய அதிபர்களின் கீழ் நான் கடமையாற்றி யுள்ளேன். இவர்களில் திரு.க.மணிசுந்தரம், திரு.நா.சிவஞானம், திரு.கு.ரவிச்சந்திரன் ஆகியோர் இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு உழைத்தனர். திருவாளர் மணி சுந்தரம் அதிபராகப் பொறுபேற்ற பின்பு தான் இப்பாடசாலையின் மிகச்சிறந்த வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி வருடாவருடம் நடைபெற்று வந்தது. இவருடைய காலத்தில் இப் பாடசாலையின் இணைப் பாடவிதானம் மிகவும் வளர்ச்சியடைந்திருந்தது என்பதில் ஐயமில்லை.

இவருக்குப்பின் அதிபராகப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட திரு.நா.சிவஞானம் இப்பாடசாலையின் பழையமாணவராகவும், இவ்வூரைச் சேர்ந்தவராகவும் இருந்தமையால் பாடசாலையின் சகல தேவைகளையும் நிறைவு செய்வதில் மிகுந்த அக்கறையுடன் அயராது உழைத்தார். இவரது அயராத உழைப்பினாலும், அதீத அக்கறையினாலும் பாடசாலை குறுகிய காலத்தில் துரித வளர்ச்சி கண்டது. பௌதீகவளம், ஆசிரியர்வளம், மாணவர் தொகை அதிகரிப்பு என்பன திரு.சிவஞானம் அதிபர் காலத்திலேயே பெருவளர்ச்சி கண்டது. விளையாட்டு மைதானத்திற்கு வரைபடம், இருமாடிக்கட்டடம், மலசலகூடங்கள், குடிநீர் வசதி என்பன இவரது தன்னலமற்ற சேவைக்கு எடுத்துக்காட்டாய் விளங்குகின்றன.

இவருடைய ஓய்வுக்குப் பின்னர் திரு.கு.ரவிச்சந்திரன் அவர்கள் அதிபர் பொறுப்பை ஏற்று மிகவும் திறம்பட தமது ஆளுமைத்திறனினாலும், அறிவாற்றலினாலும் பாடசாலையை மிகத்திறம்பட நிர்வகித்து பாடசாலையை அதிஉச்சநிலைக்குக் கொண்டு வந்தார். ஆசிரியர், மாணவர் மீது மிகுந்த அக்கறையும், கவனமும் எடுத்துப் பாடசாலையை ஒரு கட்டுக் கோப்புக்குள் வைத்திருந்தார். அதிபர், ஆசிரியர்கள் கூட்டுப் பொறுப்புடனும், மாணவர்கள் கீழ்படிவும், நற்பண்புகளும் பொருந்தி நடக்கவும், ஒழுக்க விழுமியங்களைப் பின்பற்றி நடக்கவும் வழிகாட்டினார். இப்பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றியவர்களில் திரு.கு.ரவிச்சந்திரன் அவர்களே அதிகூடிய கல்வித்தகைமையைப் பெற்றிருந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

இன்று இப்பாடசாலை கல்வியில் மட்டுமன்றி இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் சிறந்து விளங்குவதைக் கேள்வியுற்று மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். மிகச் சமீப காலங்களில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர் சித்தியடைந்தமையும், ஒரு மாணவன் 8AC சித்திகளைப் பெற்றமையும் எனக்கு அளவில்லா ஆனந்தத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் வருடாவருடம் இல்லமெய்வல்லுநர் போட்டிகள், பரிசளிப்பு விழாக்கள், நவராத்திரி, தைப்பொங்கல் விழாக்கள், கோட்டமட்ட விஞ்ஞான, கணிதப் போட்டிகள், மெய்வல்லுநர் நிகழ்வுகள் என்பவற்றை மிகச் சிறப்பாக நடாத்தி வருகின்றமை போற்றுதற்குரியதாகும். இப்பாடசாலையின் பழைய மாணவர்கள் பலர் பல்கலைக் கழகங்களிலும், கல்வியற்கல்லூரிகளிலும் கல்விபயின்று விரிவுரையாளர், அதிபர், ஆசிரியர் இன்னும் பல இன்னோரன்ன பதவிகளிலும் பணிபுரிந்து இப்பாடசாலைக்குப் பெருமை சேர்க்கின்றனர்.

இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக தமது ஒத்துழைப்பையும் உதவிகளையும் வழங்கி வரும் பெற்றோர், பழையமாணவர், நலன்விரும்பிகள் அனைவரையும் இச்சந்தர்ப்பத்தில் நான் நினைவு கூருகின்றேன். எல்லாவற்றுக்கும் மேலாக பாடசாலையுடன் அருகிலிருந்து அருளாட்சி புரிந்து கொண்டிருக்கும் எல்லாம் வல்ல புவனேஸ்வரி அம்பாளின் திருவருட்கடாட்சம் பாடசாலை மேலும் மேலும் வளர்ந்து புதுப்பொலிவு பெற்று எதிர்காலத்தில் ஒரு பெரிய கல்லூரியாக வளர இட்டுச்செல்லும் என்பதில் சந்தேகமில்லை.

"பாடசாலை என்பது சமூகத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி" என்ற ஜேர்மன் அறிஞரின் கூற்றுப்படி பாடசாலைச் சமூகம் விளங்குவதைக் கொண்டு இப்பாடசாலையின் தரத்தினை மதிப்பிடலாம். இச்சந்தர்ப்பத்தில் என்னுடன் கடமையாற்றிய அதிபர்கள், அசிரியர்கள் அவர்கள் எனக்குத்தந்த ஆதரவு, ஒத்துழைப்பு என்பவற்றை நன்றியுடன் நினைவு கூருவதுடன் என்னிடம் கல்வி கற்ற அன்பான மாணவர்களையும் நினைவு கூருகின்றேன். நான் அடிக்கடி மாணவர்க்குக் கூறிய "அறிவுடையார் எல்லாம் முடையார் அறிவிலார் என்னுடைய ரேனும் இலர்"

என்னும் குறளைக்கூறி மாணவச் செல்வங்கள் தமது கல்வி அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்று வேண்டுவதுடன் இப்பாடசாலை மேன்மேலும் வளர்ச்சியடைந்து ஒரு பெரிய கல்லூரியாகத்திகழ வேண்டுமென்று வாழ்த்துவதுடன் எல்லாம் வல்ல புவனேஸ்வரி அம்பாளையும் பிரார்த்திக்கின்றேன்.

**திரு.சு.நடராசா,**
**ஓய்வு பெற்ற ஆசிரியர்.**

# ஸ்ரீ விஷ்ணு வித்தியாலய வைர விழா வாழ்த்து

இவ் வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். எனது வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு அத்திவாரம் இட்டது ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம். அதன் ஆசான்களான உயர்திரு கு.முருகேசு வாத்தியார் அவருக்கு உறுதுணையாக இருந்த இளையகுட்டி வாத்தியார், சின்னப்பு வாத்தியார், இராமமூர்த்தி வாத்தியார், சீனித்தம்பி வாத்தியார், முருகுப்பிள்ளை வாத்தியார், கதிரவேல் வாத்தியார், ஐயம்பிள்ளை வாத்தியார் கந்தசாமி வாத்தியார், இன்னும் பல ஆசான்கள் எனது வாழ்க்கையை பல மடங்கு உயர்த்தினார்கள். எனது பிள்ளைகள் சர்வதேச ரீதியாக முன்னேறித் திகழ இவ்வித்தியாலயம் உதவியது என்பதில் ஐயமில்லை.

இந்த வித்தியாலயம் இயற்கையாக கடல் நீர் ஏரியால் சூழப்பட்டும், அழகிய பச்சைப் பசேலென்ற மைதானத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது. பிள்ளைகள் காலையில் தேவாரம் பாடி படிப்பைத் தொடர இறையருள் புரியும் ஆலயமும் அமைந்துள்ளது.

இந்த வாழ்த்துச் செய்தியை அனுப்ப வாய்ப்பளித்த வைரவிழா ஏற்பாட்டாளருக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு.ம.சுப்பிரமணியம்**
**Auckland - New zealand**

# கிராமத்தின் ஒளி விளக்கு

ஒருவன் அடையக்கூடிய பேறுகளில் பெரும் பேறு கல்விச் செல்வமே. இதனால் தான் கல்வியே "கருத்தனம்" என்று எம்முன்னோர் கூறிச் சென்றார்கள். இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன்னர் "கண்ணுடையவர் என்போர் கற்றோர்" என கல்வியின் பெருமையையும் கல்லாமையின் சிறுமையையும் வள்ளுவர் அழுத்திக் கூறியுள்ளார். கல்வியின் பெருமையை நம் முன்னோர் இவ்வளவு சிலாகித்துக் கூறினாலும் பரந்தளவில் கல்வி பெறும் வாய்ப்பை ஏற்படுத்துவதில் வெற்றி காணவில்லையென்றே கூறவேண்டும். ஐரோப்பியர்களின் வருகையும் கல்வி புகட்டுவதில் அவர்கள் காட்டிய முனைப்பும், சிறுவர்களின் முயற்சிக்கு எதிராகச் சுதேச அமைப்புகள் காட்டிய எதிர் முயற்சியுமாக கிராமங்கள் தோறும் பாடசாலைகள் நிறுவப்பட்டன. அத்தகையதொரு வகையில் ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயமும் தோற்றம் பெற்றதெனலாம்.

இவ்வாறாகத் தோன்றிய இப்பாடசாலை அடிநிலை மக்கள் பலரின் உயர்விற்கு ஏணியாக அமைந்தது என்பது பெருமைக்குரிய விடயமே. இப்பாடசாலையில் படித்தபலர் விரிவுரையாளர் களாகவும், மருத்துவர், பொறியியலாளர் எனப் பல துறைகளிலும் பிரகாசித்துக் கொண்டிருக் கின்றனர்.

கல்விப் பெறுபேறுகளைப் பொறுத்தும் நகரப்புறப் பாடசாலைகளுக்கு ஈடாக சிறந்த பெறு பேறுகளை ஈட்டிவருவது குறிப்பிடத்தக்கது. நான் கோட்டக்கல்வி அலுவலராக இருந்த காலத்தில் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவர்களையும் கௌரவிக்கும் விழாவில் கலந்து கொண்டமை பசுமரத்தாணிபோல் மனதில் பதிந்துள்ளது. ஆங்கிலம் தவிர்ந்த அனைத்து பாடங்களிலும் "A" தரச் சித்தி பெற்ற மாணவனும் பூரணமாக O/L சித்தியடைந்த மாணவர்களையும் பாராட்டிய அவ் விழா பாடசாலையின் தரத்தைப் பறைசாற்றுகின்றது.

இங்கு கடமையாற்றிய, கடமையாற்றிக் கொண்டிருக்கின்ற அதிபர் ஆசிரியர்களின் தளராத முயற்சி பாராட்டுதற்குரியது. தற்போதைய அதிபர் திரு.க.செந்தில்வடிவேலு அவரோடிணைந்த ஆசிரியர்களும் இப்பாடசாலையின் பெயரை உயர்த்துவதில் காட்டிவரும் ஆர்வத்தையும் பாராட்டு வதில் மகிழ்ச்சியடைகிறேன். "தாரமும் குருவும் தலைவிதிவசம்" என்பார்கள். இம் முதுமொழி ஒரு மாணவனின் ஏற்றம் அவனுக்கு வாய்த்த ஆசிரியர்களின் சிறப்பிலேயே தங்கியிருக்கின்றது என்பதை அழுத்திக் கூறுகின்றது.

அதற்கு இலக்கணமான பல ஆசிரியர்கள் இன்று இப் பாடசாலையில் பணியாற்றிவருவது பெருமைக்குரியது. அவர்கள் பணி சிறக்க வாழ்த்துகிறேன்.

கல்வித்துறையில் மட்டுமல்ல விளையாட்டுத்துறையிலும் ஏனைய இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் கோட்ட, வலயமட்டங்களில் தனது திறனை வெளிக்காட்டியுள்ள இப்பாட சாலை வைரவிழாவைக் கொண்டாடுகின்றது. "நடுவூரில் நல்லமரம் பழுத்தது போல்" ஆவரங் கால் கிழக்கு மக்களின் உயர்வில் பங்கெடுக்கும் இப்பாடசாலை மென்மேலும் வளர்ந்து கிராமத்தை வளர்க்க, வளம்படுத்த எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வே.பாலசுப்பிரமணியம்,**
**ஓய்வு நிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர்.**

# வாழ்த்துச்செய்தி

யா/புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் ஆனது வளர்ச்சிப்பாதையில் தடம் பதித்து இன்று அகவைஅறுபதினை பூர்த்திசெய்து மணிவிழாக் கொண்டாடும் இவ்வேளையில் இப்பாடசாலையின் வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் நான் பெருமைஅடைகின்றேன்.

வலிகிழக்கு பிரதேசத்தில் 60 ஆண்டு வரலாற்றை கொண்டாட இப்பாடசாலையை இவ்வூர் மக்கள் உரியநேரத்தில் சிறப்பான முடிவெடுத்து இவ்விடத்தில் அமைத்து முன்னைய கால தற்கால நிறுவனங்களின் ஆதரவுடன் ஒரேகுடையின் கீழ் ஒற்றுமையாக சேர்ந்து இன்று வரை இப்பாடசாலையை வளர்த்து வந்துள்ளார்கள் இப்பாடசாலைச் சமூகத்தினர்.

முன்பு பணியாற்றிய சிறந்த ஆளுமைமிக்க தலைமைத்துவ அதிபர்களின் கீழ் இங்கு பணியாற்றிய ஆசிரியர்கள் சிறப்பான சேவையை வழங்கியுள்ளார்கள். இவ்வாறான சிறந்த சேவையை இன்றைய அதிபரும், ஆசிரியர்களும் தொடர்ந்த வண்ணம் உள்ளார்கள். இப்பாடசாலையில் பணியாற்றி வருகின்ற தூரதேசத்தை சேர்ந்தவர்கள் முதலில் விருப்பற்று தமது பணியை தொடர்வார்கள் நாளடைவில் இப்பாடசாலையுடன் தம்மை இணைத்து உணர்வு பூர்வமாக நீண்டகாலம் சேவை புரிவார்கள். இன் நடவடிக்கையானது எனது வரலாற்றுக் காலத்தில் கண்டநிதர்சனம். ஏனெனில் இப்பாடசாலையில் சேவைபுரிந்தவர் பலர் வளர்ந்து உயர்ந்த நிலையில் உள்ளதை காணக்கூடியதாக உள்ளது.

என்னுடைய சேவைக்காலம் 2000.01.03 தொடக்கம் அமைந்ததாகவும் 2015.04.21 நிறைவிற்கும் உருத்துடையதாகவும் அமைந்துள்ளது. கடந்தகாலங்களில் கல்வி, சமயம், விளையாட்டு, கலை, ஒழுக்கம் என்பவற்றை ஏனைய நகரப்பாடசாலைகளுடன் போட்டிபோடும் அளவிற்குநிகராகஎமதுகிராமியபாடசாலையும் தனது கிராமிய மனங்களை மலரவிட்டு மிளிர்ந்து நிற்கின்றது.

இப்பாடசாலையின் அமைவிடமானது தொடர் வெளிப்பிரதேசம், விவசாயநில அடைப்பு, புவனேஸ்வரி அம்பாளின் ஆன்மீக ஆளுகை சாதனைகள் நிலைநாட்டிய விளையாட்டு மைதானம் , இறம்மியமான தோற்றம் , கவின்நிலைமாற்றங்கள் மூலம் அழகாட்சிபுரிகின்றது.

என்னுடைய ஆசிரிய சேவைக்காலத்தில் இரண்டு மாணவர்கள் 2001ம் ஆண்டு புலமைப் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளைப் பெற்றவர்களான யோ.சயந்தன், மு.பார்த்தீபா என்பவரும் தொடந்து பி.சாலமன் 2011 என்பவரும் சித்தியடைந்துள்ளார்கள். 2016ம் ஆண்டில் கா.பொ.தபரீட்சையில் ந.கவிஸ்னா என்பவர் 8A,C சித்திபெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்கள்.

இப்பாடசாலையில் நான் நீண்டகாலம் ஆசிரியராகவும் 2014.09.04 - 2015.09.04 வரை அதிபராகவும் இப்பாடசாலையில் எனதுபணியை மேற்கொள்ள இப்பாடசாலைசமூகத் தினர் உறுதுணை புரிந்துள்ளார்கள். என்பதுடன் இப்பாடசாலையை தொடர்ந்து இன்றைய நகரமயமாக்கலில் இருந்துமீட்டெடுத்து வளர்ச்சிப்பாதையில் விட்டுச் செல்ல அனைவரும் ஒரு மித்து இயங்கவேண்டும் எனக்கூறிக் கொண்டு இப்பாடசாலையானது தனது பணியை தொடர்ந் தும் நேர்த்தியாகமேற்கொள்ள இன் நன்னாளில் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி மனமார வாழ்த்துகின்றேன்.

**க.ரவீந்திரன்**
**முன்னாள் அதிபர்**
**யா/புத்தகலட்டி ஸ்ரீ விஸ்ணு வித்தியாலயம்**

# பழையமாணவர் சங்கச் செயளாலரின் வாழ்த்துச்செய்தி

இயற்கை எழில் கொஞ்சும் ஆவரங்கால் கிழக்கு கிராமத்தின் அழகிற்கு எல்லையே இல்லை. இவ்வழகிய சூழலில் அமைந்திருப்பதுதான் எமது ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம். 1957ம் ஆண்டு தோற்றம் பெற்ற எமது பாடாசாலை இன்று 60ஆவது அகவையில் கால் பதித்து நிற்பதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

கல்வி, கலை, விளையாட்டு எனப் பல்துறைகளிலும் ஆரம்பம் தொட்டே சிறப்பாக பணியாற்றிவரும் இப்பாடசாலை பல கல்விமான்களையும் சிறந்த கலைஞர்களையும், சிறந்த விளையாட்டு வீரர்களையும் இப்பிரதேசத்திற்கு தருவித்து வருகின்றது. அந்தவகையில் கடந்த வருடமும் கா.பொ.தசாதாரணப் பரீட்சையில் ஒருமாணவன் 8A,C சித்திபெற்றிருப்பது பாடசாலை யின் தொடர் சேவைக்கு சிறந்த உதாரணமாக விளங்குகின்து.

இதனடிப்படையில் இக்கிராமத்தின் மகிமைக்கும் சிறப்பிற்கும் காரணமாக இப்பாட சாலை எழுந்து நிற்கின்றது. இதுவே இன்று எமது மக்கள் மனதிலே நிலைநிறுத்தப்பட வேண்டிய விடயமாகும். புத்தூர் பிரதேசத்தின் கல்விப் பாரம்பரியத்திற்கு அடிகோலியது மிசனறிப் பாடசாலைகளே ஆயினும் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியின் தோற்றத்துடன் அது எழுச்சி பெறுகிறது. என்றால் மிகையாகாது. அந்தவகையில் எமது பாடசாலையின் தோற்றமும் இப்புனித பணிக்கு இலக்கணமாக திகழ்ந்து நிற்கிறது. என்று சொல்வதே எல்லாவற்றிற்கும் மேலானது.

வாழ்க ! வளர்க! நம் பாடசாலை

**திரு.மு.ராஜவரோதயம்**
**செயலாளர்,**
**பழையமாணவர் சங்கம்.**

# வாழ்த்துச்செய்தி

யா/புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் 60 ஆண்டுகளை தன்னகத்தே சுமந்து பாரிய மாறுதலுக்கும் வாழ்வியலுக்கும் உருத்துடையதாக்கி இருக்கிறது. இந்த தாயின் அரவணைப்பில் எத்தனையோ பிள்ளைகள் வளர்ந்து சிறந்த சமூக நற்பிரஜைகளாக மிளிர் வதை நான் கண்டுள்ளேன்.

அண்மையில் இந்த அன்னையின் வளர்ப்பில் ந.கவிஸ்னா என்ற மாணவன் 8AC அதிஉயர் பெறுபேறுகளை கா.பொ.த .சாதாரண தரத்தில் பெற்று சாதனை நிலைநாட்டியுள்ளார். அதே மாணவன் சமூக விஞ்ஞான போட்டியில் தேசியமட்டம் வரை சென்று சாதனை படைத்துள்ளான்.

செல்வி க.நந்திகா உயரம் பாய்தலில் தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளார். இவைகள் ஸ்ரீ விஷ்ணு அன்னையின் சிறிய சேவைக்கும் சின்ன வழிகாட்டலுக்கும் எடுத்துக்காட்டாகும்.

இவ்வித்தியாலயம் வையகம் உள்ளவரை வளமான மாணவர்களை வழிப்படுத்தி வான்புகழ் எட்ட விஷ்ணுவின் நாமம் நீடித்து நிலைபெற வாழ்த்தி மகிழ்கின்றேன்

நன்றி

**திரு.பா.பாலகுமார்**

# அதிபரின் உள்ளத்தில் இருந்து

எழில் மிகு புத்தூர் வாழ் மூதாதையர்களின் முற்போக்கான சிந்தனையின் காரணமாக அப்பிரதேச மக்களின் அறிவுக்கு தீனி போடும் வகையில் தேனீக்கள் சேர்ந்தமைத்த தேன் கூடு போன்று ஊரவர்களின் கூட்டு முயற்சியினாலும், உழைப்பினாலும், பொருள், பண உதவிகளாலும் உருவாக்கப்பட்ட கற்றாய்ந்தொழுகு என்ற மகுட வாக்கியத்தைக் கொண்டொழுகுகின்ற யா/ புத்தகலட்டி ஸ்ரீ விஸ்ணு வித்தியாலயம் வைரவிழாக் காணுவதையிட்டு வாழ்த்துவதில் பேருவகை அடைகின்றேன்.

இப்பாடசாலையை உருவாக்குவதற்கு முன்னின்று உழைத்த சகல நல் உள்ளம் கொண்ட ஊர்ப் பெரியார்களையும் இந்நாளில் நன்றியுடன் இப்பாடசாலைச் சமூகம் நினைவு கூருகின்றது. அத்துடன் அவர்களின் முற்போக்குச் சிந்தனைகள், விடாமுயற்சி ஒற்றுமையுணர்வு என்பவை மெய் சிலிர்க்க வைக்கின்றது. இவ்வாறு கடும் முயற்சியினால் உருவாக்கப்பட்ட இப் பாடசாலையானது தொடர்ந்தும் வளர்ச்சிப் போக்கையே காட்டி நிற்கின்றது.

இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்று உழைத்த முன்னைய அதிபர்கள். ஆசிரியர்கள் ஆகியோரின் அளப்பரிய உன்னதமான சேவைகளைப் பாராட்டுவதில் பாடசாலைச் சமுகம் பேருவகை அடைகின்றது. தொடர்ந்தும் இப் பாடசாலை கல்வி இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் எல்லாவற்றிலும் முன்னிலையில் நிற்கின்றது. இந்த வருடம் க.பொ.த சாதாரண தரத்தில் 8 A,C பெறுபேற்றை ஈட்டி பாடசாலைக்குப் பெருமை சேர்த்துத் தந்த மாணவன் செல்வன் ந.கவிஸ்னாவைப் பாராட்டுவதுடன் சித்தியெய்திய ஏனைய மாணவச் செல்வங்களையும் இந்நாளில் பாராட்டி வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றேன். மேலும் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளான விளையாட்டு நிகழ்வுகள் .தமிழ்த் தின நிகழ்வுகள் .ஆங்கில தின நிகழ்வுகள் ஆகியவற்றில் வெற்றிகளை ஈட்டித் தந்த அனைத்து மாணவச் செல்வங்களையும் குறிப்பாக உயரம் பாய்தல் நிகழ்வில் தேசியமட்டத்திற்குத் தெரிவான செல்வி. க.நந்திகா அவர்களையும் இந் நன்னாளில் பாராட்டி வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.
மனிதனது வாழ்வில் இரு இடங்கள் மிகவும் முக்கியமானவை. ஒன்று அவனுக்கு உயிர் கொடுத்த அன்னையவள் கருவறை. மற்றொன்று உயிரினும் மேலான அறிவைப் புகட்டுகின்ற வகுப்பறை (பாடசாலை). பெற்ற அன்னைக்கு வழங்கும் அதே மதிப்பினை உயிரினும் மேலான கல்வியைப் புகட்டிய பாடசாலைக்கும் வழங்க வேண்டும்.

"மீண்டும் பள்ளிக்குப் போகலாம் நம்மை நாம் அங்கே காணலாம்" என்ற கவி வரிக் கிணங்க வைரவிழா நிகழ்வுகளுக்கு பல விதங்களில் தோளோடு தோள் நின்று உழைத்த பழைய மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன்விரும்பிகள், ஆசிரியர்கள் அனைவருக்கும் இந்நாளில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் எமது பாடசாலையின் வளர்ச் சிக்குத் தொடர்ந்து உங்களின் பங்களிப்புத் தொடர வேண்டும் என வேண்டிக் கொள்வதோடு பாடசாலை மேன் மேலும் வளர புவனேஸ்வரித் தாயின் அருட்கடாட்சம் வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

# இதழாசிரியரின் இதயத்திலிருந்து.......

"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத்து ஊறும் அறிவு"

அருள் நிறைந்த புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தின் அருகே இயற்கை எழில் அழகுடன் துலங்கிக் கொண்டிருக்கும் விஷ்ணு அன்னையின் அறுபதாவது அகவை நிறைவு, மலராசிரியர் என்ற வகையில் பெருமகிழ்வு கொள்கின்றேன். எமது கல்லூரியின் வெற்றிப்பயணத்தின் வெளிப்பாடே இம் மலராகும் என எண்ணுகின்றேன்.

மேலும் பல வரலாற்று சுவடுகளையும், வரலாற்றுப் பதிவுகளையும் பலரிடமிருந்து தத்துவ ரீதியாக ஆராய்ந்து பெற்ற அரிய சொத்துக்களை அடுத்த சந்ததியினருக்கு சேர்க்கும் ஆவணக்காப்பாகவும் இம்மலர் வெளியீடு அமைகின்றது.

இவ்விழா சிறப்புறவும் இம்மலர்வெளியீடு சிறக்கவும் ஆர்வத்துடன் அயராது முன்னின்று உழைத்து பெறுமதிமிக்க ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கிய அதிபர் திரு.க.செந்தில்வடிவேலு அவர்களுக்கு வித்தியாலய சமூகத்தின் சார்பில் மனம் நிறைந்த நன்றிகள் பற்பல.

இம்மலர் சிறப்புற அமைய ஆசிச்செய்தி வழங்கிய மதகுருமார்களுக்கும், வாழ்த்துச் செய்தி வழங்கிய பெருந்தகைகளுக்கும் மலரைச் சிறப்பித்த பெரியோர்களுக்கும் ஆக்கங்களைத் தந்துதவிய அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழையமாணவர்களுக்கும் ஆக்கங்களை சீர்படுத்த உதவிய மலர்க்குழுவினர்க்கும் உளம் கனிந்த நன்றிகள். அகவை அறுபது அடைந்த கல்லூரித்தாயை போற்றுவோம். எமது வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு வித்திட்ட இது வரையும் சேவை புரிந்த அதிபர்கள், பிரதிஅதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் நினைவு கூருதல் பொருத்தமான ஒன்றாகும். மலர் சிறப்பாக வெளிவர கணனியில் எழுத்துருவாக்க உதவியோர் மற்றும் மலர் உருவாக்கத்திற்கு நிதியுதவி மற்றும் பல வகைகளிலும் உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் மனம் நிறைந்த நன்றிகள், அத்துடன் முதற்பிரதி, சிறப்புப் பிரதிகளைப் பெற்று விழாவைச் சிறப்பித்த பெரியோர்களுக்கும் மலரை அச்சேற்ற உதவிய மதி கலர்ஸ் பதிப்பகத்தாருக்கும் நன்றிகள் உரித்தாகட்டும்.

அறுபதாவது ஆண்டு நிறைவு மலர் சிறப்பாக வெளிவர உதவிக்கரம் நீட்டிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் மனம் நிறைந்த நன்றிகள்.

**திருமதி.பத்மினி தேவி சகலகலாநிதி**

# யாழ்/புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலய வளர்ச்சிக்கு உழைத்த அதிபர்கள்


| | | | |
|---|---|---|---|
| 1. அமரர்.க.முருகேசு | (1957 | - | 1967) |
| 2. அமரர்.வ.வீரகத்தி | (1968 | - | 1974) |
| 3. அமரர்.சு.சிவசிதம்பரம் | (1975 | - | 1978) |
| 4. அமரர்.சி.பொன்னம்பலம் | (1978 | - | 1979) |
| 5. அமரர்.பி.அந்தோனிப்பிள்ளை | (1980 | - | 1980) |
| 6. அமரர்.நா.ஆ.நாகராசா | (1981 | - | 1983) |
| 7. அமரர்.சோ.பாலசிங்கம் | (1983 | - | 1986) |
| 8. அமரர்.ரி.மணிசுந்தரம் | (1986 | - | 1996) |
| 9. அமரர்.நா.சிவஞானம் | (1997 | - | 2006) |
| 10.திரு.கு.ரவிச்சந்திரன் | (2007 | - | 2014) |
| 11. திரு.க.ரவீந்திரன் | (2014 | - | 2015) |
| 12.திரு.க.செந்தில்வடிவேலு | (2015 | - | இன்றுவரை) |




**பாடசாலை முதல்வர்**

**திரு.க.செந்தில்வடிவேலு** - SLPS2 B,SC,M.SC,PGDE

# பாடசாலை பிரதி அதிபர்கள்-2017



**திரு.சி.ஸ்ரீஇராகவன்** Spe.Trd.Hinduism - SLTS2 - I



**திரு.கு.வசந்தமாறன்** B.Sc,PGDE - SLEAS 3, SLPS-3



**பாடசாலை பிரதி முதல்வர்-2018**

**திருமதி.ப.சகலகலாநிதி** B.A Dip in Edu- SLTS 1



**பகுதித் தலைவர் ஆரம்பப்பிரிவு**

**திரு.பா.சத்தியநாதன்** Trd.Pri,B.Ed - SLTS 2- I



**பகுதித்தலைவர் இடைநிலைப்பிரிவு**

**திரு.ப.கஜேந்திரன்** Dip in Teach(Sci) - SLTS 2 -II

# பாடசாலையின் சுருக்க வரலாறு

அழகும் பசுமையும் நிறைந்த புதுவையூரில் நெய்தலும் மருதமும் கலந்து நிறைந்த ஆவரங்கால் கிழக்கில் புவனேஸ்வரி அம்மன் அருளாட்சி வழங்கிக் கொண்டிருக்க ஆலயத்தின் அருகே அமைந்துள்ள அறிவாலயமாக யா/ புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயம் அமைந்து விளங்குகின்றது. இவ்வித்தியாலயம் இவ்வாண்டில் தனது வைரவிழாவைக் கொண்டாடுகின்றது.

இப்பாடசாலையின் ஆரம்பகால வரலாற்றை நோக்கும் போது 1957ஆம் ஆண்டளவில் இப்பிரதேசத்தின் சிறார்களின் கல்வி கற்கும் ஆர்வம் காரணமாக இப்பிரதேசத்தில் வாழ்ந்த பெற்றோர்களும் பெரியோர்களும் முனைப்புடன் செயற்பட்டு ஒரு பாடசாலை நிறுவதற்கு ஆர்வம் காட்டினர். இதன் பயனாக வடமராட்சியில் இருந்த இக்கிராமத்துடன் தொடர்புபட்ட கல்விமான்களை நாடி இருந்தனர். அந்த வகையில் அல்வாயூர் கவிஞர் மு. செல்லையா ஆசிரியரும் கரவெட்டியூர் இரத்தினம் ஆசிரியரும், சைவப் புலவர் வல்லிபுரம் ஆசிரியரும், க.முருகேசு ஆசிரியரும் இன்னும் சிலரும் அவர்களுடன் வரவழைக்கப்பட்டு இப்பகுதியில் ஒரு பாடசாலையை நிறுவுவதற்குத் தீர்மானித்தனர்.

ஆரம்ப காலத்தில் இப்பாடசாலை இயங்குவதற்கு உறுதுணையாக இப்பகுதியில் இயங்கி வந்த சர்வோதய கலாமன்றம் குறிப்பிடத்தக்களவு பங்களிப்பை ஆற்றியுள்ளதாகவும் அறியமுடிகிறது.

இதன் தலைவராக அமரர் சி.அரியகுட்டி அவர்களும் செயலாளராக திரு.கி.கிருஷ்ண பிள்ளை (ஓய்வு நிலை அரச நிர்வாக உத்தியோகத்தர் ) அவர்களும் பொருளாளராக அமரர் க.செல்லர் அவர்களும் இன்னும் பலர் நிர்வாக உறுப்பினர்களாக இருந்தும் செயற்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஊர்ப்பெரியவர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட காணியில் 75 அடி நீளமான ஓலைக் கொட்டகையில் 1957ஆம் ஆண்டு விஜய தசமி அன்று இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இப்பாடசாலையில் தலைமை ஆசிரியர் பதவி ஏற்பதற்கு எவரும் முன் வராத காரணத்தால் இரத்தினம் ஆசிரியர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க வதிரி தேவரையாளியில் ஆசிரியராகப் பணிபுரிந்து வேதனம் பெற்று வந்த அல்வாயூர் திரு.க.முருகேசு ஆசிரியர் அவர்கள் அங்கிருந்து சம்பளமற்ற விடுமுறை பெற்றுக் கொண்டு எவ்வித பிரதி உபகாரமோ சம்பளமோ இன்றி "மக்கள் சேவை மகேசன் சேவை என்பதற்கிணங்க" பாடசாலைப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டார். குடும்பப் பொறுப்பு மிகுந்த இவர் சம்பளமின்றி சேவையாற்றியமை மிக உன்னத சேவையாக மக்களிடையே இன்றும் பேசப்பட்டு வருகின்றது.

மேலும் இவர் பாடசாலையின் முன்னேற்றத்திற்காக பல வழிகளிலும் செயற்பட்டு வந்துள்ளார். மாணவர்களை பாடசாலைக்கு வரவழைப்பதில் இவரின் பங்கு மிக முக்கியமானது. இவரிடம் கல்வி கற்ற பலர் உயர்பதவிகளை வகித்துள்ளமை பற்றியும் அறியக் கூடியதாக உள்ளது.

ஆரம்பத்தில் அதிபருடன் பத்து ஆசிரியர்கள் பணிபுரிந்ததாகவும் புத்தூர் வே.இளையகுட்டி, ஆவரங்கால் சி.முருகுப்பிள்ளை, புத்தூர் செல்வி கண்மணி, கரவெட்டி மு.கதிரவேலு (மனோன் மணி). கரவெட்டி க.கிருஷ்ணபிள்ளை, யாழ்ப்பாணம் திருமதி. பாக்கியம். கம்பர்மலை செல்வி. நா.வள்ளிப்பிள்ளை போன்றோர் கற்பித்ததாகவும் ஆரம்ப நாளன்று 15 மாணவர்கள் சேர்க்கப்பட்டதாகவும் மிக வேகமான வளர்ச்சிப் பாதையை நோக்கி சென்று கொண்டிருந்த இப்பாடசாலையில் 1958ம் ஆண்டு காலப் பகுதில் 200 மாணவர்கள் வரை சேர்ந்து க.பொ.த (சா.த) தரம் வரை இயங்கியது எனலாம். மேலும் காலங்கள் செல்லச் செல்ல மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து 400 மாணவர்கள் வரை கல்வி கற்றதாகவும் அறிய முடிகிறது. இப் பகுதியை சேர்ந்த மாணவர்கள் மட்டுமல்லாது அச்சுவேலி தெற்கு, ஆவரங்கால், நவக்கிரி புத்தூர் மேற்கு போன்ற பகுதிகளிலிருந்தும் பல மாணவர்கள் வந்து கல்வி கற்றுள்ளார்கள்.

இப்பாடசாலை கல்வியில் மட்டுமல்ல இணைபாடவிதான செயற்பாடுகளிலும் சிறப் படைந்து விளங்கியது. விளையாட்டுக்களிலும் மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர். நாடகம், நடனம் போன்ற கலைத்துறைகளிலும் மாணவர்களின் பங்களிப்பு சிறந்து விளங்கியுள்ளது எனலாம். இப்பாடசாலையில் கற்ற பலர் கணக்காளர், கணக்காய்வாளர், பொறியியலாளர், மருத்துவர்கள், விரிவுரையாளர், அதிபர்கள், ஆசிரியர்கள் என பல்வேறு பதவிகளை வகித்து வருவது குறிப்பிடத்தக்கது.

இன்று இப்பாடசாலை பெருமளவு பௌதீக வளர்ச்சிகண்டு வருகிறது. அந்த வகையில் மாடிக்கட்டடம் முக்கிய பங்கு கொண்டுள்ளது. தற்போது மாணவர்கள் எண்ணிக்கை குறைவடைந்தாலும் மாணவர் கல்வி, விளையாட்டு, கலைநிகழ்வுகளில் சிறந்து விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. மாணவர் எண்ணிக்கை அதிகரிப்பதில் ஊர் மக்களின் பங்களிப்பை பாடசாலைச் சமூகம் எதிர்பார்த்து நிற்கின்றது.




பாடசாலை முகாமைத்துவக் குழு



பாடசாலையின் மாணவ முதல்வர்கள்

பாடசாலையைப் பொறுப்பேற்ற முதலாவது அதிபர்

அமரர் க. முருகேசு



# மன்றங்கள்

மாணவர்களிடமே இலைமறைகாயாகப் புதைந்து கிடக்கும் பலவகைப்பட்ட திறன்களை வெளிக்கொண்டுவரும் வகையில் அமைக்கப் பட்டது பாடத்துறை சார்ந்த மன்றங்களாகும்.

## இந்துமாமன்றம்

இந்துமாமன்றத்தின் மூலம் சைவப்பாரம்பரிய ஒழுக்கநெறிகள் சைவவிழுமியப் பண்புகள் என் பன வளர்க்கப்பட்டு வருவதுடன் வெள்ளிக் கிழமை தோறும் பஞ்சபுராணம், சிவபுராணம் என்பன பண்ணுடன் இசைக்கப்பட்டு வருவதுடன் நாயன்மார்களின் குருபூசைகளும் கொண்டாடப் பட்டு வருகின்றது. நவராத்திரி தினங்களில் மாணவர்களிடையே பண்ணிசை, மாலைகட்டு தல், தோரணம் பின்னுதல் போன்ற போட்டிகள் நடாத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டு வருகின்றது. இம் மன்றத்தின் வழிகாட்டலுடன் பேச்சுப் போட்டி, பண்ணிசைப்போட்டி. தோரணம் பின்னுதல் போன்ற நிகழ்வுகளில் மாணவர்கள் கோட்டம், வலய மட்டங்களில் பங்கு பற்றி வெற்றியீட்டியமையும் குறிப்பிடத்தக்கது.

## தமிழ்மன்றம்

இது இரண்டு பிரிவாக தரம் 01-05 , 06-11வரை பிரிக்கப்பட்டு மன்ற நிகழ்வுகள் நடாத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மாணவர்க்கும் சந்தர்ப் பம் அளிக்கும் வகையில் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டு பொறுப்பாசிரியர்களால் நடை முறைப்படுத்தப்படுகின்றன. வருடந்தோறும் தமிழ் தினப்போட்டி, கையெழுத்து சஞ்சிகைப் போட்டிகள், கட்டுரைப்போட்டிகள், கவிதை, நாடகம், பேச்சுப் போட்டிகளிலும் மாணவர்கள் கோட்டம், வலயம் ஆகிய மட்டங்களில் பங்கு பற்றி வெற்றி பெற்று வருகின்றனர்.

## சுகாதார மன்றம்

மாணவர்களிடையே சுயசுத்தம், புறச்சுத்தம் என்பன பேணப்பட வேண்டியதன் அவசியம் இம் மன்றத்தின் மூலம் வலியுறுத்தப்பட்டு வருகின் றது. டெங்கு ஒழிப்பு சம்பந்தமாக மாணவர் களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகை யில் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றது. அவ்வப்போது சுகாதாரப் பரிசோதகர் கள் வரவழைக்கப்பட்டு மாணவர்கள் பரிசோதிக் கப்படுவதுடன் பொருத்தமான சிகிச்சை முறை களும் வைத்திய ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

## கணித, விஞ்ஞான மன்றம்

இம்மன்றம் மாணவர் மத்தியில் பல தரப்பட்ட கணிதம், விஞ்ஞானம்சார் போட்டிகளை நடாத்தி கணிதம், விஞ்ஞானத்தில் மாணவர்களை மேம் பாடடைய உழைத்து வருகின்றது. இம் மன்றத்தின் வினைத்திறனான செயற்பாட்டினால் மாணவர்கள் கோட்டம், வலயப்போட்டிகளில் வெற்றி பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சமூக விஞ்ஞான மன்றம்

பாடம் சம்பந்தமான அறிவை வளர்த்துக் கொள்வதோடு மாணவர்மத்தியில் பொது அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் மாணவர் களிடையே வினாடிவினாப் போட்டிகளை நடாத்தி மாணவர்களை கல்வியில் ஊக்கப் படுத்தி வருகிறது. இம்மன்றத்தின் வழிகாட்ட லால்மாணவர்கள் கோட்ட, வலயமட்டங்களில் வெற்றி பெறுகின்றனர்.

## கவின்கலை மன்றம்

சங்கீதம். நடனம் ஆகிய கலைத்துறை சார்ந்த தரம் ஆறுக்கு மேற்பட்ட மாணவர்கள் இம் மன்றத்தில் அங்கம் வகிக்கின்றனர். கல்வித் திணைக்களம் மற்றும் பொது அமைப்புக்கள் என்பவற்றால் நடாத்தப்படும் கவின் கலைசார் போட்டிகளில் பங்கு பற்றி பரிசில்களை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆங்கில மன்றம்

மாணவர்களுக்கு ஆங்கிலமொழியில் பயிற்சி அளிப்பதே இம்மன்றத்தின் நோக்கமா கும். பாடசாலை மட்டத்தில் ஆங்கில தினப் போட்டிகள் நடாத்தப்பட்டு பாடசாலை மட்டத் தில் தெரிவு செய்யப்படும் மாணவர்களை கோட்ட, வலயமட்டங்களில் பங்கு பற்றச் செய்வ தற்கான பயிற்சிகளை வழங்கி வருகின்றது.

## கணனி மன்றம்

மாணவர்களுக்கு கணனித்துறையில் அடிப்படை அறிவை வழங்கும் நோக்கத்தோடு இம்மன்றம் அமைக்கப்பட்டது. ஆரம்பக்கல்வி மாணவர்கள் தரம் 6க்கு மேற்பட்ட மாணவர்கள் என்ற வகையில் கணனிச் செயற்பாடுகள் நடை பெறுகின்றன. இக் கணனிச் செயற்பாடுகளில் மாணவர்கள் மிகவும் ஆர்வத்துடன் பங்கு பற்றி வருகின்றனர்.

## ஆசிரியர்கள் நலன்புரிச்சங்கம்

ஆசிரியர்களிடையே புரிந்துணர்வையும் நட்புறவையும் ஏற்படுத்தி சுமூகமான ஆக்கச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதுடன், ஆசிரியர்களின் இடமாற்றம், ஓய்வுபெறுதல், பதவியுயர்வு, ஆகிய நிகழ்வுகளின் போது சம்பந் தப்பட்ட ஆசிரியர்கள் கௌரவிக்கப் படுகின்றார் கள். வருடந்தோறும் பொதுக்கூட்டம் கூடி புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப் படுவார்கள்.


இந்துமா மன்றம்


கவின் கலை மன்றம்


கிறிஸ்த்தவ மன்றம்


மாணவர் பாராளுமன்றம்



கணித விஞ்ஞான மன்றம்



உடலாளர் மன்றம்

# அன்பு ஒரு மகாசக்தி

***திருமதி . பா. பாலசிங்கம்*** MA
***ஆசிரிய ஆலோசகர்***
***வலயக் கல்வி அலுவலகம்,***
***யாழ்ப்பாணம்***

**அன்பும் சிவமு மிரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவதாரு மறிகிலார்**
**அன்பே சிவமானதாரு மறிந்தபின்**
**அன்பே சிவமா யமர்ந்திருந்தாரே**
**-திருமந்திரம்**

திருக்கைலாயத்தில் சிவபெருமானும் பார்வதியம்மையும் வீற்றிருக்கின்றனர். அப்பன் அருகில் கணபதியும், அம்மை அருகில் முருகனும் அமர்ந்திருக்கின்றனர். ஈஸ்வரன் அருகே காளை படுத்திருக்கின்றது. அம்பிகை அருகில் சிங்கம் நிற்கின்றது. மூத்தவன் முன்பு மூஷிகம் விளையாடுகின்றது. இளையவன் மருங்கில் மயில் குலாவுகின்றது. சிவனது மேனியில் அரவம் அசைந்து அசைந்து ஊர்கின்றது. இடையிடையே அது படமெடுத்தாடுகின்றது.

இந்த காட்சியை மீண்டும் மீண்டும் மனக் கண்ணில் கொண்டு வருவோம். என்ன விநோதம்! காளையும் அதனைக் கொன்று தின்னும் சிங்கமும் தோழர்களாய் நெருங்கியிருக்கின்றன. எலியின் மீது பாயும் பாம்பும் பாம்பைக் கொத்திக் கொல்லும் மயிலும் மகிழ்ந்து விளையாடுகின்றன. எலியின் மீது பாம்பு பாயவுமில்லை, பாம்பைக் கொத்த மயில் பறக்கவுமில்லை. கணபதியின் காதை முருகன் கிள்ளவுமில்லை, தம்பியின் தலையில் அண்ணன் குட்டவும் இல்லை. இந்த ஒற்றுமையான நிலையை இரசித்த வண்ணம் புன்முறுவல் பூத்தவர்களாய் அப்பனும் அம்மையும் ஆனந்தமாய் இருக்கிறார்கள். இங்கே நாம் காணும் சந்தோசமான அமைதியான காட்சியின் இரகசியம் என்ன தெரியுமா? அன்பு அங்கு ஆட்சி புரிகிறது சிவபெருமான் அன்பே உருவாய் அமர்ந்திருக்கின்றார். அவ்வுயிர்களிடமுள்ள தீய இயல்புகள், அவைகளிடையே நிலவும் வேற்றுமைகள் அன்பினால் அழிக்கப்பட்டுவிட்டன. அன்பு எல்லா உயிர்களையும் அணைக்கிறது ஆனந்த மூட்டுகிறது. அன்பு என்றால் என்ன?

**அன்பிலார் எல்லாந்தமக்குரியர்**
**அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு,**
**அன்பகத்தில்லா உயிர் வாழ்க்கை**
**வன்பாற்கண் வற்றல் மரந்தளிர்த் தற்று.**
-திருக்குறள்.

**அன்பிலே கவிதை எழும் அகந்தை மாயும்**
**அடுத்துவரும் துன்பமெலாம் அஞ்சியோடும்**
**மன்பதைகளுய்வு கொளும் மகிழ்வு சேரும்**
**மகிகலத்தி லன்பினுக்கோர் விலையுமில்லை**
**இன்பமென விண்ணவர்கள் துய்த்து வாழும்**
**இன்னமுதும் அன்பினுக்கோ ஈடாமில்லை**
-யாழ்ப்பாணன்

**குணச்சிறப்புகளில் அதி உயர்ந்தது அன்பு**
**நல்லொழுக்கத்திற்கு ஆதாரம் அன்பாகும்**
**அன்பே கடவுளாம், அன்பேயருஞ் சமயம்**
**அன்பே அறிவிற்கனி**
-யோகசித்தி

**கடவுள் மனிதருக்கு மட்டும் கொடுத்துள்ள ஒரே அரும் பொருள் அன்பு அது நெஞ்சுடன் நெஞ்சை, உயிருடன் உயிரைப் பிணைக்கும் ஒரு வெள்ளித்தளை**

-வால்டர் ஸ்கொட்

**அன்பும் இரக்கமும் இரட்டைக் குழந்தைகள்**

-ட்ரைடன்

**அன்பு கடவுளின் வடிவம்**

-லூதர்

**அனுகுண்டுகளுக்கு முன்பு ஒரு வேளை மனிதன் அசையாது நிற்கவும் கூடும் ஆனால் அன்பு கனிந்த சொற்களின் முன் அவன் பின்னடையத்தான் வேண்டியிருக்கும்**

-கான்டேகர்

**வாழ்வின் மிகச்சிறந்த இன்பம் நாம் அன்பு கூரப் படுகின்றோம் என்பது தான்.**

-விக்டர்கியூகோ

**அன்பு செய்தால் அல்லல் தீரும். அல்லல் தீர்ந்தால் அமைதி பெருகும் அமைதி பெருகினால் அதுவே சுவர்க்கம்**

-பெ.தூரன்

**அன்பு நீடிய சாந்தமும், பொறுமையுமுள்ளது. அதற்குப் பொறாமை இல்லை**

- விவிலியநூல்

**அன்பு சர்வலோக சஞ்சீவி**

- இராசாசி

**அன்பாகிய அக்கினியிலே எவ்வளவு கடினமான இருதயமும் இளகியே தீரும்**

- காந்தியடிகள்

அன்பைப் பற்றிக் கூறாத சமயங்கள் இல்லை. இறைவனை அடைவதற்கான வழி அன்பு தான். விஞ்ஞானம் அன்பு என்பது எம் முடைய ஓர் உணர்வு என்று முன்னர் கூறியது. ஆனால் இன்று பல்வகைப்பட்ட விஞ்ஞான ஆராய்ச்சிகளின் பயனாய் அன்பு ஓர் உணர்வு மட்டுமல்ல. அதைவிட மேலான பலம்வாய்ந்த ஓர் சக்தி என்று கண்டுள்ளது. இச்சக்தியை ஒவ்வொருவரும் தொடர்ந்து வெளியிட்டும் பெற்றுக் கொண்டும் இருக்கிறார்கள். எவர் ஒருவர் மீது இச்சக்தி பிரயோகிக்கப் படுகின்றதோ அவரில் இது ஒரு தாக்கத்தை ஏற் படுத்துகிறது.

எங்களுக்கு இது எவ்வாறு தெரிகிறது? ஞானிகளும் சன்னியாசிகளும் பெற்றுள்ள ஒளி வட்டத்தை கிரிலியான் புகைப்படம் என்கின்ற ஒரு புகைப்பட நுட்பத்தின் உதவியோடு புரிய வைத்ததன் மூலம் இதன் தன்மை அறியப் படுகின்றது. உயிரற்றனவற்றிற்கும், உயிருள்ளனவற்றிற்கும் இடையிலான வேறுபாடுகளைக் காட்டுகின்றது. உயிருள்ளவற்றைச் சுற்றியுள்ள சக்தி அளவிலும், நிறத்திலும்வேறுபடுகின்றது. அத்தோடு ஒருவரின் உணர்வு வேறுபாடு களையும் பதித்துக் காட்டவல்லது. ஒருவர் அன்பைப் பரப்புகின்ற பொழுது ஒளிவட்டம் நீல நிறமாகக் காணப்படுகின்றது. ஒருவர் வெறுப்பையும் விரக்தியையும் காட்டும் போது ஒளிவட்டம் சிவப்பு நிறமாக மாறுகின்றது. ஒருவர் சுய நலமற்ற அன்பை முழுமையாகப் பரப்பும் போது ஒளிவட்டம் மெல்லிய செந்நிறமாக (Pink) காணப்படகின்றது. இவற்றை விட மிகவும் அதிசயமானது யாதெனில் ஒருவரிடமிருந்து வேறொருவருக்கு மாற்றப்படும் சக்தியையும் இந்த கிரிலியான் புகைப்படக்கருவி காட்டக் கூடியது. இப்பதிவுகள் மிருகங்கள், தாவரங்கள் ஆகியவற்றின் இடையேயும் காணக் கூடியதாக இருக்கின்றது.

உலகம் முழுவதும் காணப்படும் எல்லா ஜீவராசிகளுள்ளும் அன்பு என்னும் சக்தி காணப்படுகிறது. ஆனால் அளவுகளில் வேறு

படுகின்றன. ஒரு சாதுவில் அன்பை வெளிப் படையாகக் காணமுடிகின்றது. ஆனால் கொலைகாரனில் அன்பு குறைவாக மறைந்து காணப்படுகின்றது. அன்பு எனும் சக்தியை மூன்று மட்டங்களில் அடையாளம் காண முடிகிறது.

**1. சுயநல அன்பு** (Get and forget)

அன்பின் கீழ்நிலையில் உள்ள செயற்பாடு களை இது உணர்த்தும். ஒருவர் தன்னைப் பற்றியும், தனது உடமைகள் பற்றியும் சுயமான சிந்தனையுடன் செயல்படும் நிலையை அது குறிக்கும். பிறரைப்பற்றிய சிந்தனை தோன்றாது. அவ்வாறான சிந்தனையில் அவர்தன் சுய நன்மைக்காக பிறரிடமிருந்து செயற்பாடுகளை எதிர்பார்ப்பார்கள். இதன்படி அன்பு எனும் சக்தி பலவீனமடைந்து சுயநல சக்திகள் ஆக்கிரமிக் கப்பட்டுச் செயற்படும்.

I. நானே உலகின் மையம்
II. சுயநலங்களை நாடுகிறேன்
III. பிறரிடமிருந்து பெறும் பொழுது நான் சந்தோசமடைகிறேன்
IV. எனக்கு தேவையானவற்றை பெறுவதற்கே மற்றவர்கள் இருக்கிறார்கள் என நினைத் துக் கொள்வர்

**2. பரஸ்பர அன்பு** (Give and take)

இது அன்பின் ஓர் உயர்படியாகும். ஒருவர் தன்னைப்பற்றியும், தன்னோடு தொடர்பான தன் உறவினர்கள் பற்றியும் சிந்தித்து செயல்படுவர், இவ்வன்பு எனும் சக்தி முன்னர் கூறப்பட்ட சுய நல அன்பு உடையவரிலும் பார்க்க விரிவடைந் துள்ளதைக் காணமுடிகின்றது. கொடுத்து வாங் குமியல்பு ஓரளவு விரிவடைந்திருக்கும். ஆனால் அவரிடத்திலுள்ள அன்பு சக்தி உலகளாவிய நிலையில் பரிமளிக்கமாட்டாது.

I. நான் நேசிப்பவர்களே எனக்குப் பிரதானம்
II. எனது குடும்பம் அல்லது சிநேகிதர்கள் ஆகி யோருக்காகவே நான் வேலை செய்கிறேன்.
III. நான் நேசிப்பவர்கள் சந்தோசமடையும் போது நான் சந்தோசமடைகிறேன்.
IV. எனது இலக்குகளை ஆதரிப்போரை நல்லவர்களாக கருதுவேன் எனச் சிந்திப்பர்.

**3. சுயநலமற்ற அன்பு**(Give and forgive)

இதுவே அன்பின் அதிஉயர்ந்த படியாகும். தூய அன்பானது "நான்" என்ற நிலையிலிருந்து "நாம்" என்ற நிலைக்கு எடுத்துச் செல்கிறது. இவ் அன்பை காட்டுபவர்கள் பிறருக்கு கொடுப்பார் கள், பிறரை மன்னிப்பார்கள். பிறரிடமிருந்து எதையும் எதிர்ப்பார்க்க மாட்டார்கள். இந் நிலை யான அன்பில் ஒருவர் தன்னை மற்றவர் நிலையி லிருந்து நோக்குவர். பிறரின் தேவைகள் தனது தேவைகளுக்கும் சமமானது எனக் கருதுவர். பிறர் நலன்களில் அக்கறை காட்டுவர். இவ்வா றான நிலையில் அவர்கள் உலகளாவிய அன் பான சக்தியைப் பெற்றுத் திடகாத்திரத்துடன் செயற்படுவர். இச் சக்திக்கு ஒரு வரம்பெல்லை கிடையாது. அன்பை பிறரிடம் பகிர்வதன் மூலம் விருத்தியடைகிறது.

I. நாம் எல்லோரும் ஒருவரே
II. மற்றவர்களுக்குச் சரியெனப்படுபவை எனக் கும் சரியாகும்.
III. மற்றவர் சந்தோசத்தில் நான் சந்தோ சமடைகிறேன்.
IV. பிறர் துன்பப்படும் பொழுது அத் துன்பம் எனக்கு ஏற்பட்டதென உணர்கிறேன் என் பதைப்புரிந்து கொள்வர்.

இவ் உலகளாவிய சக்தியே எல்லாப் படைப்புக்களுக்கும் அடித்தளமாக அமைகிறது. மனிதன் இயற்கையாகவே தெய்வீக தன்மைக்கு ஆதாரமாக இருப்பது அன்பு. அன்பின் வர்ணிப்பே மனச்சாட்சி. இவ் அன்பில் உருவாகும் சிந்தனை கள் செயலாகும் போது அவை நற் செயல்களா

கின்றன. இதுவே தர்மம். உணர்ச்சிகள் யாவும் அன்பு மயமாகும் போது அவை எமது மனதில் அமைதியை உருவாக்குகின்றன. இதுவே சாந்தி. மனதில் ஏற்படும் அமைதியின் உயர்வினால் எவ்வுயிருக்கும் தீங்கிழைக்காத தன்மை எமது நடத்தையில் ஏற்படுகிறது. இதுவே அகிம்சை. ஆகையால் மனிதனின் எல்லா நற் பண்புகளுக்கும் உயிரோட்டமாக இருப்பது அன்பு. இது ஒரு மகா சக்தி. இது மனிதனின் வாழ்க்கைக்கு மூலாதாரமானது. இவ்வுயர் நிலை அன்பை நாம் பெருக்கப் பெருக்க மனித நற்பண்புகள் அனைத்தும் எம்மை வந்து சேரும்.

தூய அன்பை அதாவது சுயநலமற்ற அன்பை எம்மால் விருத்தி செய்ய முடியவில்லையே என்பது தான் இப்பொழுது பலருக்கும் கவலை தரும் விடயமாக உள்ளது. கவலையை விடுங்கள் இதற்கும் வழி உண்டு வழியைச் சொல்லவா? தினமும் காலை, மாலை வீட்டில் திருமுறைப்பாடல்களைப்பாடி இறை வழிபாடு செய்யுங்கள். வெள்ளிக் கிழமைகளில் குடும்பத்தினர் அனைவரும் சேர்ந்து உங்களுக் காகவும் மற்றவர்களுக்காகவும் இறைவனைப் பிரார்த்தியுங்கள். கிழமையில் ஒரு நாளாவது ஆலய வழிபாடு செய்யுங்கள். சுத்தமான சைவ உணவை உண்ணுங்கள். உங்களால் இயலுமான சேவையை தேவைப்படுவோருக்கு செய்யுங்கள். உங்களில் சுயநலமற்ற அன்பு பரிணமிப்பதை நீங்களே உணருவீர்கள்.

"Love is God live in Love"

# பாடசாலை நிகழ்வுகளில் சில...












# என் அம்மா

*யூ.விதுசன்*
*தரம் - 10*
*யா/ ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்*

சுமை என எண்ணாமல்
என்னை உன் கருவில்
பத்துமாதம் சுகமாக
சுமந்தாய் அம்மா

நான் உறங்கிட
நீ விழித்தாய்
நான் பசியாறிட நீ பட்டினியாகவும்
கிடந்தாய் தாயே

அன்புக்கு அடித்தளமாய்
அமைதிக்கு இலக்கணமாய்
உரிமைக்கு சொந்தமாய்
அகிம்சைக்கு ஊற்றானாய் தாயே

அன்பாய் பண்பாய்
பாசமானதாய் எம்மை
வளர்த்தெடுத்தாள் அன்னை

தளராத மனதோடு
சுயநலம் அற்றதாய்
பொதுநல எண்ணத்தோடு
பணி செய்தாய் தாயே

சேயை கண்ணிமை போல்
காப்பவளே உம்மில் கண்டு விட்டோமே
கடவுளாய் அன்பை அள்ளி இறைக்கிறாய்
அதனாலே அம்மா எனப்படுகிறாய்

கடவுள் தானே நீயம்மா
இன்னொரு ஜென்மம் பிறந்து விட்டால்
உன்னில் பட்ட கடனை அடைக்க
மீண்டும் உன் மகனாகப் பிறப்பேன்

நான் உயரந்திட நீ
வியர்வை சிந்தினாயே மீண்டும்
ஒருமுறை உன் கருவறையில் இடம் தருவாயா...

# புதிய தலைமுறையின் புரட்சியா சித்த மருத்துவம் ?

*DR. சரண்யா உதயகுமார்*
*( B.S.M.S )*

நவீன யுகத்தில் புரட்சியாக வெடித்து வருகின்ற விடயம் சித்த மருத்துவம் ஆகும். பாரம்பரியங்கள் மற்றும் பழமையைத் தேடும் புதிய தலைமுறைகளை கண்ணூடாக காண முடிகிறது. ஒரு பகுதியினர் புதுமையைத் தேடும் பணியிலும் மறு பிரிவினர் பழமையை புதுப்பிக்கும் முயற்சியிலும் ஈடுபடுகின்றனர். குறிப்பாக இளம் சமூதாயம் இவற்றில் பெரும் ஆர்வலர்களாக விளங்குகின்றனர். இதற்கு காரண காரியங்கள் இல்லாமல் இல்லை. இற்றைக்கு பல தசாப்தங்களுக்கு முன் பழையன கழிதலும் புதியன புகுதலும் எனும் முயற்சியில் உலகமே ஈடுபட்டுக்கொண்டதன் விளைவுகளே சிறு வயதிலேயே நீரிழிவு, புற்றுநோய், இருதய நோய், நுரையீரல் நோய்கள் என இன்னும் பல......

விஞ்ஞான வளர்ச்சியின் நிதர்சனமான உண்மை பஞ்சபூதங்களான நிலம், நீர், நெருப்பு, வாயு, ஆகாயம் ஆகியன மாசடைதலும் பற்றாக் குறையுமே ஆகும். புதிது புதிதான கண்டுபிடிப்புகள் மனிதனின் சராசரி ஆயுட்காலத்தை 74 ஆக குறைய வைத்துள்ளது. இயற்கையுடன் ஒன்றித்து வாழ்ந்த மனிதன் 100 வருடங்கள் கடந்து மேலும் 20 வருடங்களுக்கு மேலும் வைரம் போல் வாழ்ந்தான்.

ஆனால் இன்றைய நிலை என்ன 40 வயது தாண்டினால் உயர் குருதியமுக்கம், நீரிழிவு, உயர் கொழுப்பு (cholesterol) என பெரும்பாலான மக்கள் பாதிக்கப்படுகின்றனர். கடுமையாக வேலை செய்ய முடிவதில்லை, விரும்பிய உணவை உட்கொள்ள முடிவதில்லை. எமது வாழ்க்கையை வழமாக வாழ்வதற்கே விஞ்ஞானத்தின் வளர்ச்சியும் புதியன தேடலும் ஆகும். ஆனால் அந்த அதீத விஞ்ஞான வளர்ச்சி இன்று மறைமுகமாக மானிடத்தை கொல்வதை அறிவீர்களா, இன்று இளம் சமுதாயம் விழித்துக் கொண்டது. தமது தேவைகளை புரிந்து கொண்டது. ஆரோக்கியமான வாழ்க்கையை தேடும் பழையனவற்றின் பெருமையை உணர்ந்துள்ளது.

உடல் ஆரோக்கியத்தில் மிகப் பெரும்பங்கு வகிப்பது உணவு, உற்பயிற்சி மற்றும் மருத்துவம் என்பனவாகும். இன்றைய யுகத்தில் உணவைத் தேடி ஒரு புறமும் உடற்பயிற்சியைத் தேடி இன்னொரு புறமும் மருத்துவத்தைத் தேடி மற்றொரு புறமும் பயணிக்க வேண்டியுள்ளது. ஆனால் இவை மூன்றையும் ஓரிடத்தில் பெற்றுக்கொள்ள மகா ரிஷிகளால் உலகுக்கு அறிவிக்கப்பட்ட மருத்துவமே சித்த மருத்துவம் ஆகும். இன்றைக்கு சில தசாப்தங்களுக்கு முன் சித்த மருத்துவம் ஒரு அவமானமாகவும் கேலிக்கிடமாகவும் கருதப்பட்டது. உண்மை என்னவென்றால் எம்தேசத்தவர் அதனைக் கேலி செய்த அதே வேளை மேலைத் தேசத்தவர் இதனை ஆய்வு செய்தனர். இயற்கை

மூலிகைகளின் நன்மைகளைக் கண்டறிந்தனர். தற்போது சித்த மருத்துவம் மறுக்கப்பட முடியாத ஒன்றாக உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டு வேகமாகப் பரவி வருகின்றது. "இக்கரைக்கு அக்கரை பச்சை" என்பது போல நாம் மேலைத் தேய கலாச்சாரம், மேலைத்தேய மருத்துவம் என்று ஓடிய போது மேலைத்தேசத்தவர் இயற்கையையும் அதன் நன்மைகளையும் நாடினர். அதுவே எமது வெற்றி யாகவும் அமைந்தது. அவ்வேளை எம் அறியா மையை எண்ணி வெட்கித் தலைகுனிய வேண்டிய விடயமாகவும் மாறிவிட்டது. மேலைத் தேசத்தவர் நமது மருத்துவத்தை நமக்கே விற்பனை செய்ய முனைந்தனர். நமது கலையை நமக்கே பயிற்றுவித்தனர்.

இன்றைய சமுதாயம் புரிந்து கொள்ள வேண்டிய ஒன்று சித்த மருத்துவம் வாழ்வின் ஒரு பகுதியல்ல. அது நமது அன்றாட வாழ்க்கை. காலை எழுந்ததில் இருந்து இரவு படுக்கை சென்று தூங்கும் வரை வாழ்க்கையின் ஒவ் வொரு படிமுறையையும் மிகவும் அழகாக சித்த மருத்துவம் எடுத்துக் கூறுகின்றது. "உணவே மருந்து மருந்தே உணவு" என்பது சித்த மருத்து வத்தின் தாரக மந்திரம் உண்மையும் அதுதான். "அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு" என்பதும் இதனையே குறிக்கின்றது. உணவில் காபோவைதரேற், புரதம், கொழுப்பு என்பன குறிக்கப்பட்ட விகிதாசாரத்தில் அமைய வேண் டும். ஆனால் இன்றைய நவீன உணவுகள் இயற்கைக்கு முரணாகவே அமைந்துள்ளன. உணவுக் கூம்பகத்தில் அதியுயரத்தில் இருப் பது கொழுப்பு. ஆனால் இன்றைய நாட்களில் எமது உணவின் பெருமளவான பங்கு கொழுப் பாக மாறிவிட்டது. இது இயற்கைக்கு புறம்பான செயலாகும். இயற்கை முரண்படும் போது உடலின் சமநிலையும் குறைவடைகின்றது.

சித்தர்கள் எமது இயற்கை சமநிலையை மேம்படுத்தும் பொருட்டு பல அரிய விடயங்களை எமக்கு அருளியுள்ளனர். உதாரணமாக மூலிகை களின் அதி உன்னத பயன்கள் யோகாசனம் என்னும் அரிய உடற்பயிற்சி, காய கல்பம் என்னும் மரணத்தை வெல்லும் மூலிகை..... என பற்பல விடயங்கள்.......

ஆகவே சர்வதேசத்தின் புதிய ஆய்வுகள் எமக்கு கூறுவது என்னவென்றால் பக்க விளைவு கள் இல்லாத மருத்துவம், மானிடத்துக்கு சிறப்பான உயரிய மருத்துவம், மரணத்தை வெல்லும் மருத்துவம் என்றால் அது சித்த மருத்துவமே ஆகும். நாம் பிறப்பிலிருந்தே சித்த மருத்துவத்தின் தாரக மந்திரத்தின் வழி நடப்போ மானால் மரணத்தை வெல்லலாம் அல்லது மரணத்தை 100 வருடங்களுக்கு மேல் தள்ளி வைக்கலாம் என்பது சித்தர்களின் கருத்தாகும்.

ஆகவே சர்வதேசத்தின் புதிய ஆய்வுகள் பழைமைகளை திரட்டும் பணியில் ஈடுபடுவ தனால் இன்னும் ஒரு சில தசாப்தங்களில் எமது பழம் பெரும் வைத்தியமான சித்த மருத்துவம் உலகில் முன்நிலை வகிக்கும் என்ற உண்மையை இன்றைய இளம் சமுதாயம் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

# எனது விஷ்ணு வித்தியாலயம் மாணவன் முதல் அதிபர் வரையான மீள்நோக்கும் – வாழ்த்தும்

*மனநிறைவுடன்,*
*நா. சிவஞானம் (Agri Tr., B.A. Dip in Education., SLTS 1)*
*ஓய்வுநிலை அதிபர்.*

புத்தூர் ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயத்தின் ஆரம்பகால மாணவனாகவும் (1958-63) ஆசிரியராகவும் (1986-1996) அதிபராகவும் (1996-2006 ஓய்வுவரை) நிறைவாக செயற்பட்டவன் என்ற வகையில் அறுபது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் எமது ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தினை வாழ்த்துவதற்கு வாய்ப்புக் கிடைத்தமை மகிழ்வைத் தருகிறது.

## மீள்நோக்கு

புத்தூர் பிரதேசத்தின் பாடசாலைக் கல்வி 1800-1850 காலப்பகுதியில் மெதடிஸ்த திருச்சபையினரால் தோற்றுவிக்கப்பட்ட மெ.மி பாடசாலைகளுடன் ஆரம்பமாகிறது. பிரதேசத்தின் அனைத்து மாணவருக்கும் அறிவு புகட்டினர். எழுத வாசிக்கவும், எண்ணறிவையும், நல்ல ஒழுக்க விழுமியங்களையும் கற்பித்தனர். ஊக்கமுடன் கற்றவர் உயர்கல்வியையும் தொடர்ந்து உத்தியோக வாய்ப்பையும் பெற்றனர்.

இந்த மெ.மி பாடசாலைகள் ஆரம்பத்தில் கிறிஸ்தவ மதப் போதனைகளை செய்தாலும், பின்நாளில் சைவசமயத்தையும் போதிக்க இடமளித்தன. இவ்வாறாக சுமார் 125 வருடங்களாக செயற்பட்டுக் கொண்டிருக்கையில், புத்தூர் சைவப் பெரியார்களால், சைவப் பாடசாலையொன்று தோற்றுவிக்கப்பட்டது. ஆனால் அங்கு புத்தூரின் அனைத்து சைவப் பிள்ளைகளும் அனுமதிக்கப்படாத நிலை தொடர்ந்தது. இதனால் பிரதேசத்தின் அரைவாசிக்கும் மேற்பட்ட மாணவர்கள் பாதிக்கப்பட்டனர். இருப்பினும் பொறுமைகாத்த மாணவர்கள் தமது கற்றலை மெ.மி பாடசாலைகளில் தொடர்ந்தனர். புத்தூர் மெ.மி பாடசாலை 5ஆம் வகுப்பு வரையும், ஆவரங்கால் மெ.மி பாடசாலை 11ஆம் வகுப்பு வரையும் இயங்கின. இவ்வாறு மெ.மி பாடசாலைகளில் கற்று உயர்தகமை பெற்றவர்களில் பலர் அரச உத்தியோகங்களை பெற்றனர். அவர்களில் குறிப்பாக, புத்தூர் பிரதேசத்தின் முதலாவது வைத்திய கலாநிதி (பேராதனை பல்கலைகழகம்) பட்டம் பெற்றவர் புத்தூர் சைவப்பாடசாலையில் அனுமதி மறுக்கப்பட்ட மாணவியாவார். இவர் ஆவரங்கால் மெ.மி, அச்சுவேலி கிறிஸ்தவக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றின் மாணவியாவார். (ஆதாரம் - ஆவரங்கால் சிவத்தலம் நூல்)

இவ்வாறு புத்தூர் சைவப்பாடசாலையினால் ஒதுக்கப்பட்ட மாணவர்கள் தொடர்ந்தும் மெ.மி பாடசாலைகளில் சிரத்தையுடன் கற்றனர். 1950-55 காலப்பகுதியில், ஆவரங்காலில் அவ்வூர் சைவப்பெரியார்களால் பிரதேசத்தின் இரண்டாவது சைவப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலையும் புத்தூர் சைவப் பாடசாலை போன்றே அரைவாசிக்கும் மேற்பட்ட சைவப்பிள்ளைகளுக்கு அனுமதி வழங்காது

செயற்பட்டது. இதனால் சைவமாணவர்கள் இரு சமூக பிரிவுகளாக பிரிந்தனர். இவ்வாறு இரண்டு சைவப்பாடசாலைகளினாலும் பாதிக்கப்பட்ட மக்களும் மாணவர்களும் அமைதியாக சிந்திக் கத் தொடங்கினர்.

சைவப்பாடசாலைகளின் பாவச்செயல் கண்டு கவலையுற்ற புத்தூர் பிரதேச சமூக நலன்களில் அக்கறை கொண்ட சமூக முன்னோடிகள், ஒன்றுகூடி நன்கு ஆராய்ந்து அனைவரது ஒத்துழைப்புடன் "அனைத்துப்பிள்ளைகளும் படிக்கக்கூடிய" சைவப்பாடசாலையொன்றை புதிதாக அமைத்து செயற்படுத்துவது என முடிவெடுத்தனர். இதற்கமைய 1957 விஜயதசமி தினத்தில், புத்தூர் ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பாடசாலைக்கான கட்டிடங்களும் துரிதமாக அமைக்கப்பட்டன. 1958 தை 06ம் திகதியிலிருந்து கல்விச் செயற் பாடுகளுடன் ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் தனது அறிவுச் சேவையை ஆரம்பித்தது.

புத்தூர் மெ.மி பாடசாலையில் 5ஆம் வகுப்பு சித்தி பெற்று, 6ஆம் வகுப்பிற்கு புத்தூர் சைவப்பாடசாலையில் அனுமதி மறுக்கப்பட்டு, ஸ்ரீ விஷ்ணு வித்தியாலத்தின் ஆரம்பநாள் மாணவனாக 1958 தை 06ம் திகதி இணைந்து கொண்டேன்.

புத்தூர் ஸ்ரீ விஷ்ணுவின் ஆரம்பகால அதிபராக திரு.க.முருகேசு அவர்கள் கடமையாற்றினார். அப்போது 11ஆம் வகுப்பு வரை வகுப்புகள் நடைபெற்றன. 15 ஆசிரியர்கள் வரை கடமையாற்றினர். அயலூர் மாணவர்கள் உள்ளடங்கலாக சுமார் 400 மாணவர்கள் படித்தனர். கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுடன் இணைப் பாடவிதான செயற்பாடுகளும் சிறப்புற நடைபெற்றன. 1960 இல் நடைபெற்ற முதலாவது க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு தோற்றியோரில் 5 மாணவர்கள் தேர்ச்சியடைந்தனர். 1963ல் நடைபெற்ற பரீட்சைக்கு தோற்றிய 12 மாணவர்களில் 10 மாணவர்கள் உயர்தரக் கல்விக்கு தேர்ச்சியடைந்தனர். அவர்கள் உயர்கல்விக்காக புத்தூர் சைவ பாடசாலைக்கு விண்ணப்பித்த போது, அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இந்நிலை 1973ஆம் ஆண்டு வரை தொடர்ந்தது. இவ்வாறு அனுமதி மறுக்கப் பட்டவர்களுக்கு, யாழ்.மத்திய கல்லூரி, சுன்னாகம் இராமநாதன் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி, அச்சுவேலி கிறிஸ்தவ கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், யாழ்.பரியோவான் கல்லூரி, யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் ஆகியன அனுமதி வழங்கின. அங்கு உயர் கல்வியை பூர்த்தி செய்த விஷ்ணுவின் மாணவர்கள் அரச உத்தியோகங்களைப் பெற்றனர். இருவர் யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளர்களாகவும், ஐவர் அரச அலுவலக உயரதிகாரிகளாகவும், ஆசிரியர்களாகவும், அதிபர்களாகவும் கடமையாற்றுகின்றனர்.

1970 வரை அதிபர் திரு.க.முருகேசு அவர்களின் பணி பாடசாலைக்கு உயர்வைக் கொடுத்தது. அதிபர் அவர்கள் பாடசாலையை இரு நேரப்பாடசாலையாக மாற்றத் தொடங்கியதும், வெளியூர் ஆசிரியர்கள் சுயவிருப்பில் இடமாற்றம் பெற்றனர். அவர்களின் வெற்றிடங்களுக்கு புதியவர்கள் இணைக்கப்படாத நிலை காணப்பட்டது. மாணவர்களின் வரவும் குறையத் தொடங்கியதும், பாடசாலையின் பெறுபேறுகளில் வீழ்ச்சி ஏற்படத் தொடங்கியது. அதிபரும் வேறு பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப் பட்டார். சிறந்த சேவையால் பாடசாலையை முன்நோக்கி வளர்த்த அதிபரின் இடமாற்றம், பின்நாளில் எத்தகைய நிலைக்கு பாடசாலையை

கொண்டு செல்லும் என்பதை பாடசாலைச் சமூகம் சிந்திக்கத் தவறியது.

புதிய மாற்றத்தை நோக்காக கொண்டு ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம், திடீரென கீழ் நிலைக்குத் தள்ளப்பட்டது. சுமார் 20 வருடங்களாக கல்வித்துறையினரும் பாட சாலை மீது எவ்வித அக்கறையும் காட்டாதிருந் தனர். தாம் விரும்பும் அதிபர், ஆசிரியர்களை நியமிப்பதில், அவர்கள் ஊக்கத்துடன் செயற் படாமையால் 11ஆம் வகுப்பு வரை இருந்த பாட சாலை 7ஆம் வகுப்பு வரை தரம் குறைக்கப் பட்டது. பின்னர், ஒரு அதிபரின் காலத்தில் அவரின் அயராத முயற்சியால் மீண்டும் 11ஆம் வகுப்பிற்கு தரமுயர்த்தப்பட்டது. அந்த அதிபரை அக்கால மாணவர்களும் பெற்றோர் களும் மதிப்போடு நினைவுபடுத்துவர்.

முதல் அதிபர் முருகேசு அவர்களின் இடமாற்றத்தின் பின்னர் நியமனமாகிய அதிபர்கள் மீது பாடசாலைச் சமூகத்திற்கு நல்லபிப்பிராயம் இருந்ததாக அறியமுடிய வில்லை. ஆயினும் சில ஆசிரியர்கள் மீது நன்மதிப்பை கொண்டிருந்தனர்.

(1982 முதல் 2007 வரை தொடர்ந்து கடமையாற்றிய ஆசிரியர் திரு.சு.நடராசா அவர் களுக்கு 1986க்கு முன்னரான அதிபர் ஆசிரியர் களின் பாடசாலைச் செயற்பாடுகள் விபரமாக தெரியும்)

1986இல் திரு.த. மணிசுந்தரம் அவர்கள் அதிபராக கடமையேற்றார். பாடசாலையின் ஆரம்பகால ஆசிரியராக, அதிபர்.திரு.க. முருகேசு அவர்களுடன் பணியாற்றிய அவர், பாடசாலையின் அப்போதைய நிலை கண்டு வருத்தமுற்றார். புதிய ஆசிரியர்களை நியமனம் செய்யுமாறு கல்வித்துறையினரை நாடினார். அதன்படி பாடசலைக்கு உள்வாங்கப்பட்ட ஆசிரியர்களில் நானும் ஒருவன். 1987இல் அச்சு வேலி கிறிஸ்தவ கல்லூரியிலிருந்து இடமாற்றம் பெற்று ஸ்ரீ விஷ்ணுவித்தியாலத்தின் ஆசிரிய குழாமில் இணைந்தேன். ஆசிரியர்களின் விருப் பங்கள், செயற்பாடுகளுக்கமைய பணிகளை அதிபர் பகிர்ந்தளித்தார். மாணவர் எண்ணிக்கை யும் அதிகரிக்கத் தொடங்கியது. சராசரியாக ஒரு வகுப்பில் 20 மாணவர்கள் என்ற நிலைக்கு பாடசாலை உயர்வு கண்டது.

அக்காலத்தில், உப அதிபராக கடமை யாற்றிய கணித ஆசிரியர் திரு.ஐ.சிவராசா அவர்களின் சேவை சொல்லிலடங்காது. எமது பாடசாலைக் கீதத்தை ஆக்கியவரும் இவரேயா வார். நிர்வாகத்திறமையுடன், கவிஞர், நாடக ஆசிரியர், நெறியாளர், எழுத்தாளர் என பன்முகம் கொண்ட அவரின் செயற்பாடுகள் பாடசாலை யின் இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கு ஊக்கம் கொடுத்தன. பாடசாலையின் பெயரும் கல்வி வட்டாரத்தின் நன்மதிப்பைப் பெற்றது.

இருப்பினும், பாடசாலையின் பௌதீக வளங்கள் பற்றாக்குறையாக காணப்பட்டன. சுகாதாரமற்ற கழிப்பிட வசதிகள், உடை வடைந்த கட்டிடங்கள், போதிய வகுப்பறைகள் இன்மை என்பன அதிபர் உட்பட மாணவர் களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெரும் சவால் களாக காணப்பட்டன.

அக்காலத்தில் பாடசாலையில் இருந்த ஒரேயொரு உள்ளூர் ஆசிரியரான என்னுடன், புதிதாக இரண்டு உள்ளூர் ஆசிரியர்களும் இணைந்து கொள்ள, அதிபர் மற்றும் மாணவர் களின் செயற்பாடுகள் ஊக்கமடையத் தொடங் கின. மீண்டும் பாடசாலை மீதான நன்மதிப்பும் அக்கறையும் சமூகத்தில் ஏற்படத்தொடங்கியது.

1986இல் ஒரு மாணவர் க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடைந்து மீளமைக்கப்பட்ட நம்பிக்கையை ஏற்படுத்தினார். 1987இல் இரண்டு மாணவர்கள் சித்தியடைந்தனர். அவர்களில் ஒருவர் உயர்தரத்திற்கு புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியில் இணைந்து கற்று பின்னர் அங்கு தொண்டராசிரியராகவும் பணியாற்றினார்.

1988க்கு பின்னராக குடாநாட்டில் ஏற்பட்ட போர்ச்சூழலினால் பாடசாலையின் கல்விச் செயற்பாடுகள் குழப்பமடையத் தொடங்கின. போர் அச்சுறுத்தல் காரணமாக ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றனர். இருப்பினும் மீத மிருந்த ஆசிரியர்களின் சேவையாலும், மாணவர் களின் ஊக்கத்தினாலும் க.பொ.த சாதாரண தர பரீட்சைகளில் மாணவர்கள் சித்தியடைந்து உயர்தர தேர்வுடன் பல்கலைக்கழகம் சென்றனர். அவர்களில் ஒருவர் உப அதிபர் திரு.ஐ.சிவராசாவின் வழிகாட்டுதலில் யாழ். இந்துக்கல்லூரி, இடைக்காடு மகாவித்தியா லயம் என்பவற்றில் க.பொ.த. உயர்தரத்தில் தேர்ச்சி பெற்று யாழ். பல்கலைக்கழக கணிதத் துறை விரிவுரையாளரானார்.

தொடர்ச்சியான போர் நடவடிக்கை காரண மாக, உப அதிபர் உட்பட ஆசிரியர்கள் இடமாற்றங்கள் பெற்றுச் சென்றனர். சிரேஸ்ட ஆசிரியராக இருந்த திரு.சு.நடராசா அவர்கள் உப அதிபராக பொறுப்பேற்றார். இவர் 1982 தொடக்கம் 2007 வரை ஆசிரியராக, உப அதிப ராக ஆற்றிய சேவை பாடசாலைச் சமூகத்தால் மதிக்கப்படுகிறது.

1995ல் ஆரம்பமான குடாநாடு தழுவிய போரினால், மக்களுடனும், மாணவர்களுடனும் பாடசாலையும் ஏதிலியாக இடம்பெயர்ந்தது. எமது பாடசாலை கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் மாலை நேரப்பாடசாலையாக, சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியுடன் இணைந்து செயற்பட்டது. அதிபர், உபஅதிபர், நான் என மூவர் கடமையாற்றினோம். ஏனைய ஆசிரியர்கள் வன்னி, வவுனியா, கொழும்பு என இடம்பெயர்ந் திருந்தனர். மாணவர்களும் தாம் தங்கியிருந்த இடங்களுக்கு அருகிலுள்ள பாடசாலைகளில் கல்வியைத் தொடர்ந்தனர். அவ்வாண்டு மேற் கொள்ளப்பட்ட சிறப்பு ஏற்பாட்டுக்கமைய, க.பொ.த சாதாரண தர பரீட்சையை தாம் தங்கியி ருந்த இடத்து பாடசாலைகளில் மாணவர்கள் எழுதினார்கள். அவ்வாறு தோற்றியவர்களில் இருவர் க.பொ.த உயர்தர சித்தியுடன் கல்வியி யற் கல்லூரிக்கும், ஒருவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கும் தெரிவாகினர்.

1996 மே மாதத்தில் மீண்டும் அரச நிறுவ னங்களின் செயற்பாடுகள் வழமைக்குத் திரும் பின. இருப்பினும் எமது பாடசாலைக்குச் செல் வதற்கு இராணுவ அனுமதி கிடைக்காததால், 1996 நவம்பர் வரை ஆவரங்கால் நடராஜராம லிங்க வித்தியாலயத்தில் இணைந்து செயற் பட்டோம். அக்காலத்தில் அப்பாடசாலையின் அதிபராக இருந்த திரு.சு.முத்துக்குமாரசுவாமி அவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பாடசாலைச் சமூகம் என்றும் நன்றிகூற கடமைப்பட்டுள்ளது. 95 மாணவர்களுடன் அதிபர், உப அதிபர், நான், புதிய நியமனத்தில் வந்த கணித ஆசிரியர் ஆகியோர் செயற்பட்டோம். அதிபர் திரு.த. மணி சுந்தரம் அவர்கள் கரவெட்டியிலிருந்து இராணுவ சோதனைகளை கடந்து துவிச்சக்கர வண்டியில் வரவேண்டிய துர்ப்பாக்கிய நிலையினால், மனவருத்தத்துடன் இடமாற்றம் பெற்று சொந்த ஊருக்குச் சென்றார்.

1996 நவம்பரில், கோப்பாய் கோட்டக் கல்விப்பணிப்பாளர், வலயக்கல்விப் பணிப்பா ளர், உதவிக்கல்விப்பணிப்பாளர் ஆகியோரின் பெருமுயற்சியால் எமது பாடசாலை மீண்டும்

தனது சொந்த இடத்திற்கு வந்தடைந்தது. 1996.12.01 ஆம் திகதி முதல் பாடசாலையின் அதிபராக நான் நியமனம் பெற்றேன். பாடசாலை வளாகத்திற்கு வந்தடைந்த போது, சொத்துகள் சிதைக்கப்பட்டும், ஆவணங்கள் வெளியில் வீசப் பட்டும், கட்டிடங்கள் இடிந்த நிலையிலும், தள பாடங்கள் தொலைந்த நிலையிலும் காணப் பட்டன. செய்வதறியாத நிலையிலும், நான், உப அதிபர், கணித ஆசிரியர் மூவரும் திடம்கொண்டு உள்ளனவற்றோடு செயற்படத் தொடங் கினோம். ஆவரங்கால் நடராஜ ராமலிங்க வித்தி யாலயத்தில் கடமையாற்றிய திரு.கு.ரவிச் சந்திரன் அவர்கள் புதிய ஆசிரியராக சுய விருப் பில் நியமனம் பெற்று எம்முடன் இணைந்தார். கல்வித்துறையினரும் பாடசாலைக்கான பௌதீக அபிவிருத்திகளை மேற்கொள்ள உதவிகளையும், ஆசிரிய நியமனங்களையும் விரைவுடன் மேற்கொண்டனர். பாடசாலைச் சமூகத்தின் நல்லுறவுடன் மாணவர் எண்ணிக் கையும், உதவிகளும் அதிகரித்தன. எமது இடைவிடாத உழைப்பிற்கும், அர்ப்பணிப்பிற்கும் மதிப்பளித்த அயற்பாடசாலைகள், கோப்பாய்க் கோட்ட பாடசாலை அதிபர்களினது கரிசனை யான உதவிகள் ஆசிரிய வளங்களிலும், பௌதீக வளங்களிலும் கிடைக்கப்பெற்றன. இதன்விளைவாக பாடசாலையின் கல்விச் செயற்பாடுகள் துரிதகதியில் வளர்ச்சியடைந் தன. அதிகளவான மாணவர்கள் க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடைந்தனர். சித்தி யடைந்த மாணவர்களினதும், பெற்றோரினதும் விருப்பிற்கமைய புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி, அச்சுவேலி மத்திய கல்லூரி, அச்சு வேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி, கோப் பாய் கிறிஸ்தவ கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, யாழ்.இந்துக்கல்லூரி ஆகியவற்றில் க.பொ.த உயர்தர கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்பு களையும் அனுமதிகளையும் பெற்றுக் கொடுத்தோம். அவர்களில் பலர், பல்கலைக் கழகங்களுக்கும், கல்வியியற் கல்லூரிகளுக் கும் தெரிவாகி உயர்நிலைகளை அடைந்தனர். மேலும், பாடசாலையின் வரலாற்றில் முதல் முறையாக 1998லும், அதற்கு பின்னரான ஆண்டு களிலும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பல மாணவர்கள் தேசிய பாடசாலைகளில் இணைந்து படிக்கும் வாய்ப் பினைப் பெற்றனர். கல்விச் செயற்பாடுகளோடு விளையாட்டுத்துறையிலும் எமது மாணவர்கள் வலய மட்ட வெற்றிகளைப் பெற்று பெருமை சேர்த்தனர். அந்த வெற்றிகளும் அவர்களின் க.பொ.த உயர்தரக் கல்விக்கான வாய்ப்புகளை பெற்றுக் கொடுத்தன.

இந்தக்கால கட்டத்தில் தென்மராட்சியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்த மாணவர்களை எமது பாடசாலை நேயமுடன் வரவேற்றது. அவர்களில் பலரும், க.பொ.த சாதாரண தர பரீட்சையில் சித்தி யடைந்து பல்கலைக்கழகம், கல்வியியற் கல்லூரி உள்ளிட்ட உயர்கல்விகளை பெற்ற னர். அந்த மாணவர்கள் இன்றும் எமது பாடசாலையுடன் நல்லுறவைப் பேணுகின்றனர்.

குடாநாட்டின் இதர பாடசாலைகளின் பௌதீக வளங்களுக்கு ஏற்ப எமது பாட சாலையை அபிவிருத்தி செய்யும் செயற்பாடு களை நாம் ஆரம்பித்தபோது, கல்வித் திணைக் களத்தின் பங்களிப்பும், எம்மால் அணுகிப் பெறப் பட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவி களும் பாடசாலைக்கு கிடைத்தன. அவற்றோடு, அக்காலத்து பாராளுமன்ற உறுப்பினர்களான திரு.மாவை.சேனாதிராஜா, திரு.சுரேஸ் பிரேமச் சந்திரன், திரு.எம்.கே. சிவாஜிலிங்கம், அக் காலத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரும் எமது பாடசாலைக்கு உதவிகளை மேற்கொண்டனர். Unicef, GTZ, Action Faim உள்ளிட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின்

உதவிகள் மூலம் பாடசாலையின் அடிப்படைத் தேவைகள் நிவர்த்தி செய்யப்பட்டன. குறிப்பாக சுவிஸ் நாட்டு உதவித் திட்டத்தில் பல வளங் களைக் கொண்ட மாடிக்கட்டிடம் (110X25) ஒன்றை பாடசாலையின் 50ஆம் ஆண்டு நிறைவை முன்வைத்து "பொன் விழா" மண்டப மாகப் பெற்றோம்.

எனது அதிபர் பணிக்காலத்தில், பாட சாலைக்கான நிரந்தரக் குடிநீர் வசதி, மின்னி ணைப்பு, மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மலசலகூட வசதிகள் பெறப்பட்டமை, பாட சாலைக்காணி அரசாங்க நிலஅளவைக்குட் படுத்தப்பட்டு உறுதியாக்கப்பட்டமை, விளை யாட்டு மைதானத்தை மக்களுடன் மாணவர்கள் இணைந்து மேற்கொண்ட சிரமதானம் மூலம் திருத்தியமைத்தமை, நிரந்தர வகுப்பறைக் கட்டிடங்கள் உருவாக்கப்பட்டமை, சமையல் கூடம் அமைக்கப்பட்டமை, கணணி அறையுடன் கணணி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டமை, சிறுவர்களுக்கான விளையாட்டு முற்றம் எமது பாடசாலையின் முதல் அதிபர் திரு.க.முருகேசு அவர்களின் நினைவாக அவரின் குடும்பத்தி னரிடமிருந்து பெற்றமை, முறைசாராக் கல்விப் பிரிவின் செயற்பாடுகளை ஆரம்பித்தமை, புலமைப்பரிசில் மற்றும் க.பொ.த சாதாரண தர பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களுக்கான கௌரவ விருதுகள் வழங்கப்பட்டமை, உதைப் பந்தாட்ட அணி வலயமட்ட இறுதிப்போட்டி வரை சென்றமை, விளையாட்டுப் போட்டிக்கும் பரிசளிப்பு நிகழ்வுக்குமாக நிரந்த வைப்பு நிதியை ஆரம்பித்து பெருநிதியாக்கியமை, பாட சாலை முதன்மை மாணவர்களை விருந்தினர் களாக அழைத்து கௌரவப்படுத்தியமை, மர தன் ஓட்டப்போட்டியை ஆரம்பித்துத் தொடர்ந்து நடாத்த வழிசெய்தமை, அதிகளவான தொண்ட ராசிரியர்களை உள்வாங்கியதோடு அவர்களுக் கான நிரந்தர நியமனங்களை பெற்றுக் கொடுக்க வழிசெய்தமை, மரணித்த மாணவர்களின் நினைவாக மரநடுகை செயல் திட்டத்தை ஆரம்பித்தமை, எமது பாடசாலைக்காக பெறப் பட்ட குழாய் நீர் விநியோகத்தை புத்தூர் கிழக்கு முதல் அச்சுவேலி வரை வியாபிக்க வழிசெய் தமை போன்ற வலுவுடைய செயற்பாடுகளை மேற்கொண்டோம்.

பாடசாலையின் நன்றிப் பெருக்குள்ள நிகழ்வான, எமது முதல் அதிபர் திரு.க.முருகேசு அவர்கள் அமரத்துவம் அடைந்தபோது அவரது புனித உடலை எமது பாடசாலையில் அஞ்சலி நிகழ்வுக்காக வைத்து எமது சமூகத்தின் இறுதி வணக்கத்தை வழங்கியிருந்தமை எனது அதிபர் கால நினைவுகளில் அழியாத நிகழ்வாகும்.

எனது ஓய்வின் பின்னர் அதிபராக நியம னம் பெற்ற திரு.கு.ரவிச்சந்திரன், திரு.க.ரவீந் திரன், மற்றும் தற்போதைய அதிபர் திரு. செந் தில் வடிவேல் ஆகியோரின் அர்ப்பணிப்புள்ள பணிகளும் கல்லூரிச்சமூகத்தாலும் மாணவர் களினாலும் நன்றியுடன் பார்க்கப்படுவதை ஊரவ னாக நான் அறிவேன்.

புதியதொரு மாற்றத்துக்காக எமது கிராம முன்னோடிகளின் எண்ணத்தினால் உருவாகிய எமது ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் இன்று வளர்ச்சி பெற்ற பாடசாலையாக நிமிர்ந்து நிற்கின்றது. எமது பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதன் தீர்க்க தரிசனமான நோக்கம், இன்று குடாநாட்டின் அனைத்து பாடசாலைகளிலும் நிறைவேறியிருக் கின்றமை நிறைவைத் தருகிறது.

ஆரம்ப நாள் மாணவனாக, கற்பித்த ஆசிரி யனாக, சேவையாற்றிய அதிபராக மனநிறை வுடன் எனது பாடசாலையை வாழ்த்துவதில் மகிழ்வடைகிறேன். இந்நேரத்தில் எமது பாட சாலைக்கு 1986ஆம் ஆண்டு தொடக்கம் நிறை

வான உதவிகளை வழங்கிய, வழங்கிக் கொண்டிருக்கும் கோட்டக் கல்விப் பணிப் பாளர்கள், வலயக்கல்விப் பணிப்பாளர்கள், மாகாண கல்விப்பணிப்பாளர்கள், கல்வி அமைச்சர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், செஞ்சிலுவைச் சங்கம் உள்ளிட்ட தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன் எமது சமூகத்தின் கலங்கரை விளக்கான எமது ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தை மேலும் மேம்படுத்துமாறும் வேண்டி நிற்கின்றேன்.

எனது அன்புக்கினிய ஆசிரியர்களே, எமது பாடசாலையைத் தேடி, நாடி வரும் மாணவர் களை இன்று போல் என்றும் அன்புடன் அர வணைத்து நிறைவான கல்வி புகட்டி கோடான கோடி புண்ணியத்தை பெற்று வளம்கொண்டு வாழ்கவென வாழ்த்துகின்றேன்.

பாடசாலைச் சமூகமே, எமது பாடசாலை யின் பெயரை நிலைபெறச் செய்த, 5ஆம் ஆண்டு தேர்வுப்பரீட்சை, 5ஆம் தரத்துக்கான புலமைப் பரிசில் மற்றும் க.பொ.த சாதரண தரத்தில் சித்தி யடைந்து உயர்நிலையடைந்த மாணவர்களை மதிப்பளிக்கும் வகையில் அவர்களின் படத் துடன் கூடிய காட்சிப்படுத்தலை மேற்கொள்வது பாடசாலையின் எதிர்கால மாணவர்களுக்கும் ஊக்கமளிக்கும் விதமாக அமையும்.

பாடசாலைக்கும், மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், அதிபர்களுக்கும், எம் அருகிருந்து அருள் பாலிக்கும் புவனேஸ்வரி அம்பாள் என்றும் துணைபுரிவாள்.

# பாடசாலை நிகழ்வுகளில் சில...















# தாய்மையின் தூய்மை

*ஆக்கம்*
*தெ. குபேந்தினி*
*தரம் - 10*

பூக்களை நீ சந்தேகப்படு - அவை
முட்களாக மாறலாம்
பாக்களை நீ சந்தேகப்படு - அவை
மரபுகளை மீறலாம்

சூரியனை நீ சந்தேகப்படு - அவை
மேற்கேயும் உதிக்கலாம்
தென்றலை நீ சந்தேகப்படு - அவை
புயலாகச் சீறலாம்

விண்ணை நீ சந்தேகப்படு - அவை
மண்ணில் வந்து விழலாம்
கண்ணை நீ சந்தேகப்படு - அவை
காணும் காட்சிகள் பிழையாகலாம்

காதலை நீ சந்தேகப்படு - அவை
கனவாகிப் போகலாம்
கடல்களை நீ சந்தேகப்படு - அவை
கண் முன்னே ஓய்ந்திடலாம்

நிலவை நீ சந்தேகப்படு - அவை
எரிநெருப்பாய் மாறலாம்
நிஜத்தை நீ சந்தேகப்படு - அவை
நிழலாகிப் போகலாம் ஆனால்
ஒன்றை மட்டும் உறுதியாய் நம்பு
அதுவே அன்னையின உன்னத அன்பு

# நாலும் இரண்டும்

***திரு.மு.சந்திரசேகரம் MA (Tamil)***
***ஒய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் (தமிழ்)***
***(பழைய மாணவன்)***

"ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" எனவும், "பழகு தமிழ் சொல்லருமை நாலிரண்டில்" எனவும் வரும் பழமொழிகள் இவ்விரண்டு நூல்களின் மேன்மையையும் சிறப்பினையும் நன்கு விளக்கும். மேற்கூறிய இரண்டு நூல்களும் சங்க கால 18 கீழ்கணக்கு நூல்களுள் அடங்குவன. இரண்டு அடிகளை கொண்ட குறள் வெண்பாக்களால் ஆகிய நூல் திருக்குறள் எனப் பெயர் பெற்றது போல் நான்கடி வெண்பாக்களால் ஆகிய நூல் நாலடியார் எனப் பெயர் பெற்றது. கீழ்க்கணக்கு நூல்களில் பெரும்பாலானவை அற நூல்களாகும். இயற்கை நெறிக் காலமான சங்க கால பாடல்களில் காதலும், வீரமும் முக்கிய பொருள்களாக பேசப்பட்டன. சங்ககால இறுதியில் மக்கள் வாழ்வை நெறிப்படுத்தும் அற நூல்கள் தோன்றும் சூழ்நிலை இருந்ததனால் அற நூல்கள் பல தோன்றின என்பர்.

திருக்குறள் கருத்துக்கள் பண்டைய நூல்கள் பலவற்றிலும் எடுத்தாளப்பட்டிருப்பதை அறியலாம். சாத்தனார் மணிமேகலையில் "தெய்வம் தொழாஅள்" என்ற குறளை எடுத்துக்கூறி நம் தெய்வப்புலவரை "பொய்யில் புலவன்" என்று சுட்டிப்போந்தமை தமிழுலகம் நன்கறிந்ததொன்று. அறத்தின் வேரையும், அதன் உயிர்ப்பையும் பற்றி திருவள்ளுவர் நூல் செய்துள்ளாராதலின் அஃது என்றும் நின்று நிலவுவதாயும், என்றும் இன்பம் பெருகுவதாயும் விளங்குகின்றது. அறத்தின் பரிசை உள்ளவாறு விரித்துரைப்பதில் திருக்குறள் இணையற்ற நூல். உலகத்துத் தோன்றிய அறநூல்கள் எல்லாவற்றுள்ளும் அறத்தை எஞ்சாது முழுத்துறவிரித்த பேரற நூல் இஃதொன்றே என்று கொள்ளலாம். வாழ்க்கைக்கு வேண்டிய அறம், பொருள், இன்பம் எனும் மூன்றையும் அறத்துப்பால் பொருட்பால், காமத்துப்பால் எனும் முப்பால்களாக வகுத்துக் கூறி உள்ளார். அறத்துப்பாலில் 38 அதிகாரங்களும், பொருட்பாலில் 70 அதிகாரங்களும், காமத்துப் பாலில் 25 அதிகாரங்களுமாக மொத்தம் 133 அதிகாரங்களில்1330 குறட்பாக்கள் உள்ளமை யாவரும் அறிந்நதே.

நாலடியார் எனும் நூல் நாலடி நானூறு என்றும் கூறப்படும். சமண முனிவர் பலர் இயற்றிய வெண்பாக்களுள் 400 வெண்பாக்களை பதுமனார் என்பவர் தெரிந்து நாலடியாரில் 40 அதிகாரங்களாக வகுத்து அமைத்தனர் என்று கூறப்படுகிறது. இந்நூலில் உள்ள உவமைகள் சங்க கால உவமைகளைப் போலச் சிறப்புடையனவாகவும், பொருளை தெளிவாக புலப்படுத்துவதற்கு ஏற்றவையாகவும் அமைந்துள்ளன. இந் நூலில் உள்ள செய்யுள்கள், குறட்பாக்களை போன்று ஒன்றைக் கூறும் பொழுது , அது படிப்போர் உள்ளத்தில் நன்கு பதியுமாறு சுருங்கிய சொற்களிலே தெளிவாக கூறுகின்றன.

எக்காலத்திற்கும் பொருந்தும் அறக்கருத்துக்களை அழகுற எடுத்துக்கூறும் மேற்கூறிய இரு நூல்களிலும் யாவருக்கும் பயிற்சி இருக்க

வேண்டும் என்பது எனது வேணவா , அற வாழ்வு , நீதி நெறி எனும் பண்பட்ட மனப்பான்மையையும் வாழ்வைத் திறம்பட ஓர்ந்து செயற்படுத்தல் போன்ற பலவற்றையும் வளர்க்கும் எடுத்துக் கூறும் இந்நூல்கள் முழுமையாக நோக்கி இன்புறுதல் அரிதென்பதால் அவற்றுட் சிலவற்றை விருப்புக்கருதி எடுத்துக்காட்டலாம் என்று எண்ணுகிறேன்.

வாழ்வில் இறைபக்தி வேண்டும். திருக்குறள் "கடவுள் வாழ்த்து" என்னும் அதிகாரத்தில்

**" அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு"**

என்று தொடங்குகிறது. எழுத்துக்கள் அகரமாகிய முதலை உடையன. அது போல. உலகம் ஆதிபகவானாகிய முதலை உடையது என்று கூறினார். இறையன்றி ஓரணுவும் அசையாதென்பது ஆன்றோர் வாக்கு. அதற்கமைய இறை உணர்வுடன் வாழவேண்டுமென்பதை இது வலியுறுத்துவதைக் காணலாம். விருப்பு வெறுப்புக் கடந்த இறைவனது அடிகளைச் சேர்ந்தவர்களுக்கு எக்காலத்தும் துன்பம் வாராது இறைவனே காப்பான் என்பதை,

**"வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்பை இல"**

என்னும் குறட்பா மூலம் கூறினார்.

"அறன் வலியுறுத்தல்" என்னும் அதிகாரத்தில் வரும் குறட்பா ஒன்று வருமாறு

**" அன்றறிவாம் என்னா தறஞ்செய்க மற்றது**
**பொன்றுங்கால் போன்றாத் துணை"**

வாழ்வோர்க்கு அறஞ்செய்தல் இன்றியமையாதது. முடிந்தளவு அறஞ்செய்து வாழவேண்டும். இப்பொழுது இளையவராய் இருக்கின்றோம், இறக்கும் காலத்தில் செய்வோம் எனக் கருதாமல் அறத்தினை நாள்தோறும் செய்யுங்கள். அஃது இவ்வுடம்பிலிருந்து உயிர்போங் காலத்தில் அதற்கு அழிவில்லாத்துணையாக நிற்கும் என்று பொருள்.

வாழ்வில் இனிமையாக பேசுவதற்கு இணை எதுவுமில்லை, இனிய சொற்களையே வாழ்வில் பேச வேண்டும் என்பதை "இனியவை கூறல்" எனும் அதிகாரத்தில் அழகாக கூறுவதை காணலாம். இத்தகைய உயர் பண்பை கூறும் இரு குறட்பாக்களை இங்கு நோக்கலாம்.

**"இனிய உளவாக இன்னாத கூறல்"**
**கனியிருப்பக் காய் கவர்ந்தற்று"**

அறம் பயக்கும் இனிமையான சொற்கள் தனக்கு உளவாக இருக்க அவற்றை கூறாது பாவம் பயக்கும் இன்னாத சொற்களை ஒருவன் கூறுவது இனிய கனிகள் தன்னிடமிருக்க அவற்றை உண்ணாது காய்களை நுகர்ந்தது போலும் என்னும் இப் பாடலுக்குப் பரிமேலழகர் உரை கூறுகின்றார்.

மேலும்

**"அல்லவை தேய அறம் பெருகும் நல்லவை**
**நாடி இனிய சொலின்"**

ஒருவன் பிறர்க்கு துன்பத்தை தராத சொற்களை மனத்தால் ஆராய்ந்து இனிமையாக பேசுவானானால் அவனுக்கு பாவங்கள் தேய்ந்து அறம் வளரும் என்று பொருள் கொள்ளலாம்.

செய்ந்நன்றி மறவாமல் இருப்பது ஒரு உயர்ந்த அறமாகும், செய்ந் நன்றி மறந்து வாழ்ந்தோர் எக்காலத்தும் உள்ளனர் என்பது நடைமுறையில் காணும் தன்மை தான், வாழ்க்கை நன்னெறி கூற வந்த திருவள்ளுவர் செய்ந்நன்றி மறக்காமல் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்த "செய்ந்நன்றி அறிதல்" எனும் அதிகாரத்தை அமைத்துள்ளார். இவ் அதிகாரத்தில் எல்லோர் மனங்களையும் ஈர்க்கும் இரு குறட்பாக்களை இங்கு நோக்கலாம் ,

**"செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**
**வானகமும் ஆற்றல் அரிது"**

ஒருவன் தான் ஓர் உதவியும் செய்யாத போது தனக்கு ஒருவன் செய்யும் உதவி

நிலையை எண்ணிப் பார்க்கிறார் வள்ளுவர். அவர் பார்வையில் அவ்வாறு வேறொருவன் தனக்கு செய்த உதவிக்கு மண்ணுலகத்தை யும், விண்ணுலகத்தையும் கொடுத்தாலும் ஈடாகாது என்று செய்யாமல் செய்த உதவியை மனமார போற்றுகின்றார்.

இது போன்றே

**"காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்**
**ஞாலத்தின் மாணப்பெரிது"**

எனும் குறட்பாவில் வேண்டும் காலத்தில் செய்த உதவியைப் பற்றி கூறுகின்றார். "ஒரு வனுக்கு இறுதி வந்தவெல்லைக்கண் ஒருவன் செய்த உபகாரம், தன்னை நோக்க சிறிதாய் இருந்ததாயினும் அக்காலத்தை நோக்க நில உலகத்தினதும் மிகப்பெரிது" என்று இக் குறட் பாவிற்கு பரிமேலழகர் உரை கூறியுள்ளார்.

வாழ்க்கையில் கல்வி ஒருவருக்கு எல்லாச் செல்வங்களையும் தரும் கல்வியைப் போற்றாத இலக்கியங்களே இல்லை. இதனாலேயே திரு வள்ளுவர் "கல்வியை" "ஒருவருக்கு மம்மர் அறுக்கும் மருந்து" என்று கூறியுள்ளார். திருக் குறளில் கல்வி எனும் அதிகாரத்தில்10 குறட் பாக்கள் உள்ளன. இவற்றில் இரு குறட்பாக் களை இங்கு பார்க்கலாம்.

**"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு**
**புண்ணுடையர் கல்லாதவர்"**

கற்றோரே முகத்தில் இரண்டு கண்களை உடையோராக இருக்கின்றனர். மற்றுக் கல்லாத வர் முகத்தில் இரண்டு புண்களை உடையர் என்று கூறுகின்றார்.

மேலும் கல்வியின் சிறப்பையும், கற்றோரது உயர்வையும் விளக்கும் குறளைக் காண்போம்.

**" உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்**
**அனைத்தே புலவர் தொழில்"**

யாவரையும் அவர்கள் விரும்புமாறு தலைப் பெய்து இனி இவரை எப்பொழுதும் காண்போம் என நினைக்குமாறு பிரிந்து செல்லும் தன்மை வாய்ந்தவர்கள் கற்றறிந்தோர்கள் என்று புகழ்ந் துரைக்கின்றார்கள்.

இவ்வாறு கல்வியைப் போற்றும் திருக் குறளைப் போன்றே அழகுபட நாலடியாரும் கல்வியைப் போற்றுவதைக் காணலாம்.

**"குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்**
**மஞ்சள் அழகும் அழகல்ல- நெஞ்சத்து**
**நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்**
**கல்வி யழகே அழகு"**

கறுத்துச் செறிந்த முடியின் அழகும், கொச் சக மடிப்பும் கோடும் அமைந்த ஆடையின் அழ கும், பொன்போலும் நிறத்திற்கு மேலும் பொலி வூட்டும் மஞ்சள் அழகு உயர்ந்தோரால் அழகெ னப்படா;, நடு நிலையுடன், "யாம் நெஞ்சத்தினால் நல்லெம்" என்னும் நிறைவை உண்டாக்கும் கல்வி அழகே ஒருவருக்கு அழகாகும். என்பது இப்பாடலின் பொருள்.

மேலும் கல்வியின் சிறப்பைக் கூறும் நாலடி யார் பாடலொன்றைக் காணலாம்.

**"வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை**
**மிக்க சிறப்பின் அரசர் செறின் வவ்வார்**
**எச்சம் என ஒருவன் மக்கட்குச் செய்வன**
**விச்சை மற்றல்ல பிற"**

இதன் பொருளாவது, கல்வி வைக்கப்பட் டுள்ள இடத்தில் இருந்து பிறரால் திருடிக் கொள் ளப் பெறாது அள்ளி அள்ளி வழங்கினாலும் குறைந்து போகாது, பேரரசரே சினங்கொண்டார் எனினும் அவராலும் கவர்ந்து கொள்ளப் பெறாது, ஆதலால் ஒருவன் தன் மக்கட்குச் செல்வம் என்று தரத்தக்கது கல்வியன்றி வேறில்லையாம்.

கல்வி பற்றி நாலடியார் கூறும் கருத்துக் களை மேற்கூறிய பாடல்களால் அறிகின்றோம்.

மனிதன் வாழ்வில் எல்லோரும் , உள்ளோரும் எக்காலத்தும் உள்ளனர். இல்லானை இல்லாளும் வேண்டாள், ஈன்றெடுத்த தாயும் வேண்டாள் என்று கூறுவதை அறிவோம். வறுமையால் அடையும் துன்பங்கள் பற்பல என்பதால் வறுமையையும், அதனைக் குறைக்கும் ஈகையையும் நூல்கள் எடுத்துக் கூறியுள்ளன. வறியோர்க்கு வேண்டியதைக் கொடுக்கும் பண்பு ஈகை எனப்படும். அதனை வள்ளுவர்,

**"வறியார்க் கொன் றீவதே ஈகை மற்றெல்லாங்**
**குறியெதிர்ப்பை நீர துடைத்து"**

இதன் பொருள், ஒரு பொருளுமில்லாதவர்க்கு அவர் வேண்டிய தொன்றைக் கொடுப்பதே பிறர்க்குக் கொடுத்தலாகும், அஃதொழிந்த எல்லாக் கொடையும் தனக்கு லாபம் கருதி, தனக்கு எந்த வகையிலாயினும் திரும்பக் கிடைக்கும் எனக் கருதி கொடுக்கப்படுதலாகும்.

திருவள்ளுவர் ஒருவன் தன் புண்ணியக் கணக்கில் வரவைச் சேர்த்து வைக்கும் செயலாக ஈகையைக் கூறுகின்றார்.

**"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்**
**பெற்றான் பொருள் வைப்புழி"**

இக்குறளுக்கு, வறியாரது மிக்க பசியை அறநோக்கித் தீர்க்க, பொருள் பெற்ற ஒருவன் அதனைத் தனக்குதவ வைக்குமிடம் அவ்வறமே யென்று பரிமேழலகர் பொருள் கூறுகின்றார்.

நாலடியாரில் ஈகை பற்றிக் கூறும் பாடலொன்றில், வெறுக்கத்தக்க முதுமைப் பருவமும், நம் கண்முன்னே சாவும் நாளும் உள, மேலும் தம்பெருமை, வலிமை முதலியவற்றை அழிக்கவல்ல நோய்களும் உள, ஆதலால் கையில் உள்ள போது வீணே அதனைப் பெருக்க அலையாதீர், இறுக்கிப் பிடிக்காதீர், பகுத்து உண்பீர் என்று எக்காலத்திற்கும் பொருந்த உண்மையைக் கூறும் பாடலைக் காணலாம்.

**"முன்னே சாநாள் முனிதக்க மூப்புள்**
**பின்னரும் பீடழிக்கும் நோயுள - கொனனே**
**பரவன்மின் பற்றன்மின் பார்த்துண்மின் யாதுங்**
**கரவன் மின் கைத்துண்டாம் போழ்து"**

இது போன்று, ஈகைப் பண்புடையாரையும் , ஈகைப் பண்பில்லாரையும் அழகான உவமை மூலம் சிறப்பாக விளக்கிக் காட்டும் கீழ்வரும் பாடலும் படித்தின் புறத்தக்கது.

**"நடுவூருள் வேதிகை சுற்றுக் கோட்புக்க**
**படுபனை அன்னார் பலர் நவ்வ வாழ்வான்**
**குடி கொழுத்தக் கண்ணுங் கொடுத்துண்ணா மாக்கள்**
**இடு காட்டுள் ஏற்றப்பனை"**

இதன் பொருள், பலரும் விரும்புமாறு ஈகைத் தன்மையுடன் வாழ்பவர் ஊர் நடுவே அமைந்த பொதுமன்றத்தினால் சூழப்பெற்ற பயன் தரும் பெண்பனையைப் போன்றவர். தங்குடும்பம் செல்வத்தால் செழிப்புற்ற போதும் பிறர்க்குக் கொடுத்துண்ணாதவர் இடுகாட்டில் உள்ள காய்க்காத ஆண் பனைக்கு ஒப்பானவர்.

மேலும் இரு நூல்களிலும் முன்பு செய்த பாவங்களால் வரும் ஊழ்வினை பற்றிக் கூறப்படுகின்றன. இவ்வாறு கூறுதல் ஒருவன் புண்ணிய வழியில் நடக்க வேண்டும், பாவங்கள் செய்யக் கூடாது என்று சமூகத்தைத் திருத்தும் நோக்கிலேயே ஆகும். இக்கருத்துக்கள் திருக்குறளில் "ஊழ்" என்றும் நாலடியாரில் பழவினை என்றும் பேசப்படுகின்றன திருக்குறள் ஊழ் என்னும் அதிகாரத்தில் பரிமேலழகர் "இருவினைப் பயன்" செய்வதனையே சென்றடைவதற்கேதுவாகிய நியதி என்று கூறகின்றார். திருக்குறளில் ஊழ் பற்றிக் கூறும் பாடல்களை நோக்கலாம்.

**"ஆ கூழால் தோன்றும் அசைவின்மை**
**கைப்பொருள் போ கூழால் தோன்று மடி"**

ஒருவருக்குக் கைப்பொருள் சேர்வதற் குரிய ஊழால் முயற்சியுடையவனாம் தன்மை யும், அஃது அழிவதற்கான ஊழால் வறுமையும் உண்டாகும் என்பது மேற்கூறிய குறட்பாவின் பொருள்.

மேலும் ஊழின் பெரு வலியைக் கூறும் குறட்பாவை நோக்கலாம்.

**"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று**
**சூழினுந் தான்முந் துறும்"**

ஊழை விலக்குவதற்கு வேறு ஒரு உபா யத்தை நாடினாலும், நாடிய அவ் உபாயத் தாலோ, அல்லது வேறு வழியாகவோ ஒருவன் ஊழை விலக்க எடுக்கும் முயற்சியை வீழ்த்தி, தானே வென்று ஊழ் ஒருவனைத் தாக்கும் என்று நாம் தேர்ந்து கொள்ளலாம்.

பழவினையின் வலிமை பற்றி நாலடியாரில் சுவையான பாடல் ஒன்று உண்டு. அதனைக் காண்போம்.

**"பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று**
**வல்லதாம் தாய்நாடிக் கோடலைத் தொல்லைப்**
**பழவினையும் அன்ன தகைத்தேதற் செய்த**
**கிழவனை நாடிக் கொளற்கு"**

பசுக்கள் நிறைந்த கூட்டத்துள் ஓர் இளங் கன்றைச் செலுத்தி விட்டாலும் அக்கன்றுகள் தன் தாய்ப் பசுவைத்தேடிக் கொள்வதில் மிக்க தேர்ச்சியுடையதாம். அது போல் தொன்று தொட்டுவரும் வினை தன்னைச் செய்த உரிமை யாளனைத் தொடர்வதில் அக்கன்றுக்கு ஒப்பான தேயாம் என்று இப்பாடலுக்குப் பொருள் கொள் ளலாம். இப்பாடல் மூலம் ஒருவன் செய்தவினை செய்தவனைச் சென்றடைவதையும், பழவினை யின் வலிமையையும் உணரலாம். இது மனிதர் களுக்கு நாலடியார் ஒரு பாடமாகக் கூறுகின்றது.

அறமானது மக்களுக்கு உலக வாழ்வில டையும் பொருள், இன்பம் என்பனவற்றையும் தந்து இறுதியில் அடையும் வீட்டின்பத்தையும் தரவல்லது என்பர். சீரிய கொள்கைப்படியான வாழ்க்கைக்குத் திருக்குறள், நாலடியார் மூதுரை, நன்னெறி, திரிகடுகம் முதலிய நீதி நூல் கள் வழிகாட்டுகின்றன. இன்றைய காலகட்டத் தில் இளஞ்சமுதாயத்தினரும், மாணவர்களும் அறிய வேண்டும் என்னும் நோக்கில் மனதைத் தொடும் திருக்குறள், நாலடியார் என்னும் இரு நூல்களில் இருந்து சில பொருள்கள் பற்றி நோக் கினோம். மேலும் திருக்குறள், நாலடியார் ஆகிய நூல்களை விருப்புடன் கற்றுத் தெளிந்து பயன் பெறுக.



பாடசாலையின் ஆளணியினர்-2017

# இயற்கையில் உள்ள காதல்

*ஆக்கம்*
*க. கேனசி*
*தரம்-11*

உன் கண்களால் என்னை
ஈர்த்து வதம் செய்கிறாய்
என் கண்கள் இரண்டும் பிடிக்கவில்லை
உன்னைப் பார்க்க இரண்டு கண்ணும் போதாதே

சிற்பி போல கற்பனைகளையும்
கவிதைகளையும் செதுக்கவைக்கிறாய்
உன்னை பூமியிலே வேலி என்று ஒன்றை
போட்டு பிரிக்கின்றனர் - ஆனால்
உன் அழகை யாராலும் கட்டி வைக்க முடியாது

உன்னை ரசிப்பவர்களில் நானும்
ஓர் ரசிகை ஆகி விட்டேன்
புல்லின் மேல் பனித்துளி அது முத்துக்களை விட
பெறுமதியானது அதனை காலை கதிரவன் வந்து கலைக்கின்றான்

தொட்டாச்சுருங்கி தன்னை தொட்டதும்
வெட்கத்தில் சுருங்கும் அழகும் இயற்கையின் அதிசயமே

# மாணவர் மையக் கலைத்திட்டம் – ஆரம்பக்கல்வி ஒரு பார்வை

*பா.சத்தியநாதன்*
*ஆசிரியர்*
***B.Ed***

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக கல்வி விளங்குகிறது. இக் கல்வியைப் பெறுவதும் அடிப்படை உரிமைகளில் ஒன்றாக காணப்படுகிறது. இன்றைய கால கட்டத்தில் எல்லோரும் கல்வியைப் பெறுவதில் விழிப்புடன் இருக்கின்றனர். கல்வியைப் பெற்றுக் கொண் டால் நல்வாழ்வு வாழவும் சமூகத்தில் நன் மதிப்பை பெற்றுக் கொள்ளவும் சிறந்த தொடர் பாடல்களை ஏற்படுத்திக் கொள்ளவும் முடியும் என்ற உணர்வலைகள் எல்லோர் மத்தியிலும் காணப்படுகிறது.

அடிப்படைக் கல்வியான ஆரம்பக் கல்வியை எல்லோரும் கற்றிருக்க வேண்டும். அதனால் எழுதவும் வாசிக்கவும் தன்னை அடை யாளப்படுத்திக் கொள்ளவும் தெரிந்திருக்க வேண்டும். ஆகவே எல்லோருக்கும் கல்வி என்ற வாசகம் முன்வைக்கப்பட்டுள்ளது. இதில் பால் வேறுபாடு கிடையாது. அனைவரும் குறைந்த பட்சம் கல்வியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இது அரசினால் முன்மொழியப்பட்டுள்ளது.

ஒரு பிள்ளையினுடைய எல்லா விதமான விருத்திகளும் கல்வியின் மூலம் குறிப்பிடத்தக் களவிற்குச் சாத்தியமாகும் என்பதுபொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதனுள்ளும் ஆரம்பக் கல்வியானது தனியொருவருடைய பாதுகாப்பான எதிர்காலம் (Secured Future) நல்வாழ்வு (Health Life) தன்னம்பிக்கையுட னான வாழ்க்கை (Self Reliant Life) என்பவற் றுக்கு துணை செய்யும் என்பதனை விஞ்ஞான ரீதியிலான பலவேறு ஆய்வுகளும் இன்று வெளிப் படுத்தியுள்ளன.

ஆரம்பக் கல்வியினை "ஒரு பிள்ளைக்கு முதன் முதலாக திட்டமிட்டு ஒழுங்கமைக்கப் பட்ட கலைத்திட்டத்திற்கேற்ப வழங்கப்படும் முறைசார்கல்வி" என்று சுருக்கமாக வரைவிலக் கணப்படுத்தலாம். இது பொதுவாக 1-5 வரையி லான வகுப்புக்களை உள்ளடக்கியதாகும். இவ் ஆரம்பக்கல்வி செயற்பாடானது எதிர்கால கல்விச் செயற்பாடு, தொடர் கல்விச் செயற்பாடு, உயர் கல்விச் செயற்பாடு என்பவற்றுக்கான பொருத்தமான ஊடகம் என்பவற்றுடன் ஒரு பிரஜையினுடைய தரமான வாழ்விற்கான அடிக் கட்டுமானமாகவும் அமைகின்றது என்று குறிப் பிடப்படுகின்றது அன்றியும் இக்காலம் தனியொ ருவருடைய ஆளுமை விருத்திக்கான பொருத்த மான காலமாகவும் கொள்ளப்படுகின்றது. ஆரம்ப நிலையில் சரியான பொருத்தமான கல்வியும் அனுபவங்களுக்கான சந்தர்ப்பங்களும் கிடைக் குமிடத்து ஒரு பிள்ளை விரும்பத்தக்க பழக்க வழக்கங்கள். மனப்பாங்கு விழுமியங்கள், திறன்கள், சுயசிந்தை திறனாய்வு, சமூக இசை வாக்கம் பெற்று எதிர்கால நல்வாழ்வுக்கான அடிப்படைகளைப் பெற்றுக் கொள்கின்றது என்றும் எடுத்துக்காட்டப்படுகின்றது.

மேலும் இன்றைய சூழலில் ஆரம்பக் கல்வி நிலமையே கல்வியின் 4 முக்கிய தூண்களான

1) அறிவதற்குக் கற்றல் (Learning to know),
2) செய்வதற்குக் கற்றல் (Learning to do)
3) ஒன்றிணைந்து வாழ்வதற்கு கற்றல் (Learning to live together)
4) போலக் கற்றல் (Learning to be)

என்பவற்றுக்கு அடிப்படையாவும் ஆரம்பக் கல்வியின் பாலான முக்கியத்துவம் எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறானவையாக அவற்றை முடிந்தளவில் அடைவதற்கு வழங்கப்படும் கல்வியானது தரமானதாக அமைய வேண்டியது மிக மிக அவசியம்.

இலங்கையின் கல்வி அமைப்பை நோக்குமிடத்த கல்விக்கும் தொழில் வாய்ப்புக்குமிடையே இசைவின்மை தொடர்ந்து காணப்பட்டது. இதன் வெளிப்பாடாக 1980களில் தென்னிலங்கை இளைஞர்களிடையே கொந்தளிப்பும் இளைஞர் புரட்சியும் ஏற்பட்டன. இதன் விளைவாக இளைஞர் சம்மந்தமான ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இவ்வாணைக்குழு கல்வி சம்பந்தமான பிரச்சனைகளை ஆராய்ந்து 1990ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தனது அறிக்கையை சமர்ப்பித்தது.

அத்துடன் அரசு மாறினாலும் அதன் செல்வாக்கினால் கல்விக் கொள்கைகளிலும் மாற்றங்கள் ஏற்படாத வகையில் நாட்டின் தேசிய கல்விக் கொள்கையை வகுப்பதற்காக தேசிய கல்வி ஆணைக்குழுவை நிறுவ வேண்டும் என சிபார்சு செய்தது. தேசிய கல்வி ஆணைக்குழுவானது கல்விக்கான குறிக்கோள்களையும் தேர்ச்சிகளையும் வெளியிட்டது.

பின்னர் ஜனாதிபதியின் துரித செயற்குழு ஒன்று உருவாக்கப்பட்டது. இக் குழு 1997ஆம் ஆண்டு பொதுக் கல்வியில் சீர்திருத்தங்களை ஏற்படுத்தும் பொருட்டு "பொதுக் கல்வி சீர்திருத்தம் 1997" என்ற அறிக்கையை வெளியிட்டு நடைமுறைப்படுத்தும் வகையில் செயற்பாடுகளை மேற்கொண்டது. ஆரம்பக் கல்வியில் தற்போதைய சீர்திருத்தத்துக்கான அடிப்படையாக இது அமைந்தது. இந்த சீர்திருத்தத்தின் அடிப்படையில் ஆரம்பக் கல்வி பாடத்தின் கட்டமைப்பு உள்ளடக்கம் என்பவற்றை நோக்குவோமாயின் கல்வியானது ஆசிரியரை மையமாகக் கொண்டிராது பிள்ளையை மையமாக கொண்டதாக அமைய வேண்டும். அதாவது பிள்ளையின் உளம், திறன்கள், மனப்பாங்குகள், வல்லமைகள் ஆகியவற்றை விருத்தி செய்வதையே முக்கிய நோக்கமாக கொள்ள வேண்டும். இந்த வகையில் புதிய கலைத் திட்டமானது மாணவர் மைய கலைத்திட்டமாக மாற்றிமைக்கப்பட்டுள்ளது.

ஐந்து ஆண்டுகளைக் கொண்ட ஆரம்பக் கல்விப் புலம் கலைத்திட்ட விருத்தியினதும் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளினதும் வசதி கருதி மூன்று முதன்மை நிலைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதாவது முதன்மை நிலை 1 (தரம் 1,2 ) முதன்மை நிலை 2 (தரம் 3,4 ) முதன்மை நிலை 3 (தரம் 5) ஆகும். வழி காட்டப்பட்ட விளையாட்டு, செற்பாடு, எழுத்து லேலை ஆகிய மூன்று கூறுகள் ஒவ்வொரு கட்டத்திலும் இருக்கும். கற்பித்தல் கற்றல் செயன்முறையில் இம் மூன்று கூறுகளின் விகிதங்கள் ஒரு கட்டத்திலிருந்து மற்றக் கட்டங்களுக்கு செல்லும் போது மாறும்.

முதலாவது கட்டத்தில் விளையாட்டினூடாகவும் செயற்பாடுகளினூடாகவும் கற்பதற்கு அதிகளவு நேரத்தை செலவு செய்வதோடு குறைந்தளவு எழுத்து வேலையுடன் (Desk work) கற்றலை மேற்கெள்வர். இரண்டாவது கட்டத்தில் மூன்று கூறுகளிற்கும் சமமான

முக்கியத்துவம் கொடுக்கப்படும். ஆனால் மூன்றாவது கட்டத்தில் எழுத்து வேலைகளுக்கு அதிகளவு முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

ஒழுக்கங்களில் திட நிலையைப் பேணல், விழுமியங்களை வலியுறுத்தல், சகிப்புத் தன்மையை உருவாக்கல், ஏனைய சமூக குழுவினருக்கும் அவர்களது கலாச்சாரங்களுக்கும் மதிப்பளித்தல், ஒருவரோடு ஒருவர் ஒற்றுமையாக வாழல் போன்றவை இம் மூன்று கட்டங்களினூடாகவும் சீராக இழையோடிக் காணப்படும்.

தரம் 1இல் பிரவேசிக்கும் பிள்ளையை இனம் காண்பதற்கு வசதியாக செயற்பாடுகள் இனம் காணப்பட்டுள்ளன. பிள்ளையை பாடசாலையில் அனுமதிக்கும் வேளையில் ஆசிரியர் ஒரு தொடரான சிறப்பாக வடிவமைக்கப்பட்ட விளையாட்டுப் பொருட்களையும் செயற்பாடுகளையும் முன்வைப்பர். இவை ஆரம்பத்திலேயே பிள்ளையின் திறமைகளை இனம்காண உதவும். இது ஆரம்ப நிலையிலேயே பிள்ளைகளுடைய தேவைகளை அறிந்து பயிற்சி நெறியை திட்டமிட ஆசிரியருக்கு உதவும்.

கற்றல் கற்பித்தலில் முழுக்காலப் பகுதியிலும் முறை சாரா மதிப்பீட்டு முறை மூலம் தொடர்ச்சியாக மதிப்பீடுகள் நடாத்தப்படும் ஒவ்வொரு கட்டத்தின் முடிவிலும் பிள்ளை பெற்றுக்கொண்ட தேர்ச்சிகளை தீர்மானிப்பதற்கு தேவையான மதிப்பீடுகளின் பட்டியல் ஆசிரியரிடம் இருக்கும். இது ஆசிரியர் தனது கற்பித்தலின் வெற்றியின் தரத்தை அறிந்து கொள்ளவும் மேலும் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வும் வழி கோலும்.

வகுப்பை அடிப்படையாக கொண்ட கணிப்பீட்டுக் கட்டமைப்பு தயாரிக்கப்பட்டுள்ளதோடு கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் முழுக் காலத்திலும் தேர்ச்சிகளின் மதிப்பீட்டுக்கு வேண்டிய பொருட்களும் பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன. ஆசிரியரால் தயாரிக்கப்படும் சோதனைகள் மற்றும் அடைவுச் சோதனை ஆகியவற்றை நடாத்துவதற்கு ஆசிரியரைப் பயிற்றுவதற்குரிய வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மாணவரின் செயலாற்றுகையை மதிப்பீடு செய்யும் போது பிரதான கட்டம் ஒன்றில் பின்பற்றப்படும் அணுகுமுறைக்கும் அக் கட்டத்தின் பின் கையாளப்படும் அணுகுமுறைக்கும் இடையில் தெளிவான வித்தியாசம் உண்டு. பிரதான கட்டம் ஒன்றில் தொடர் மதிப்பீட்டுத் திட்டம் பயன்படுத்தப்படும் பிள்ளைகளை மனச்சஞ்சலனத்திற்குள் ஆழ்த்துகின்ற காலத்துக்கு காலம் இடம் பெறும் முறைசார் சோதனைகளை எழுத வேண்டும். என்ற அச்சுறுத்தலின்றி சாதாரண வகுப்பறை நிலைமைகளின் கீழ் பிள்ளையின் வகுப்பறை முன்னேற்றத்தை ஆசிரியர் அவதானித்துப் பதிவு செய்வதே இம் மதிப்பீட்டுச் செய்முறையாகும்.

பிள்ளைகளின் தனிப்பட்ட பலம் பலவீனம் என்பவற்றில் கவனஞ்செலுத்தாது ஒரு பிள்ளையை மற்றுமொரு பிள்ளையுடன் ஒப்பிடுவதன் மூலம் உள வளர்ச்சிக்கு ஊறு விளைவிக்கக் கூடிய வகையில் சோதனைப் பெறுபேறுகளை பயன்படுத்தல் போன்ற நடவடிக்கைகளிலீடுபடுதலை தவிர்ப்பதில் கவனஞ்செலுத்தி உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் விருத்தி பெறும் போது இலகுவான கட்டங்களில் அடிப்படைத் தகைமைகளில் பிள்ளைகளின் ஆற்றல்களைப் படிப்படியாக வளர்ப்பதற்கு ஆசிரியருக்கு உதவும் முகமாக கலைத்திட்ட உள்ளடக்கத்தை ஏறுவரிசைப் படிகளில் குறிப்பதும் ஒவ்வொரு பிரதான கட்டத்தின் இறுதியிலும் மாணவர்களிடம் விருத்தி செய்யப்பட்டிருக்க வேண்டும் என விதந்துரைக்கப்பட்ட அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகள் வெளியிடப்பட்டுள்ளன. அத்

தேர்ச்சிகளை கட்டியெழுப்புவதற்குப் பொருத்த மான அடித்தளத்தை இட்டுச் செல்லும் கலைத் திட்டமாகவும் தேர்ச்சி சார்ந்த கலைத் திட்டமாக வும் உள்ளது.

ஆரம்பக் கல்வியை சரியான முறையில் தொடராது போனால் தொடர்ந்து மேல் நிலைக் கல்வியை முன்னெடுத்துச் செல்ல முடியாது. மேலும் கல்வியில் விரக்தியுற்று பாடசாலையில் இருந்து இடை விலகிச் செல்ல வேண்டிய நிலை யும் உருவாகின்றது. இதனை நிவர்த்தி செய்யும் முகமாக எல்லாப் பாடங்களிலும் மாணவர் முன் னேற்றம் அடையப்பட வேண்டிய அத்தியவசிய கற்றல் தேர்ச்சி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத் தேர்ச்சியானது மாணவனின் கற்றலை மேலும் கட்டியெழுப்பவதற்கும் நற்பிரஜையாக வாழ்வதற்கும் தேவையானவை என கருதப்படும் தேர்சிகளாகும்.

சகல மாணவர்களுக்கும் குறைந்த பட்சம் அத்தியவசிய கற்றல் தேர்ச்சியை விருத்தி செய்ய வேண்டி உள்ளது. ஆரம்பத் தரங் களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட தேர்ச்சிகளை ஆரம்ப கல்வி ஆசிரியர்களினாலேயே பூர்த்தி செய்யப்பட வேண்டும். சிறந்த முறையில் கல் வியை பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் அடிப் படைத் தேர்ச்சிகளை ஆரம்ப நிலையிலிருந்தே விருத்தி செய்து கொள்ள வேண்டும். கற்க வேண்டியவற்றை கற்றுக் கொள்ளாமல் மேல் வகுப்புக்கு சென்று கற்கும் போது கற்றல் தொடர் பான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடு கிறது. இவ் அடிப்படைத் தேர்ச்சிகள் அறிவு திறன் மனப்பாங்கு விழுமியங்கள் ஆகியவற்றின் கூட்டுக் கலவையாகும். இவ் அம்சங்கள் பல் வேறு மட்டங்களிலும் இருக்க வாய்ப்புள்ளது. சில தேர்ச்சிகள் திறன் சார்ந்ததாகவும் இருக்க முடியும். ஒவ்வொரு முதன்மை நிலையை பூர்த்தி செய்யும் மாணவர்கள் அனைவரும் இத் தேர்ச்சி களில் பாண்டித்தியம் அடைவதே பிரதான நோக்கமாகும்.

அத்தியவசிய கற்றல் தேர்ச்சிகள் அனேக மானவை இலகுவானதாகும். அவை மாணவர் களின் கல்வியை திருப்திகரமான தாக்கிக் கொள்ள மிக மிக இன்றியமையாததாகும். எல்லா மாணவர்களாலும் விருத்தி செய்து கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிளே இதுவாகும்.

இத்தேர்ச்சிகள் முதன்மை நிலை 1இல் - 40 தேர்ச்சிகள், முதன்மை நிலை 2இல் - 52 தேர்ச்சி கள், முதன்மை நிலை 3இல் -56 தேர்ச்சிகள் என பாடவாரியாக தயாரிக்கப்பட்டுள்ளது. தொடர்பா டல் தேர்ச்சி, சுற்றாடல் தேர்ச்சி, சமய ஒழுக்க விழுமியப் பண்புகள் தேர்ச்சி, விளையாட்டும் ஓய்வும் தேர்ச்சி கற்றலுக்காக கற்றல் தேர்ச்சி, ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சி, வேலை உலகிற்கு தயார்படுத்தல் தேர்ச்சி என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

அத்தியவசிய கற்றல் தேர்ச்சிகளில் சகல மாணவர்களும் பாண்டித்தியம் அடைய வேண் டும் என்பதை இலக்காக கொண்டு ஒவ்வொரு முதன்மை நிலையையும் ஒரே ஆசிரியரிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. குறித்த தேர்ச்சியில் பாண்டித்தியம் அடையாத மாணவர்களை அடை யும் நிலைக்கு கொண்டு வருவதற்கு அவர் களுக்கு ஏற்படுகின்ற கற்றல் இடர்பாடுகளை இனங்கண்டு ஒவ்வொரு மாணவனுக்கும் பொருத்தமான பரிகார கற்பித்தல் முறைகளில் கற்பித்து பாணடித்தியம் அடைய வைப்பது ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களின் மிகப் பொறுப்பான வேலையாகவும் உள்ளது.

பாட விடயங்களைப் பொறுத்தவரையில் தாய்மொழி, சமயம், கணிதம், சூழல் சார்ந்த

செயற்பாடுகள் யாவும் சேர்ந்த ஒன்றிணைந்த கலைத்திட்டமே பயன்படுத்தப்படும். பிள்ளையின் பூரண விருத்திக்கு மொழி, கணித தேர்ச்சிகளுடன் வேறு சில தேர்ச்சிகளும் விருத்திசெய்யப்பட வேண்டியது அவசியமாகும்.

அதாவது அழகியல் ஆக்கம், விஞ்ஞானம், விழுமியம், உடல் விருத்தி, சுகாதாரம் சார்ந்த தேர்ச்சிகள். இத் தேர்ச்சிகளை தனித்தனி பாட அலகுகள் மூலம் முன்வைப்பதை விட பிள்ளைகளுக்கு பொருத்தமான கருப்பொருட்கள் மூலம் வெளிக்கொணர்ந்து எய்துவதே சிறந்தது என ஏற்றுக்கொள்ளப்பட்டது. 16 கருப்பொருட்களை கொண்ட சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் எனும் பாடப்பரப்பு முன்பை விட ஒன்றிணைக்கப்பட்ட பண்பைக் கொண்டதாக காணப்படுகிறது.

ஆரம்ப வகுப்புகளுக்கு ஊடாக மாணவர்கள் சுற்றாடலைக் கற்கும் போது பல்வேறு விளைவுகளை பெற்றுக் கொள்கின்றனர். இவை பிள்ளையினுடைய சுற்றாடல் பற்றிய தேடலுக்கு அதனோடான அறிவு, திறன், மனப்பாங்கு விருத்திகளை பேணலுக்கும் மிகுந்த வரப்பிரசாதமாகிறது. அந்த வகையில் சுற்றாடல் கல்வியானது மாணவர்கள் ஏனைய திறன்களையும் ஒன்றிணைந்து அடைய வைக்கின்றது.

சுற்றாடல் பாடமூடாக மாணவர் தம்மையும் தம்மை சூழ உள்ள பௌதீக இயற்கை வளங்களையும் அறியக் கூடிய சாத்தியக் கூறுகள் அதிகமாக உள்ளது. இயற்கை நிகழ்வுகளையும் அதன் பரிணாம விளைவுகளையும் நேரடியாக விளங்கிக் கொள்கிறது. இதனால் பொதுவான சுற்றாடல் பற்றிய மேலோட்ட அறிவினையும் ஆரோக்கியமான விளைவுகளையும் மாணவன் பெற்றுக் கொள்கின்றான்.

பிள்ளையானது இயற்கையோடு ஒட்டி வாழ்வதால் உற்று நோக்கும் ஆற்றலை பெறுகிறது. இதில் பலதரப்பட்ட விடயங்கள் பிள்ளையினால் உற்றுநோக்கப்படுகிறது. (Observation) உதாரணமாக மரங்கள், பறவைகள், விலங்குகள், ஊர்வன, மிதப்பவை, நீந்துபவை, அசைபவை போன்ற இயற்கை கூறுகள் முக்கிய செல்வாக்கினை பிள்ளையின் சுற்றாடல் அறிவில் பங்கெடுக்கின்றன.

சுற்றாடலில் காண்பவற்றை அறிக்கைப் படுத்தும் ஆற்றலைப் பிள்ளை பெற்றுக்கொள்கிறது. குறித்த இயற்கைப் பொருட்களை பாகுபடுத்தி அறிக்கைப்படுத்துவதற்கு பிள்ளை முனைகிறது.

சுற்றாடல் செயற்பாடுகளை வகுப்பறைச் சூழல் மற்றும் நடைமுறைச் சுற்றாடலில் பிள்ளையானது தனது ஆற்றலுக்கும் அறிவுக்கும் இணங்க அளவீடு செய்யவும் மதிப்பீடு செய்யவும் உபகரணங்களைப் பயன்படுத்தவும் ஆற்றலைப் பெறுகின்றது. இவை பிள்ளையின் நுண்ணறிவுத் திறனை வளர்க்கவும் அப் பிள்ளையின் ஆராய்வுகளை மேம்படுத்தவும் கால்கோளாய் அமைகிறது.

கோலங்களை கண்டுபிடிக்கவும் இனம் காணவும் பிள்ளை ஆற்றல் பெறுகிறது. தாவரப் பகுப்புக்களையும் பறவை இனங்களையும் வானிலை, காலநிலை மாற்றங்களை அறியவும், கண்டுபிடிக்கவும் இச் சுற்றாடல் பயனுடையதாகிறது.

சுற்றாடல் கல்வியினை ஆசிரியர் வகுப்பறையில் மாணவர் மத்தியில் செயற்படுத்துகையில் அல்லது களச் செயற்பாடுகளை மேற்கொள்கையில்

தொடர்பாடல் திறன் வளர்ச்சியடைகிறது. பிள்ளை தனது சம வயது குழுக்களுடன் தொடர்புகளை மேற்கொள்வதோடு தனக்கு அவ்வப்

போது எழுகின்ற சந்தேகங்களை தீர்த்துக் கொள்வதற்காக ஆசிரியரிடமும் தொடர்பாடலை ஏற்படுத்திக் கொள்கிறது.

மேலும் குழுச்செயற்பாட்டை சுற்றாடல் என்ற பாடத்தினூடாக பிள்ளை மேற்கொள்ளும் போது விட்டுக்கொடுத்தல் ஏற்றுக்கொள்ளல் விவாதித்தல் அத்துடன் அக் குழுவுடன் இணைந்து செயலாற்றும் பண்பையும் விருத்தி செய்கிறது.

இறுதியாக சுற்றாடலில் நிகழும் மாற்றங்களை அவற்றிலுள்ள ஊடாட்டங்கள், கோலங்கள் போன்றவற்றை தன்னுடைய அனுபவக் கல்வியூடாகவும் பெற்றுக்கொள்கிறது. இதில் மழைக் காலம், குளிர் காலம், காற்று வீசும் திசை, முகில் ஓட்டம், வெள்ளிகள், சூரியன் போன்ற விடயங்கள் அடங்குகின்றன. இக் கலைத்திட்டமானது மாணவர்களின் அறிவை விருத்தி செய்து அதனூடாக சிறந்த மனப்பாங்கினை (Attitude) வளர்க்கின்றது என்பதே உண்மையாகும்.

செயற்பாட்டுக் கற்றலின் போதும் விளையாட்டின் போதும் பொருத்தமான சொல் வளத்துடன் தாய்மொழியுடன் ஆங்கிலப் பேச்சு மொழியையும் கலந்து வகுப்புகளில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களும் பயன்படுத்துவதற்கான ஒரு சூழலை ஏற்படுத்துவதற்காக முதன்மை நிலை 1இல் செயற்பாட்டடிப்படை வாய் மொழி ஆங்கிலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கணித பாடத்துடனும் வாய்மொழி ஆங்கிலம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் தேசிய மொழி ஒன்றை இரண்டாவது மொழியாகவும் முறைசார் விதத்திற் கற்பித்தலை அறிமுகப்படுத்தியுள்ளது. முதன்மை நிலை 2 இலிருந்து முறை சார் ஆங்கிலம் சேர்க்கப்பட்டுள்ளது.

தரம் 1 இலிருந்து தொடர்ச்சியாக பாட இணைச் செயற்பாடுகளுக்கும் தரம் 5இல் பிள்ளைகளின் விருப்புக்கும் தேவைக்குமேற்ப பொருத்தமான விருப்புப் பாடங்களை கற்பதற்கும் கால அட்டவணையில் வசதிகள் அளிக்கப் பட்டுள்ளன. மனிதன் ஒரு சமூகப் பிராணி. பாடசாலை சமூகத்தில் இருந்தே அவன் தனது சமுதாய வாழ்க்கைக்கான பயிற்சியை பெறுகின்றான். பாடசாலை வாழ்க்கையே அவனது சமூக வாழ்க்கைக்கான ஆரம்பமாகக் கூட அமைகின்றது. எனவே பாடசாலைக்கு வரும் ஒவ்வொரு பிள்ளையும் முழுமையான பயனை பெற்றுக் கொள்ள வேண்டும். இங்கு பாடசாலையில் வெறுமனே கல்வி அறிவை மட்டும் பெற்றுக் கொண்டால் போதாது. சவால் நிறைந்த இவ்வுலகில் உடல், உள, சமூக, பண்பாட்டு ஆளுமை என சகல வளர்ச்சிகளுடன் பூரண மனிதனாக வாழக்கூடிய ஆற்றலைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இவ் ஆற்றல்களை வகுப்பறையில் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டால் மட்டும் அவர்களால் பெற்றக்கொள்ள முடியாது. இவை பாடசாலையில் அமுல்படுத்தப்படும் பாடவிதானத்தின் மூலமாகவும் இணைப்பாடவிதான செயற்பாடுகள் மூலமுமே அடையப்பட வேண்டும்.

பிள்ளைகள் தாம் கற்கும் பாடசாலையிலும் சரி அல்லது தாம் வாழும் பிரதேசத்திலும் சரி விளையாடுவதற்கான சந்தர்ப்பங்கள் தமது ஆக்க முயற்சிகளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புகள் கிடைக்காவிட்டாலும் கூட முடிந்த வரை தமது ஒத்த வயது பிள்ளைகளுடன் விளையாட்டுகளிலும் கூட்டு முயற்சிகளிலும் ஈடுபடுவதை நாம் அநேகமானகக் காண்கிறோம். பிள்ளைகளிடம் இயல்பாகவே இதற்கான ஊக்கமுள்ளது என்பது உளவியளாளர்களின் கருத்தாகும். இதனை 18ஆம் நூற்றாண்டிலேயே சில கல்விச் சிந்தனையாளர்கள் வலியுறுத்தி உள்ளனர். இவர்களுள் மொண்டிசோரி முறையை உருவாக்கித் தந்தவரும் உள மருத்துவருமான மொண்டிசோரி அம்மையார் அறிவுக்கு வழி திறக்

கும் வாசல்களை புலன்களுக்கும், தசைளுக் கும் நன்கு பயிற்சியாக்கக்கூடியதாக கல்வி அமைதல் வேண்டும் என எடுத்தியம்பி உள்ளார்.

குழவிப் பூங்கா எனும் கல்வி முறையை ஆரம்பித்து வைத்த புரோபல் பிள்ளையின் வளர்ச்சிக்கு மதிப்பளித்து அவர்களை நல்வழி யில் வளர்க்க விளையாட்டு மூலம் கல்வியளித் தல் அவசியம் என்றும் இம்முறையால் பிள்ளை யின் உடலும் உள்ளமும் ஒருங்கிணைந்து வளர அது காரணமாக அமையும் என்கிறார். மேலும் அபிநயம், இசை, இயக்கம் என்ற அடிப்படையில் பிள்ளைகள் ஆடிப்பாடி மகிழ்கின்றனர். அதில் ஆர்வம் அதிகரிக்க அவர்களின் ஆற்றலும் அறிவும் வளர்ச்சி அடைகின்றன. இவ்வாறான செயல்களால் கூட்டு மனப்பான்மை மற்றவர் களை மதித்து நடக்கும் பண்பு ஒழுக்கக் கட்டுப் பாடு என்பன பிள்ளைகளிடம் ஏற்பட்டு அவர்கள் இயல்பாகவே வளர்ச்சியடைகின்றனர் என்கி றார். கீழைத்தேய கல்வி சிந்தனையாளரான மகாத்மாகாந்தி அவர்கள் கல்வி என்பது குழந்தைகளிடமிருந்து முழு மனிதனை உரு வாக்குவது அவனது ஆளுமை. எனவே மனித னின் உடல் உள்ளம் ஆன்மா இருதயம் என்ப வற்றை ஒருமித்த வகையில் விருத்தி செய்து ஆளுமையடையச் செய்தல் பாடசாலைக் கல்வி யின் நோக்கமாக அமைய வேண்டும் என சுட்டிக் காட்டுகின்றார்.

எனவே அறிவைப் பெற்றுக்கொள்வதுடன் ஏனைய பல்துறை ஆற்றல்களையும் வளர்த்துக் கொள்ள களமாக பாடசாலைகள் அமைய வேண்டும் என்பது பற்றி மேற்குறிப்பிட்ட கல்வி யாளர்கள் தமது ஆய்வுகளுடாக நிரூபித்துக் காட்டியுள்ளனர். அது மட்டுமன்றி இவ்வாறான கூட்டு முயற்சிகளிலும் விளையாட்டுகளிலும் ஆர்வத்துடன் பங்குபற்றும் பிள்ளைகளே வகுப் பறை கற்றல் வேளைகளிலும் சுறுசுறுப்புடன் செயற்படுகின்றனர் என்பதும் நிரூபிக்கப் பட்டுள்ளது. ஆகவே கற்றல் கற்பித்தல் செயற் பாட்டுக்கு புறம்பான இணைப்பாடவிதான செயற் பாடுகளின் முக்கியத்தவமும் அவசியமும் பற்றி இன்று பாடசாலைகளில் உணரப்பட்டுள்ளது.

மாணவர்களின் உடல் உள விருத்தியில் செல்வாக்கு செலுத்தும் விதத்தில் உடலியக்கச் செயற்பாடுகள் எனும் வேலைத் திட்டம், செயற் பட்டு மகிழ்வோம் என்ற கைந்நூலின் ஊடாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

தரம் 1 மாணவர்கள் தரம் 6 மாணவர்களு டன் இடைத் தாக்க செயற்பாடு மூலம் சுமூகமான தொடர்பாடல், பொறுப்புணர்ச்சி தலைமை தாங் கும் பண்பையும் விருத்தி செய்தல், பிள்ளை, பிள்ளை மூலம் கற்றல் போன்ற திறன்கள் விருத்தி செய்யப்படுகின்றன.

தரமான கல்வியானது தரமான ஆசிரியத் துவ உள்ளீடுகளிலேயே தங்கியுள்ளது. இன்று கல்வியானது பொதுவாக பாடசாலைகளின் வகுப்பறைகளில் கற்பித்தல், கற்றல் செயற்பாடு களினூடாக ஆசிரியர்களிடமிருந்து மாணவர் களுக்குக் கையளிக்கப்படுகின்றது. இக் கைய ளிப்பானது முன்னய நிலமைகள் போன்று ஆசிரியரொருவருடைய ஒருவழிச் செயற்பாடாக இடம்பெறுவதில்லை. இன்று விரிவாக கூறுவதா யின் முகத்திற்கு இருவழிச் செயற்பாடாக அமை கின்றது. மேலும் சிறப்பாக சொல்லப் போனால் ஆசிரியர் தான் முகம் பார்த்து கற்பித்தல் (Face to face teaching) தகவல்கள் தரவுகளை மட்டும் வழங்குதல், பாட நூல்களை மட்டும் மையமாக வைத்துக் கற்பித்தல் என்ற பழைய நிலைமை களை ஓரளவிற்கு புறந்தள்ளி ஆசிரியர் மாணவ ருடைய மட்டுமே அறிவுத் தேடலின் பங்குதா ரராக அமையாது அதில் மாணவர்களுக்கான பங்கினையும் அழுத்துபவராகத் திகழ வேண்டி

யுள்ளது. இவ்வாறான நிலைமையில் ஏற்கனவே பல அறிஞர்கள் குறிப்பிட்டது போன்று ஆசிரியரின் வகிபங்குகள் பலவாறாக்கப்பட்டுவிட்டன.

காலத்திற்கு காலம் சிறந்த கற்பித்தல் என்பதற்கான விளக்கங்கள் பலவாறாக முன் வைக்கப்பட்டாலும் அதன் பயனாளிகளாக இருப்பவர்கள் மாணவர்களே. கல்வியூடாகக் காலத்திற்கு பொருத்தமானதாக எதிர்பார்க்கப் படும் விரும்பத்தகு மாற்றங்கள் தேர்ச்சிகள் மாணவர்கள் சார்பாக பெற்றுத் தரப்படல் அவசியம், இன்றைய சூழலில் 7 அடிப்படைத் தேர்ச்சிகள் மாணவர்களுக்கு பெற்றுத்தரப்படல் வேண்டும் என இனங்காணப்பட்டுள்ளன. அவையாவன,

- ☞ தொடர்பாடல் தேர்ச்சி
- ☞ சூழல் தொடர்பான தேர்ச்சி
- ☞ ஒழுகலாறு சமயம் தொடர்பான தேர்ச்சி
- ☞ விளையாட்டும் ஓய்வு நேரப் பயன்பாடும் தொடர்பான தேர்ச்சி
- ☞ கற்கக் கற்றல் தொடர்பான தேர்ச்சி
- ☞ ஆளுமை தொடர்பான தேர்ச்சி
- ☞ வேலையுலகுக்கு பொருத்தப்பாடான தேர்ச்சி

இத்தகைய தேர்ச்சிகளை மாணவர் பாட சாலை காலத்தில் பெறத்தக்கதாக பாடத்துடன் தொடர்புடைய பிரச்சினைகளையும் எண்ணக் கருக்களையும் பொருளுள்ள வகையில் கற்பித்தல் மாணவர்களை மையமாக கொண்ட கற்றல் கற்பித்தல் செயன்முறைகளை ஒழுங்கமைத்தல் கற்றல் அனுபவங்களை பொருளுள்ள வகையில் முன்வைப்பதற்கான செயற்பாடுகளை ஒழுங்கமைத்துக்கொள்ளல் போன்ற அம்சங்களை கவனத்திற் கொண்டு ஓர் ஆசிரியர் செயற்படவேண்டும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

ஆரம்பக்கல்வி பாடத்தின் கட்டமைப்பு உள்ளடக்கம் என்பன பிள்ளையின் தன்னம்பிக்கை வளர்ச்சி ஏற்படுவதை உறுதிப்படுத்துகின்றது. சுய கற்றல் முறைகளை உருவாக்கவும் பெற்றுக்கொண்ட அறிவுகள் மூலம் ஒழுங்கமைத்து நிலைமாறாத தத்துவங்களையும் மனித விழுமியங்களையும் உருவாக்கிக் கொள்ளும். ஐந்து வருட முடிவில் பிள்ளையின் அடிப்படைத் தகைமைகளும் திறன்களும் நன்றாக விருத்தி அடைய முடியும். பிள்ளைகளுக்கு கல்விப் படிமுறையின் அடுத்த கட்டத்திற்கு செல்ல ஆர்வத்தை கூட்டுகின்றது. எனவே ஆரம்பக் கல்வி பாடத்தின் கட்டமைப்பு உள்ளடக்கம் என்பன தற்கால மாணவர் அபிவிருத்தியை அடிப்படையாக கொண்டது என்றால் மிகையாகாது.

# தினமும் Plan பண்ணினதால் நான் Expert...

*பொன். விஜயகுமாரன்*
*பௌதீகவியல் விரிவுரையாளர்.*
*(முன்னாள் பௌதீகவியல் ஆசிரியர்*
*யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை)*

அந்த ஆசிரியையின் பெயர் "சரஸ்வதி ரீச்சர்" எல்லோரும் அவரை அப்படித்தான் அழைப்பார்கள். இதனால் அவரின் முழுப்பெயர் அவரிடம் கற்ற மாணவர்கள் ஒருவருக்கும் தெரியாது. பெயருக்கேற்ப உண்மையில் தனது மாணவர்கள் எல்லோருக்கும் கல்வியை வழங்கும் கடவுள் தான் அவர். அன்று 10.09.2017 ஞாயிற்றுக் கிழமை இரவு 10 மணி அன்றே தனது வீட்டு செயற்பாடுகள் அனைத்தையும் செவ்வனே நிறைவு செய்து முடித்தவளாய் நாளைய தனது பாடங்களை திட்டமிடுவதற்காய் அமர்ந்து கொள்கிறாள். மேசை மீது ஒரு பேனை, தனது பாடத்திட்டமிடல் கொப்பி, பாடப்புத்தகம், ஆசிரியர் கைநூல் என்பவற்றுடன் நாளை 7ஆம் பாடம் தரம் 9 மாணவர்களுக்கு விஞ்ஞானம் உள்ளது. அத்துடன் தரம் 10 மாணவர்களுக்கு 8ஆம் பாடம் விஞ்ஞானம் உள்ளது. ஏனோ இந்த இரு வகுப்பறைகளினதும் எண்ணங்கள் மற்றைய பாடவேளைகளை விட மேலோங்கி இருப்பதற்கு அந்த 7ஆம்,8ஆம் பாடவேளைக்குரிய நேரம் தான் முக்கிய காரணம் ஆகும். அதிலும் 8ம் பாட நேரத்தில் 15 வயது மாணவர்களுக்கு விஞ்ஞானம், கணிதம் பாடங்களை கற்பிப்பதற்கு நேரசூசி போட வேண்டாம் என அதிபர் பகுதித் தலைவர் இதற்கு கூறியது ஞாபகம் வந்தது. அப்போது தான் எல்லா ஆசிரியர்களும் எட்டுப் பாடவேளைகளும் எந்தப் பாடத்தையும் கற்பிக்கலாம் என தான் வாதாடியது ஞாபகத்தில் வந்தது.

திட்டமிடலில் நன்கு தேர்ச்சி பெற்றவர் என்பதனால் தரம் 10 மாணவர்களுக்கு 8ஆம் பாடவேளை அந்த விஞ்ஞான பாடத்திற்கான திட்டமிடலில் முக்கியப்படுத்தப்பட்ட மூன்று விடயங்களையும் பின்வருமாறு சுருக்கமாக குறித்துக் கொண்டார்.

1. பாடப் பிரவேசம்
2. பாட வளர்ச்சி
3. மதிப்பிடலும் பின்னூட்டலும்

பின்னர் பாடப்பிரவேசம் என்பதை தனியே சிந்தித்தார். இது இவ்வாறு அமைய வேண்டும்.

1. முன்பு கற்ற விடயங்களை மீட்டல் செய்ய வேண்டும்
2. எல்லா மாணவர்களையும் ஈர்க்கும் விதமாக அமைய வேண்டும்
3. இன்று கற்பிக்க உள்ள பாடத்தை நோக்கி மாணவர் கவனத்தை குவியப்படுத்தி தேடலுக்கு ஊக்கியாக அமைய வேண்டும்.

இந்த விடயங்களுடன் பாடப் பிரவேச செயற்பாடு ஆடலாகவோ, பாடலாகவோ ஏன் நடனமாகவோ, கதை சொல்வதாகவோ, விளையாட்டாகவோ அமையவேண்டும் என்பதில் அசையா நம்பிக்கை கொண்டவளாகவும் அதனை ஐந்து நிமிடத்தில் நிறைவேற்றக்கூடிய வகையில் தனது திட்டமிடலில் உட்புகுத்தினார்.

பாட வளர்ச்சி இதனுள் உள்ளடக்கப் பட்டுள்ள கற்றல் பேறுகள் எவை என்பதை தான் அறிந்திருந்த போதும் அதனை ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைப் பார்த்து உறுதிப் படுத்தினார். அதன் உள்ளடக்கங்களை பாடப் புத்தகத்தை பார்த்து மேலும் நினைவு படுத்தினார்.

பாட உள்ளடக்கத்தை எவ்வாறு கட்டம் கட்டமாக படிமுறையில் ஒழுங்குபடுத்தலாம் என்பதையும் ஒவ்வொரு கட்டத்திலும் மாணவர் களின் தேடல் எவ்வாறு அமைய வேண்டும் என்ப தில் கூடிய கவனத்தையும் செலுத்தியும் மூன்று படிநிலைகளில் தேடலை மாணவர்களே குழுக் களாக தேடலில் ஈடுபடுவதற்கு தீர்மானித்த வராக அதற்குரிய அறிவுறுத்தல்களையும் எழுத வேண்டும் என குறித்தவராய் பாட வளர்ச்சிப் பகுதியை 25 நிமிடங்களில் குழுச் செயற்பாடாக நிறைவு செய்வதற்காகவும் அதற்கு தேவை யான அறிவுறுத்தல் படிவத்தையும் அவ்வறி வுறுத்தல் படிவத்திற்கேற்ற வேலை நிகழ்கின் றது என்பதை உறுதிப்படுத்துவதற்கும் மாணவர் கள் விடும் தவறான கோலங்களை இனம் காண்ப தற்கும் வேலைப் பத்திரம் ஒன்றையும் தயார் செய்து முடித்தார்.

மாணவர்கள் தேடலில் ஈடுபட்டு செயற்பாடு களினூடாக கற்கும் போது தான் அவர்கள் அருகில் சென்று அவர்களின் நலிவு வலிவுகளை இனங்கண்டு உடனடியாவே அவற்றை மேம் படுத்த ஆவன செய்யும் “கணிப்பீடு” என்பதை மேற்கொள்ள சில கணிப்பீட்டு வினாக்களை தனது அனுபவத்தின் அடிப்படையில் அருகிலே குறித்துக் கொண்டார்.

அடுத்ததாக மதிப்பிடலுக்காக கவர்ச்சிகர மான வேறுபட்ட மதிப்பீட்டு நுட்ப முறைகளை கைக்கொள்வதன் ஊடாக மாணவர்களை வெறுப்படைய விடாமல் மதிப்பீட்டை செய்து மாணவர்கள் எல்லோரையும் அளவீடு செய்து அதன்பால் தனது கற்பித்தல் முறையையும் அன்றைய பாடவேளையில் தனது செயற் பாட்டை மதிப்பீடு செய்வதற்கு உகந்த நல் மதிப் பீட்டையும் தயார் செய்தார்.

மதிப்பீட்டின் அடிப்டையில் மாணவர் களுக்கு நல்ல பின்னூட்டல் வழங்க வேண்டும் என்ற எண்ணத்தையும் குறித்து வைத்தார்.

இந்தப் பாடப்பரப்பை எவ்வாறு மாணவர் கள் அன்றாட வாழ்வில் வீட்டில் பயன்படுத்தலாம் என்பதையும் அடுத்த பாட வேளைக்குரிய அத்தி வாரமாக இன்றைய பாட முடிவு அமைய வேண் டும் என்பதற்கிணங்க பின் தொடர் வேலையை யும் சுருக்கமாக குறித்து வைத்து தனது திட்டமிடலை நிறைவு செய்தார்.

அட.... நான் அரை மணி நேரத்தில் இந்த திட்டமிடலை இன்று செய்து முடித்து விட்டேனே. ம்... ம்... இதில் நான் expert தினமும் plan பண்ணி னால் தான் அதில நான் expert...

அவரின் மனம் புளகாங்கிதம் அடைகிறது. சரியாக இரவு 10.30. மணி கொஞ்சம் தண்ணீரை அருந்தி விட்டு உற்சாகமாக உறக்கத்திற்குச் சென்றார்.

# இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள்

*ஆக்கம்*
*ற.யாழினி*
*தரம்-09*

குடும்பங்களின் சொத்தான சிறுவர்களைப் பெற்றோரும் மற்றோரும் அன்பாகவும் பண்பாக வும் நடத்தல் அவசியம். எல்லோரதும் மனதைக் கவருபவர்கள் சிறுவர்கள். சிறுவர் சமுதாயம் சிறப்பாக அமையின் நமது எதிர்காலச் சமூகம் சிறப்புறும். எனவே சிறுவர்கள் நற்பண்புடைய வர்களாகவும் நல்லியல்பு உடையவர்களாக வும் வளர்க்கப்பட வேண்டியது அவசியம். இன்று எமது சிறார்கள் பலவித பிரச்சினைகளுக்கு ஆளாகி வருவதால்தான் சிறுவர் தினம் கொண் டாடப்படுகிறது. ஒரு நாளில் அவர்களின் நலத் தைப்பேண மக்கள் அனைவரையும் விழித் தெழச் செய்கின்றனர். இன்றைய சிறுவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பெற்றோர் மிகுந்த அக்கறை காட்டுகின்றனர். பாடசாலைகளும் சமய நிறுவனங்களும் வேறு பல வெளிநாட்டு நிறுவனங்களும் சிறுவர் நலனுக்காகத் துரித மாக ஈடுபடுகின்றனர். அண்மையில் இலங்கை யில் யுனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் ஜனாதிபதி அவர்களால் ஆரம்பித்து வைக்கப் பட்ட சிறுவருக்கான தேசியத் திட்டத்தில் சிறுவ ரின் கல்வி, சுகாதாரம், விளையாட்டு, குடும்பச் சூழல் போன்ற பல விடயங்களில் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் வலியுறுத்தப் பட்டு அதற்கான வேலைத் திட்டங்கள் முன் வைக்கப்பட்டுள்ளன.

இவை நாடளாவிய ரீதியில் சிறாரின் முன் னேற்றத்திற்கு உதவுவன. எனினும் சாதாரண மாக மக்கள் தத்தம் சிறார்களில் கண்ணும் கருத்துமாகவே இருக்கின்றனர். பெற்றோர் வீடு களில் சிறாரை நல்வழிப்படுத்துவதில் கூடிய அக் கறை காட்டுகின்றனர். கல்வி, விளையாட்டு, பொழுதுபோக்கு, இறைசிந்தனை என்பவற்றில் பிள்ளைகளுடன் தாமும் இணைந்தே ஈடுபடு வதைக் காணமுடிகிறது. மேலதிக வகுப்புக்கள், கலைப்பயிற்சிகள் எனச் சிறார்களுடனேயே அலைந்து திரிகிறார்கள். இது சிறுவர் மேல் கொண்ட அதிக அக்கறையையும் வழிநடத் தலையும் உணர்த்துகின்றது. வீடுகளில் நடை பெறும் பண்டிகைகள் , சமய விழாக்களின் போது பெற்றோருக்கும் சகோதரருக்கும் சிற்றுண்டி பரி மாறி கொண்டாட்டங்களில்கலந்து கொள்கின்ற னர். வேற்று சமூகங்களுடன் பழகுவதால் சமூக விழுமியங்கள், புரிந்துணர்வு, உதவும் மனப் பாங்கு என்பன வளர்கின்றன.

இவ்வாறே பாடசாலைகளிலும் ஆசிரியர் சிறார்களுக்கு நற்பழக்கங்களை எடுத்துரைக் கின்றனர். தலைமைத்துவப் பண்புகளையும் சமூக விழுமியங்களையும் மன்றங்கள் மூலமும் விழாக்கள் மூலமும் வளர்க்கின்றார்கள். பாட சாலையில் நிகழும் நிகழ்ச்சிகளுக்கான ஒழுங்கு கள் அழைப்பு விடுத்தல், ஆசிரியரின் ஒத்துழைப் பைப் பெறுதல் என்பன யாவுமே மாணவர் தலை வர் ஒன்றியம், சாரணியம், மன்றங்கள் என்பன வும் தலைமைத்துவப் பண்புகளையும் சமூக விழுமியங்களையும் வளர்க்க உதவுகின்றன.

சாரணியம் குறிப்பாக எப்போதும் தயா ராக இருந்து பிறருக்கு உதவி செய்தலையும் பண்பாக நடத்தலையும், உண்மை பேசுதலை யும், இறைசிந்தனையையும் சிறார்கள் மத்தியில் வளர்கின்றது. இன்றைய சிறார்களின் நலனில் பாடசாலைகளைப் போன்றே சமய நிறுவனங் களும் மிகுந்த அக்கறை கொண்டுள்ளன.

பாடசாலைப் பாடத்திட்டத்திலேயே மாண வர் வழிபாட்டிடங்களை ஆசிரியருடன் சென்று வழிபாடுகளில் ஈடுபடுதல் அவசியம் எனக்குறிப் பிட்டுள்ளனர். தத்தம் சமயவழிமுறைகளுடன் ஏனைய சமய வழிபாடுகளையும் அறியச் செய் வதுடன் மதங்களை மதிக்கும் பண்புகளையும் வளர்க்கின்றன. சமய மன்றங்கள், விடுமுறை நாட்களில் சமய வகுப்புக்களை நடாத்துகின் றன. இப்படியான சமயம் சார்ந்த செயற்பாடு களைச் செய்வதனால் மாணவர்களிடையே ஆன்மீக சிந்தனைகளினைத் தூண்டுகின்றது. மாணவர்கள் ஒழுங்கான. நேர்த்தியான ஆடை களை அணியப் பழகுகின்றனர், சமய விழாக் கள், பண்டிகைகள் போன்றவற்றைக் கொண்டா டுகின்றனர். பெரியோரையும், பெற்றோரையும் மதிக்கவும் பேணவும் அறிவுறுத்துகின்றவை யாக பாடசாலையும், சமய மன்றங்களும் விளங்குகின்றன.

மாணவர்கள் நூல்கள் வாசிக்கவும் மற் றும் நல்ல கருத்துக்களையும் தோத்திரப் பாடல் களையும் மனனம் செய்யவும் தூண்டுகின்றன. போட்டிகளில் பங்கெடுக்கச் செய்கின்றன. மாண வர்கள் போட்டிகளில் பங்குகொள்வதால் தலை மைத்துவப்பண்பும், ஆளுமையும் விருத்தி அடைகின்றன.

மற்றும் போதனைகளைச் செய்யவும் தூண்டுகின்றது. இவ்வாறாக இன்றைய சிறார் களின் நலனில் அக்கறை கொண்ட பெற்றோர் களும், பாடசாலைகளும், சமய நிறுவனங்களும் நற்பழக்க வழக்கங்களைப் புகட்டுவதுடன் சமூக விழுமியப் பண்புகளையும், தலைமைத்துவப் பண்புகளையும் வளர்த்து எதிர்காலச் சமுதாயம் சிறப்புற வழிவகுக்கின்றது. இன்றைய சிறுவர் களே நாளைய தலைவர்கள் ஆவார்கள் அவர் களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டு அவர் களை சுதந்திரமாகவும் செயல்திறன் உடைய வர்களாகவும் ஆக்குதல் சமுதாயத்திலுள்ள பெரியவர்களின் கடமையாகும்.

# ஆசிரியத்துவமும் வாழ்வும்

***திருமதி. மேரியோகராணி கிளறன்ஸ் ஜெகன்மோகன்***
***பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி***
(S.L.T.S-I)

ஆசிரியத்துவம் என்பது பிள்ளைகளை நல்வழிப்படுத்தும் ஒரு கலையாகும். அந்தக் கலையானது உலகில் தலைசிறந்த மகத்துவம் மிக்க பணியாகும். தனி மனிதர் இருவர் ஒன்று சேரும் போது குடும்பம்; இரண்டு குடும்பங்கள் ஒன்று சேர்ந்தால் சமூகம்: அந்தச் சமூகத்தை சீரிய வழியில் அதாவது நல்வழியில் நடத்திச் செல்வது என்பது பெரும் பணியாகும் ஆசிரியத் துவம் என்பது தொழில் ; அல்ல பணி.

வாழ்க்கையின் எந்த நிலையிலும், வினவும் போதுதான் அதற்கான விடையைக் காண முடியும். வெற்றி கொள்ள முடியும். குழந்தை யானது கேள்வி கேட்கும் போதுதான் சரியாகப் புரிந்து கொள்கிறது. அப்படி வளரும் பிள்ளை களை ஆசிரியர் திட்டமிடும் போது தான் வெற்றி கொள்கிறான். திட்டமிடாவிட்டால் குழந்தையை வெற்றிகொள்ள முடியாது.

**கருவைச் சுமக்கும் தாய்க்கு என்றும்**
**குழந்தை சுமையில்லை**
**கருவிழி சுமக்கும் இரு விழியதற்கு**
**இமைகள் சுமையில்லை**
**மதுவைச் சுமக்கும் மலர்க்களுக் கென்றும்**
**பனித்துளி சுமையில்லை**
**வாசனை சுமக்கும் மேகத்திற்குகென்றும்**
**மழைத்துளி சுமையில்லை**

மேற்கூறப்பட்ட பாடலில் சுமைகள் யாவும் சுகமானதாக இருக்கிறது. அது போல ஆசிரியர் கள் ஒவ்வொருவருக்கும் அவர்களிடம் கற்கும் மாணவர்கள் சுமையெனக் கூறமுடியாது. அது வும் ஒரு சுகமாகத்தான் அமைகிறது. மாணவன் சமூகத்தில் நற்பிரஜையாக மிளிர்ந்து நிற்கும் போது அது கற்பித்த ஆசிரியர்களின் பெரு மையை எடுத்தியம்புகின்றது. தன்னை விட தன்னிடம் கற்றவன் உயரும் போது பொறாமை கொள்ளாதது ஆசிரியத்துவம்.

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்". ஒவ்வெரு மனிதனுக்கும் அதனை வழப்படுத்திக் கற்பித்த ஆசிரியர் தெய்வமாகத் தோன்ற வேண் டும். ஆனால் "ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்பது போல ஒரு சில ஆசிரியர்கள் செய் யும் கீழ்த்தரமான செயற்பாடுகள் மிருகத்தன மான செயல்கள் ஏனைய ஆசிரியர்களையும் பாதிக்கின்றது. ஆசிரியத்துவும் ஒழுக்கத்தை முதன்மையாகக் கொண்டது. ஆசிரியர் தனது நடையுடை பாவனையிலுத் தனது வாழ்க்கை முறையிலும் ஒழுக்கம் நேர்மை என்பவற்றை கடைப்பிடிக்க வேண்டும்.பாடசாலையிலும் சரி சமூகத்திலும் சரி உதட்டினால் வெளிவரும் சொற்கள் இனிமைமிகு சொற்களாக அமைய வேண்டும் அது வன் சொற்களாக அமைந்தால் பிள்ளைகளின் மனநிலை பாதிக்கப்படும்.

பின்பற்றுதல் என்பது சாதாரண ஒரு சொல் அல்ல. அதனை கருத்தூன்றி சிந்திக்கும் போது அது பலவற்றைச் சொல்கின்றது. ஆசிரியர்கள், பெற்றோரைப் பின்பற்றி வாழ்ந்தவர்களின்

வாழ்க்கை சிறப்புற அமையும். இவ்வுலகிற்கு ஒளியாக வந்த கிறிஸ்துவும் ஒரு ஆசிரியர்தான். அவர் வாழ்ந்து காட்டியது போல ஒவ்வொரு ஆசிரியரும் தூய்மை, அன்பு, பொறுமை, தாழ்ச்சி, பணிவு என்பனவற்றை அணிகலன் களாகக் கொண்டு வாழவேண்டும். அப்படி அவர் கள் வாழும் போது அவர்களைப் பின்பற்றி மாணவர்களும் வாழ்வார்கள். ஒரு சமூகத்தின் எதிர்பார்ப்பு என்பது கல்வியில் நிறைவு பெற வேண்டும். பணம் படைத்தவனாக வாழ வேண் டும்; மற்றையவர்கள் தம்மை மதிக்க வேண்டும். உயர்வு பெற வேண்டும் என்ற விடயங்களை அடக்கிய ஒன்றாகும். அந்த எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றி வைக்கும் பொறுப்பைச் சுமந்தவர் கள் ஆசிரியர்களாகத்தான் இருக்கிறார்கள். வைத்தியராக, பொறியியலாளராக சட்டத்துறை சார்ந்தவர்களாக முகாமையாளராக ஒரு நிர்வா கியாகி உருமாற்றம் பெற்றுக் கொடுப்பவர் ஆசிரி யர். இப்படிப் பலதுறைகளிலும் சமூகத்தை வளர்ச்சிக்கு இட்டுச் செல்லும் ஆசிரியர் போதிப் பவர்களாக இல்லாமல் வாழ்ந்து காட்டுபவர் களாக இருக்க வேண்டும்.

வெள்ளை ஆடை அணிந்து கையில் பிரம் புடன் சுற்றி வந்து பல சமுதாய நற்பிரஜைகளை உருவாக்கிய அக்கால ஆசிரியர்கள் இன்றும் நினைவு கூரப்படுகின்றார்கள். இக்காலமோ நல் வழிப்படுத்தும் ஆசிரியத்துவத்தை சிறையில் அடைக்க முனைகிறார்கள் "முகப்புத்தகத்தில் படித்த ஒன்று" அக்கால ஆசிரியர்கள் அடித்த அடியை மனிதஉரிமையில் முறையிட்டிருந்தால் அவர்கள் இன்னும் சிறையில் இருந்திருப்பார் கள். அவர்கள் அவ்வாறு அடித்து எம்மை திருத்தவில்லையென்றால் நாம் இன்னும் சிறை யில் இருப்போம்.

வளரும் சமுதாயத்தை வழிப்படுத்தும் பொறுப்பைச் சுமந்த ஆசிரியர் தியாகவுணர்வு களையும் ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கையும் உருவாக்கிக் கொள்ளவேண்டும். (உதாரணத் திற்கு - 7.30 க்கு முன் Finger print இல் விரல் வைக்க வேண்டுமானால் தூக்கத்தை தியாகம் செய்து அதிகாலையில் எழவேண்டும் ) இப்படிச் செயற்படும் போது தான் ஆசிரியத்துவத்தையும் அதன் பணியையும் கௌரவிப்பதாக அமையும்.

சமூகத்தின் எதிர்ப்பார்ப்பை ஆசிரியர்கள் நிறைவேற்றும் போதுதான் உலகளாவிய ரீதியா கக் கொண்டாடப்படும் ஆசிரியர் தினம் மகிமை யும் அர்த்தமும் பெறுகின்றது. ஆசிரியத்துவமும் வாழ்வும் பெருமை அடைகின்றது.

# மறக்க முடியாத கல்லூரி நாள்களும் நினைவுகளும்

*ஆக்கம்*
*ஜெ . வரலக்ஷி*
*தரம் - 09*

எதை எழுத இதைக் கொடுத்தாய்
நாம் பழகிய நாட்களின் இனிமையை
எழுதவா? இணைந்திருக்கும் அன்பை எழுதவா?
மனமின்றி பிரியும் போது கண்ணீரால் விடை
எழுதவா? என் உதடுகள் உச்சரிக்கும் இவ் வார்த்தையின்
அர்த்தங்களை மீட்டிப் பார்த்தேன்

தனிமையை வேண்டி இனிமையான இரவுப் பொழுதில்
வானத்தை பார்த்தபடி மொட்டை மாடியில்
நிலவு ளிச்சத்தில் நீச்சல் போட்ட என் இரு
விழிகளுக்கு நல் விருந்தாய் அமைந்தன விண்மீன் கூட்டங்கள்

நெருடல்களுடன் இருந்த என் மனதை
இதமாய் வருடிச் சென்ற மெல்லிய தென்றல்
ஆஹா! தனிமையில் இனிமையில் இனிமை என்பது
இதுதானா?

ஆனாலும் என் உடல் அடைந்த இன்பம்
ஏனோ என் உணர்வுகள் ஏற்றுக் கொள்ளவில்லை
மின்னும் விண்மீன் கூட்டங்களின் சிமிட்டல்கள்
என்னிடம் எதையோ கூறுவது போலிருந்தது மீண்டும் உற்றுப் பார்த்தேன்

மேகத்தில் மறையும் குட்டித் தேவதைகள்
என் மனதை தொட்டுச் சென்றன
சில நிமிடம் மெதுவாக மூடிய என் இரு விழிகளில்
கல்லூரி நாள்களின் சாரல் மெல்ல வீசியது

காலைப் பொழுது கதிரவனின் பொற் கரங்கள்
பூமியெங்கும் மெல்லப் பற்றியது
மின்னும் பனித்துளிகளில் கொஞ்சும்
பல வண்ண முகங்கள்
கண்களில் பல கனவு தோள்களில் ஒரு சுமை
பட்டாம் பூச்சிகளாய் சிறகடித்த பொழுது

சேலைக்குள் ஒளிந்து கொண்ட தோழிகள்
அமரர்கள் வரவுக்காய் ஆவலுடன்
வாசல் பார்த்து காத்திருக்கும் தோழர்கள்
சொன்ன காதல்கள் சொல்லாத காதல்கள்
இன்னும் எத்தனை இன்ப துன்பங்கள்
மறக்க முடியவில்லை கல்லூரி நாள்களை
அர்த்தமற்ற வாழ்வை அர்த்தமுள்ளதாக மாற்றுவது அன்பு
அர்த்தமுள்ள வாழ்வை அற்புதமாக மாற்றுவது நட்பு

எதிர்பார்க்கின்ற உறவுகளுக்கிடையில்
சிக்கி தவிக்கின்ற
மனமும் குதூகலமாய் இருப்பது
எதிர்பார்ப்பில்லா நட்பினால் மட்டுமே
தடுமாறும் போது தாங்கி
பிடிக்கவும் தடம் மாறும் போது
தட்டி கேட்கவும் முடியும் அதுவே
உண்மையான நட்பு

அறிமுகமின்மையாயினும் அன்று ஒருநாள் வந்தாய்
அரட்டை அடித்து தொடங்கினோம்
ஆறுதலாய் ஒருத்தருக்கொருத்தர் இருந்தோம்
தோள் கொடுத்த தோழனும் தோள் சாய்ந்த
தோழியும் பூரணமே வந்தாளும் மறக்காத நல் இதயமும்
மீண்டும் ஜனனம் என்றால் அதில்
நீங்களே உறவாக அல்ல உயிர் நட்பாக வேண்டும்
ஒன்றாகப் படித்த அந்த நாள்களும்

புழுதி பறக்கும் சாலைகளில் -மேனியெங்கும்
மண் கலந்த காற்று அடிக்க
சிரித்து மகிழ்ந்த காலம் எங்கே?
நினைக்கின்றேன் நான் திகட்டாத
போதை தரும் தேசத்தின் சுவையில்

தொலைந்து போக விருப்பம் - அன்பானவர்களின்
உலகத்தில் தூரங்கள் அறியாமல்
திசைகள் கூட தெரியாமல் பயணிக்க ஆசை
மீண்டும் ஒரு முறை கல்லூரி வாசலை நோக்கி
மீண்டும் கிடைக்குமா? இந்த பொற்காலம்
விழித்துப் பார்த்தேன் விண்மீன்கள்
மறைந்து விட்டன - காரிருள் சூழ்ந்து கொண்டது

# அரசபாடசாலைகளின் அதிபர்களும் தலைமைத்துவச் சவால்களும்

*பேராசிரியர்:- மா.சின்னத்தம்பி*

## அறிமுகம்

கல்லூரிகள் தமது இலட்சியங்களை நிறைவேற்றுவதற்கு ஒழுங்கமைப்பு, செயலமைப்பு வளங்கள் மனிதவளம், நேரம், மிகவும் ஒழுங்கானதகவல்கள் போன்ற பலவும் அவசியமாகின்றன. ஆனால் இவ்வற்றையெல்லாம் கவனமாக ஒருங்கிணைக்கவும், உத்தமமாகப் பயன்படுத்தவும் மேலாண்மைஆற்றல்கள் தேவைப்படுகின்றன.

இத்தகைய மேலாண்மை எவற்றினால் உருவாக்கப்படுகிறதென்பதை துல்லியமாக வரையறுத்துக் கூறமுடியாது. ஆனால் அவை அனைத்தும் ஒருங்கிணைந்த முழுமையைத் தலைமைத்துவம் என்கிறோம்.

கல்லூரிகளின் இலக்குகளை தெளிவாக வரையறுத்துக் கொண்டு, கல்லூரி தொழிற்படுகின்ற சமுதாய சூழலையும், பாடசாலையின் அகச் சூழலையும் விளங்கிக் கொண்டு பௌதீக வளங்களையும், மாணவர்களையும், ஆசிரியர்களையும் ஏனைய ஊழியர்களையும் பொருத்தமானமுறையில் ஒருங்கிணைத்துக் கொண்டு, வினைத்திறனும், விளைதிறனும் மிக்கசெயற்பாடுகள் மூலமாக இலக்கினை நோக்கி கல்லூரியைச் செயற்படுத்துகின்ற செயற்பாடு என்று விளங்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

இலக்குகளை அடைவதற்குத் தனக்குப் பின்னால் நிற்கும் செயலணியை தனிநபர்களாகவும், குழுக்களாகவும் செயற்படுத்துவதற்கான தனித்தன்மைமிக்க அணுகுமுறைகள், உபாயங்கள், நுட்பங்கள் இணைந்த பேராற்றலே தலைமைத்துவம் என்று கூறப்படுகின்றது.

வின்சன்ற் சேர்ச்சில் பிரங்ளின் டி.ரூஸ்வெல்ட், மகாத்மாகாந்தி, மாட்டின் லூதர்கிங் போன்றவர்கள் வரலாற்றில் மதிக்கப்படுவதற்குக் காரணம் தம் குறிக்கோள்களை அடைவதற்கு அவர்கள் கையாண்ட செயல்களும், உபாயங்களும், அணுகுமுறைகளுமேயாகும்.

பலகல்லூரிகளின் வளர்ச்சிப் போக்கைத் தீர்மானிக்கின்ற நபர்களான பலஅதிபர்களும் நினைவு கூறப்படுவதற்கும் அவர்களது தலைமைத்துவ உணர்வுகளும், சிந்தனைகளும் செயல்களுமே காரணங்களாகின்றன. பொது நலனின் மேம்பாட்டுக்காக தமது தனித்தன்மைகளைக் கவனமாகவும், உண்மையாகவும் இவர்கள் பயன்படுத்தியமையாகும்.

இக்கட்டுரையானது அதிகசவால்களுடன் அதிபர்களாக செயற்பட்டுவரும் அதிபர்களுக்குரிய தலைமைத்துவம் பற்றிய பண்புத் தரங்கள் மற்றும் செயற்பாட்டுத்திறன்கள் சவால்களை ஆராய்கின்றது.

## தலைமைத்துவமும் முகாமைத்துவமும்

**“தலைவர்கள் சரியானவற்றையே செய்கின்றனர்” முகாமையாளர்கள் வேலைகளைச் சரியாகச் செய்கின்றனர்.**

- பீற்றர் டிறக்கர்

பல இடங்களில் தலைமைத்துவம், முகாமைத்துவம் என்றபதங்கள் ஒன்றுக் கொன்று பதிவிடப்படுகின்றன. எனினும் பலர் இரண்டு சொற்களையும் மிகுந்த எச்சரிக்கையுணர்வுடன் வேறுவேறாகக் கையாண்டு வருகின்றனர்.

முகாமைத்துவம் என்பதிலடங்கும் பல துணை அம்சங்களில் ஒன்றுதான் தலைமைத் துவம் என்று கூட பலர் உணர்கின்றனர். நிறுவன சமநிலைகுறையாமல் பாடசாலையின் சமுதாயச் சூழலுடன் முரண்படாமலும் கல்லூரிகளின் இலக்குகளை மிகவும் திருப்பதிகரமாக அடைந்து சாதனை புரிந்த பல அதிபர்களை பாடசாலை வளர்ச்சி வரலாறுகள் காட்டுகின்றன.

முகாமைத்துவசெயல் ஒழுங்குகளும், தலைமைத்துவ திறன்களும் ஒருங்கிணைந்த கல்லூரிதான் உத்தமமான வளர்ச்சியை பெற்றுள்ளன. முகாமையாளர்களுக்கும், தலைவர்களுக்குமிடையிலான வேறுபாடுகள் கல்லூரி மட்டத்திலான இருவரதும் பண்புநலன்கள், செயற்பாடுகள் மற்றும் நம்மைப்பற்றிய அகக் காட்சிகள் (Perception) தொடர்பாகவும் துல்லியமாகவே காணப்படுகின்றன.

இலத்தீன் மொழியில் கை (Manus-Hand) என்ற அடிச்சொல்லில் இருந்துதான் கையாளுதல் என்றஅர்த்தத்தில் முகாமைத்துவம் என்ற சொல் உருவானது. 16ஆம் நூற்றாண்டில் இத்தாலிய மொழியில் குதிரைகளைக் கட்டுபடுத்தல், பயிற்சியளித்தல், கையாளுதல் என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்ட Manager என்ற சொல்லில் இருந்தே முகாமையாளர் என்றபதம் வளர்ந்த தென்கின்றனர். பின்பு வலுவான வேலைகளை கையாண்டவர்களையே அதுகுறித்துள்ளது. செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துகின்ற பொறுப்புக்களை ஏற்பவர்களும் தமது நிர்வாக வேலைகளை கட்டுபடுத்துபவர்களையும் முகாமையாளர்கள் என்று கருதலாயினர்.

தற்போது முகாமையாளர்கள் திட்டமிடல் ,ஆளணியமைத்தல் வரவுசெலவுத்திட்டமிடல் பலபகுதிகளை ஒருங்கிணைத்தல், தீர்மானங்களை மேற்கொள்ளல் போன்ற பணிகளை செய்பவர்களாகின்றனர்.

முகாமைத்துவம் பணித்துறை அதிகார முறை சார்ந்தது போல சற்றுக்கடினமானது போல உணரப்படலாகிற்று. ஆனால் நிறுவனங்களின் தலைமைத்துவமானது கண்ணியமான கலை என்பதாகவும், மிகவும் கடினமான பணி என்பதாகவும் மேலும் விளக்கப்படுகின்றது. வட ஐரோப்பிய மொழிகளில் பெரும்பாலனவற்றில் பாதை, கடல் வழிப்பயணம் அர்த்தத்தில் பயன் படுத்தப்படுகின்றது. தமதுகுறிக்கோள் மையங்களை நோக்கி தன்னுடன் சேர்ந்தவர்களை வழிகாட்டி அழைத்துச் செல்பவர்களே “தலைவர்” என்ற அர்த்தத்தில் பயன்படுத்தியுள்ளனர்.

கல்லூரிகளில் அதன் இலக்குகளை அடைவதற்காகவே மாணவர்களும், ஆசிரியர்களும் கல்விசாரா ஊழியர்களும் இயங்கி வருகின்றனர். இவர்களை நம்பும்படி செய்து, வழிகாட்டி தேவைப்படின் அவர்களை கட்டுபடுத்தி கல்லூரி வெற்றிபெறுவதை உறுதிப்படுத்துபவரே தலைவராக முடியும்.

தரப்பட்ட வேலைகளையெல்லாம், ஒழுங்காகவும், கவனமாகவும் செய்ய நினைப்பவர் முகாமையாளர். ஆனால் சரியானவற்றை மாத்திரமேதான் செய்ய வேண்டும் என்பதில் தீவிர

மாக இருப்பவர் தலைவராவார். வினைத்திறன் மிக்கதாக தமது வேலைகளையெல்லாம் செய்யவேண்டும் என்று எண்ணும் போது அவர் கள் நல்ல முகாமையாளராக முடிகிறது. ஆனால் அது வெற்றிகரமான தலைவராக மாற்றிவிடாது. வசீகரம்மிக்க தலைவர்கள் பல சமயங்களில் மிகவும் பலவீனமான முகாமையாளராகவும் இருக்க முடியும். கல்லூரிகளில் தலைவராக இருப்பவர்கள் கொள்கைகளையும் முடிவுகளை யும் மேற்கொள்வர் ஆனால் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் வகையில் நிர்வாகத்தை மேற்கொள்பவர்கள் முகாமையாளர்களாக செயற்படுவர். பலபாடசாலைகளில் உப அதிபர் களும் பகுதித்தலைவர்களும் முகாமையாராக செயற்படுவதையும் அதிபர் தலைவர் போல் செயற்படுவதையும் அவதானிக்கமுடியும்.

## முகாமையாளர்களாக அதிபர்கள்

இவர்கள் திட்டமிடல், கட்டுப்படுத்தல், கொள்கைகளை நடைமுறைப்படுத்தல் வளங் களை ஒதுக்கீடுசெய்தல் செயற்பாடுகளை கண் காணித்தல் போன்றவற்றில் ஈடுபடும் போது பின் வரும் நாளாந்த பணிகளைச் செய்வர்.

- நிர்வாகித்தல்
- பராமரித்தல்
- பாடசாலை ஒழுங்கமைப்பில் கவனம் செலுத்துதல்
- கட்டுபடுத்தலில் அக்கறைகாட்டல்
- குறுகியகாலப் பெறுபேற்றில் நாட்டம் கொள்ளுதல்
- தொழிலுக்குரிய அந்தஸ்தின் படி இயங்குதல்
- எதையும் சரியாகசெய்வதில் கவனமாக இருத்தல்

பாடசாலைகளில் பிரச்சனைகள் எழாதவா றும் ஒழுங்குகுலையாதவாறும் பாடசாலையும் ஆசிரியரும்இணைந்து செயற்பட ஊக்குவிப்ப வராகவும் இயங்குவர். சிறிய பாடசாலைகளில், அல்லது தன்னம்பிக்கை குறைந்த அதிபர்கள் உள்ள பாடசாலைக்ளில் அதிபர்கள் பெரும் பாலும் முகாமையாளர்களாக மாத்திரமே செயற் படுவதை அவதானிக்கலாம்.

## தலைவர்களாக அதிபர்கள்

ஓர் அதிபர் தம்மை தலைவராக கருதுவ தும், நம்புவதும், அக நிலையில் தம்மளவில் ஏற்றுக்கொள்வதும் அவசியமாயிற்று. அதிபர் ஒருவர் தம்மை பின்வருமாறு நோக்குதற்கு பழகிக் கொள்ளவேண்டும்.

- ☞ எப்போதும் மற்றவர்களைத் தன்னால் ஊக்குவிக்கமுடியும்
- ☞ தனது இலக்குகளை சாதிக்க முடியும்
- ☞ தனக்குகீழ் உள்ளவர்களை உரியவாறு வழிகாட்ட முடியும்.
- ☞ பலமாதிரியானவர்களுடனும் மிகவும் சிறப்பாக தொடர்பாடல் மேற்கொள்ள முடியும்.
- ☞ எப்போதும் நிறைந்த உற்சாகத்துடன் செயற்பட முடியும் என்று தினமும் சிந்திப்ப வராகவும் நம்புபவராகவும் இருத்தல் வேண்டும்.

பாடசாலையில் தொடர்புடைய சமூகத் தலைவர்கள், பெற்றோர், மாணவர், ஆசிரியர், கல்விசாரா ஊழியர் போன்ற அனைவர் மீதும் எப்போதும் கவனம் செலுத்திக் கொண்டேயிருத் தல் வேண்டும். தான்அவர்கள் மீது அதிக நம் பிக்கை கொண்டிருப்பதை அவர்கள் ஒவ்வொரு வரும் உணரும்படி நடந்துகொள்ள வேண்டும். எந்த நிகழ்வையும் தொலைநோக்குடன் அதன் முடிவு வரை கணிக்கும் ஆற்றல் கொண்டு இயங் குதல் வேண்டும்

சவால்கள், முரண்பாடுகள், இடர்நேர்வு கள் ஏற்படமுடியும் என்றும் அதை எதிர்கொள் ளத்தான் வேண்டும் என்றும் தயாராக இருத்தல் வேண்டும்.

பலமுறைகளில் சிந்தித்தும் தொலை நோக்குடன் பார்த்தும், வெற்றிபலருக்கும் கிடைக்க வேண்டும் என்று நம்பியும் சரியான வற்றை மாத்திரம் செய்வதில் நாட்டம் கொண்டிருத்தல் வேண்டும்.

தனக்குரிய திசைகளை தெரிவு செய்வதிலும் மக்களுடன் பலகுழுக்களுடன் இணைந்து செயற்படுவதிலும் மற்றவர்களது மனதை கவர்வதிலும் புதியமாற்றங்களை இயன்றளவு ஏற்படுத்துவதிலும் "எப்போதும் அக்கறை கொண்டு செயற்படுபவராக இருப்பதும் அவசியம்.

## தலைவர்களும் சவால்களும்

பாடசாலைகள் என்பவை பல்வகைமை கொண்ட மனிதர்களின் உறவுகள், நடத்தைகள் சார்ந்த சேவைத் தொழில்களை மையப்படுத்திய சமுதாய நிறுவனங்கள், ஆசிரியர்களும், பெற்றோரும், மாணவரும் பலமாதிரி தொழில் உணர்வு, பழக்கம், நம்பிக்கை, எதிர்பார்க்கை, நாட்டம், இடர்கள் கொண்டவர்களாவர்.

இதனால் இயல்பாகவே முரண்பாடுகள், குழுமயமாக்கல், இயலாமைவயப்பட்ட மன அழுத்தம் என்பன நிறைந்த இடமாகவே பாடசாலைகள் செயற்பட்டு வருகின்றன. பாடசாலைகளின் உள்ளேயும், வெளியேயும் நிலைமைகள் மாறுகின்றன. வளர்ச்சிகள் பல திசைகளில் நிகழ்கின்றன. தொழில்நுட்பம் கலாசாரம் தொலைக்காட்சிப்பெட்டி, தொலை பேசி, சுதந்திரதனியார் கல்வி ஏற்பாடுகள், தனிநபருக்குரிய பெற்றோல் வாகனங்கள் போன்றவற்றுடன் பின்னிப்பிணைந்த குடும்பங்களின் செயற்பாடுகள் அதிவேகமாக வளர்ந்து பெற்றோர் இயல்புகளிலும் மாணவர்களின் சுய செயற்பாடுகளிலும் அதிக பாதிப்பினை ஏற்படுத்தி வருகின்றன.

பழையமாணவர் அமைப்புக்கள் உள்ளூரில் இருந்து உலகின் பலநாடுகள் விரிந்து பரந்து வலிமை பெற்றுவிட்டன. மின்னியல் மாதிரி எஜமானர்கள் பாடசாலை முகாமைத்துவத்தில் அதிக நெருக்கடிகளை உருவாக்கி வருகின்றன. அதிஉயர் அதிகாரநிலைப் பதவியில் உள்ளவர்களின் உறவினர்களும் நண்பர்களும், பயனாளிகளும் பாடசாலை முகாமைத்துவத்தின் மீது நேர்மையற்ற நெருக்கடி நிலைமைகளை கூர்மைப்படுத்தி வருகின்றனர்.

முதிர்குடும்பங்கள் கொண்ட ஆசிரியர்களின் மனஅழுத்தங்கள் உற்பத்திதிறனற்ற ஊழியர்கள் என்பவற்றின் மீதுகருணைசார் கண்காணிப்பு அணுகுமுறையினை பின்பற்றுமாறு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

கணவனும் மனைவியும் ஆசிரியர்களாக உள்ள ஆசிரியகுடும்பங்களின் கூட்டிணைந்த தேவைகளும் எதிர்பார்க்கைகளும் பாடசாலை நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் மீது அதிக நெருக்கடிகளை உருவாக்கிவருகின்றன.

அசாதாரணகால இடப்பெயர்வுகளும் வளர்ச்சிபெற்ற வதிவிடப் பிரதேசங்களில் வசித்தலின் உரிமைப்பாடுகளும் இடமாற்றம் தொடர்பான புதிய உராய்வுகளை ஏற்படுத்திவருகின்றன. இத்தகைய பலமாதிரி நெருக்கடிகளும் அதிபர்கள் முகாமையாளர்களாகவும் தலைவர்களாகவும் செயற்படுவதில் பலதடைகளை உருவாக்கி வருகின்றன. அவை, தமக்குரிய பாணியை தனிப்பட்டவர்கள் தாமாகவே தனது நிலைமையைப் பொறுத்து தீர்மானிக்க வேண்டியுள்ளது. முன்பு வெற்றிபெற்ற தலைவர் பாணியை எழுந்தமானமாக பின்பற்ற முடியாதுள்ளது.

# புவனா அக்காவும் புலமைப் பரீட்சையும் (சிறுகதை)

*திருமதி. மரூபியா ராஜா பார்த்தீபன்*
*யா/ புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்*

புவனா அக்காவைத் தெரியாதவர் அந்த ஊரில் யாரும் இருக்க முடியாது. அக்கா தன் வீட்டு முன் விறாந்தையில், ஒரு சிறிய பெட்டிக் கடை சில்லறைச் சாமான்களுடன் பீடி, சிகரெட் இவைதான் அக்காவின் வியாபாரம்.

அக்கா வீட்டு வேலைகளுடன், கடையையும் கவனிப்பார். புவனா அக்காவின் மனுசன் அரச கந்தோரில் பகல் நேரக் காவலாளி.

இவர்களின் அருமைப் புதல்வன் ஆனந்தன் ஊர்ப் பள்ளியில் . 5ஆம் வகுப்புப் படிக்கிறான்.

சும்மா சொல்லக்கூடாது! நல்ல விவேகமுள்ள கெட்டிக்காரப் பிள்ளை, வகுப்பில் முதலாம் பிள்ளையாக வருபவன். ஓடி ஆடித்திரிந்த பிள்ளையின் மனதில் இப்ப ஒரே குழப்பம். இன்னும் ஆறு மாதத்தில் புலமைப் பரிசில்; பரீட்சை, அது தான் பிரச்சினை.

புவனா அக்கா சும்மா இருப்பாரா? புலமைப் பரீட்சையில், தன் மகன் திறமையாகச் சித்தி பெற வேண்டும். இதன் மூலம் தனது சமூக அந்தஸ்து , அதிகரிக்க வேண்டும் என இரவு பகலாகச் சிந்திப்பது மட்டுமல்லாமல், செயலிலும் இறங்கி விட்டார்.

மகனின் பாடசாலைப் பக்கமே போகாத அக்கா, இப்ப தினசரி காலையிலும் மதியத்திலும் வகுப்பறைக்கே போய் விடுவார்.

பாவம் அந்த வகுப்பாசிரியை!. மலை நாட்டு ஆசிரிய சேவையை முடித்துவிட்டு, இந்த வருடத் தொடக்கத்தில் தான், ஊர்ப் பள்ளிக்கு மாற்றலாகி வந்தவர்.

புவனா அக்கா, தனது கல்வி ஞானத்தையும், பாடசாலை அனுபவங்களையும், பாவம் அந்த வகுப்பாசிரியையிடம் திணிப்பது வழமையாகி விட்டது.

அக்காவின் கடைக்கு, கடனுக்கு சாமான் வாங்க வரும் வாடிக்கையாளர்களை, மணிக் கணக்காக நிப்பாட்டி வைத்து, தமது மகன் இம்முறை புலமைப் பரீட்சையில் முதன்மையாகச் சித்தியடைவான் எனப் பிதற்றுவதும் தினசரிக் கடமையாகும்.

பரீட்சைக்கு இன்னும் மூன்று மாதங்கள். ஆனந்தனை அதிகாலை 4.30 க்கு, அவன் அம்மா, துயில் எழுப்பி விடுவாள். பேந்தப் பேந்த விழித்த அப் பாலகன் காலைக் கடன்களை முடித்ததும், பக்கத்து வீட்டுச் சித்தி சரியாக ஐந்து மணிக்கு வந்து விடுவார்.

சித்தியின் ரியூசன் முடிய ஆறரை மணியாகும். புவனா அக்கா அவன் கையை பிடித்து பாலா சேரின் ரியூசன் சென்ரருக்கு கிட்ட விட்டு விடுவார்.

பாலா சேரின் ரியூசன் முடிய எப்படியும் எட்டு மணியாகும். அங்கிருந்து ஓட்டமும் நடையுமாக பாடசாலையை அடைவான்.

சரியாக 1.30 மணிக்கு பாடசாலையில் இருந்து, அடுத்த தெருவில் இருக்கும் ஸ்ரார் ரியூசன் சென்ரருக்கு ஓடுவான். இந்த ரியூசன் முடிய நாலு மணியாகும். அங்கிருந்து புவனா அக்கா ஏற்பாடு செய்த தனிப்பட்ட ரியூசன் மாஸ்ர ரின் வீட்டிற்கு செல்வான். ரியூசன் முடிந்து வீட் டிற்கு வரும் போது மாலை ஏழு மணியாகிவிடும். ஆனந்தனை எதிர்ப்பார்த்து பக்கத்து வீட்டுச் சித்தி புலமை பரீட்சை வினா விடைப் புத்தகங் களுடன் காத்திருப்பார்.

இரவு ஒன்பது மணிக்கு புவனா அக்கா மகனுக்கு இரவுச்சாப்பாட்டை கொடுத்து மகன் இரவிலே வயிறு முட்டச் சாப்பிடக் கூடாது, நித்திரை வரும் படிக்கிறதும் மண்டையிலே ஏறாது என்று சாப்பாட்டிலும் வெட்டு. இரவு ஒன்பது மணிக்கு, அப்பா கந்தோரில் யார் யாரிடமோ வாங்கிய மொடல் பேப்பர்களை மகனிடம் கொடுத்து, "அப்பு நீ இம் முறை புலை மைப் பரீட்சையிலே திறமைச் சித்தி பெறுவாய்" என்று கந்தோரில் உள்ள கிளாக்கர் மாரிடம் கூறி இருக்கிறேன். கவனமாக படித்து என்ரை மானத்தை காப்பாற்று ராசா என்று அவனை உற்சாகப்படுத்திய பின் அவனும் "மொடல் பேப் பர்களை" கவனமாக செய்து முடித்த பின் கணக்கு ரீச்சரின் வீட்டு வேலைகளை முடிக்க இரவு பதினொன்றைத் தாண்டி விடும். அசதியா லும் பசியாலும் கண்கள் துவள அந்த இடத்தி லேயே சுருண்டு விழுந்து விடுவான் அந்தப் பச்சிளம் பாலகன்.

பரீட்சைக்கு இன்னும் ஒரு வாரம் தான்! புவனா அக்கா முன்னிலும் பார்க்க அதி தீவிர மாக செயற்படத் தொடங்கி விட்டார். "தம்பி! போன முறை புலமைப் பரீட்சையிலே உன்ர மச்சாள்காரி அவள் தான் "சுமணா" திறமையாக சித்தி அடைந்தவள். இந்த முறை நீ அவளிலும் பார்க்க ஒரு பதினைந்து புள்ளிகளாவது கூட எடுக்க வேணும். இல்லாட்டி எனக்கு மதிப் பில்லை. என்ரை ராசா கவனமாக படி."

இந்தப் புலமைப் பரீட்சை வந்தாலும் வந் தது பிள்ளைகள் படிக்கிறார்களோ இல்லையோ அதிலும் அம்மாமார் அங்கும் இங்கும் ஓடி அலைந்து நன்றாக படிக்கிறார்கள். ஐந்தாம் வகுப்பு புலமைப் பரீட்சை, வசதி குறைந்த மாண வர்களுக்கு மட்டும் ஏற்படுத்தப்பட்ட ஒரு நல்ல திட்டம். எத்தனையோ வசதி குறைந்த மாணவர் கள் புலமைப் பரீட்சையில் சித்தி அடைந்து அரசு கொடுக்கும் நிதி உதவியுடன் "பல்கலைக் கழக பட்டம்" பெற்று பெரிய பெரிய உத்தியோகங் களில் உள்ளனர். காலப்போக்கில் ஐந்தாம் வகுப்பில் உள்ள அனைத்து மாணவர்களும் கட்டாயமாக பரீட்சைக்கு தோற்ற வேண்டும். பரீட்சையில் சித்தியடையும் வசதி குறைந்த மாணவர்களுக்கு மட்டும் "அரச உபகார நிதி" கிடைக்கும். மற்றவர்களுக்கு பெரிய பாடசாலை களுக்கு அனுமதி பெறுவதற்கு "முன்னுரிமை" பெற உதவும் ஆனால் எமது பிரதேசங்களில் பெற்றோரின் மானப் பிரச்சினையாகி விட்டது. பெற்றோரின் கௌரவத்திற்காக பச்சிளம் சிறார் கள் வதைக்கப்படுகிறார்கள்.

எதிர்ப்பார்த்த பரீட்சையும் நாளை நடை பெறப் போகிறது. ஒவ்வொரு வீட்டிலும் பரபரப்பு, அப்பாடி! ஒருவாறு பரீட்சையும் முடிந்து விட்டது. இனிப் பரீட்சை முடிவுகள் வர வேண்டியது தான்.

எதிர்ப்பார்த்த முடிவுகள் வந்து விட்டன. எமது ஆனந்தனால் நூறு புள்ளிகளை கூட தாண்ட முடியவில்லை. புவனா அக்கா கடை மூன்று நாளாகத் திறக்காமல் பூட்டிக்கிடக்கு.

அக்காவால் வெளியே தலை காட்ட முடிய வில்லை. யோசித்து யோசித்து அக்காவின் தலையே வெடித்து விடும் போல..............

அக்காவின் மூளையில் ஒரு மின்னல் இந்தப் பரீட்சையில் ஏதோ மோசடி நடந்திருக்க வேணும், அல்லது புள்ளிகள் மாறிப் பதியப் பட்டிருக்க வேணும்.

புதிய உற்சாகத்துடன் அடுத்த தெருவில் இருக்கும் அதிபர் வீட்டை நோக்கி ஓடுகிறாள். கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்த மாதிரி அதிபரும் எதிரே வருகிறார். "சேர் ! என்ர மகன் ஆனந்தன் நன்றாகப் படிக்கிற பிள்ளை. அவன் தான் வகுப்பிலேயும் முதலாம் பிள்ளை. ஆனால் புலமைப் பரீட்சையில் 100 புள்ளி கூட எடுக்க வில்லையே? சேர்! இந்தப் பரீட்சையில் ஏதாவது தில்லு முல்லு நடந்திருக்குமோ என சந்தேக மாக இருக்கிறது." என்றார் புவனா அக்கா.

அதிபர் சிரித்துக் கொண்டு "பிள்ளை புவனா! உம்முடைய மகன் பரீட்சை நடக்கும் போது மேசையிலே நித்திரை ஆகி விட்டான் ரீச்சர்மார் அவனை எழுப்பியும் அவன் எழும்ப வில்லை என்று கேள்விப்பட்டேன்" என்றார்.

அதிபர் கூறி முடியுமுன்னே பத்திரகாளி வேசத்துடன் வீட்டை நோக்கி ஓடுகிறாள் புவனா அக்கா! அது சரி! யாருக்கு இன்று தண்டனை? மகன் ஆனந்தனுக்கா அல்லது புவனா அக்கா போன்ற தாய்மாருக்கா?



பாடசாலையின் ஆசிரிய ஆளணியினர்-2018

# சிந்தனை

*திருமதி ஞானலக்சுமி ஜெயபாலன் ஆசிரியர்*
***Special Maths -B.E.d***

கல்வியின் முக்கிய நோக்கங்களுள் ஒன்று மாணவர்களது அறிவு வளர்ச்சிக்கு உதவுவது ஆகும். இவ்வளர்ச்சியில் புலக் காட்சித் திறன், கற்பனைத்திறன், பொதுமைக் கருத்துக் களை உருவாக்கி பயன்படுத்தும் திறன் என்பவற்றுடன் இவை எல்லாவற்றையும் உள்ளடக்கியதும், இவை எல்லாவற்றிலிருந்தும் மேம்பட்டதுமான சிந்தனைத்திறனும் அடங்கும். சிந்தித்தல் எனும் உளச்செயல் வழியே நம் அறிவு தொடங்கி வளர்ச்சியடைகிறது. சிந்தனையின் அடிப்படையாக புலக்காட்சி உள்ளது. கற்றல் செயல் முறையில் அடிப்படை விடயங்களை குழந்தைகளுக்கு தெளிவாகக் கற்பித்தலில் புலக்காட்சிக்கும், உற்று நோக்குவதற்கும் தனியிடம் உண்டு. உயர்வகைச் சிந்தனைகள் மனச்சாயல்களையும் (MENTAL IMAGES) மொழிச்சாயல்களையும் (word images) பயன்படுத்துகின்றன. பொதுவாக இவற்றை சிந்தனை என்ற சொல்லால் குறிப்பிடுவர். சிந்தனை வழியே பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு பயன்பெறுவதுடன் புதிய முடிவுகளையும் விடயங்களையும் கற்க முடியும். கண்டறி முறை, செயல்திட்ட முறை போன்ற சிறந்த கற்றல் முறைகள் சிந்தனையை வளர்க்கின்றன. இவ் வளர்ச்சி பெற்ற சிந்தனையாற்றல் மாணவர்களுக்கு மேலும் சிறப்பாக கற்க உதவுகிறது.

ஆய்வுச் சிந்தனை (reasoning thinking) உளச்செயல்களிலேயே உயர்நிலைப்பட்டதும், சிக்கல் மிகுந்ததும் ஆய்வு ஆகும். புலக்காட்சி, உற்றுநோக்கல், விம்பங்கள், பொதுமைக் கருத்துக்கள், மொழிக்குறியீடுகள் யாவும் ஆய்வில் பயன்படுகின்றன. எனவே ஜோன் டூயி என்னும் அறிஞர் ஆய்வை "சிந்தனையின் முழுச்செயல்" என விபரிக்கின்றார். ஆய்வு என்பது அடிப்படையில் பயனுள்ள கற்பனையேயாகும். எமது முன்னைய அனுபவங்களை புதிய முறையில் தொகுத்து அமைத்து புதிய படைப்பின் உதவியுடன் எமது வாழ்வில் எழுந்துள்ள ஒரு பிரச்சினையை தீர்த்தலே ஆய்வாகும். இவரது ஆய்வுச் சிந்தனை அவர் பெற்றுள்ள நுண்ணறிவை பொறுத்ததாகும். ஆய்வுச் சிந்தனை இளமையிலேயே குழந்தைகளிடம் தோன்றுவதால் இத்திறன் வளர்ச்சியடைவதற்கான வாய்ப்புக்கள் கல்வியின் தொடக்க நிலையிலேயே குழந்தைகளுக்கு அளிக்கப்பட வேண்டும். ஆய்வுச் சிந்தனை பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு மட்டுமன்றி புது அறிவினைத் தேடிப் பெறுவதற்கும் உதவுகிறது. ஒருவருக்க தடைகள் ஏற்படும் போதும் ஐயப்பாடுகள் எழுகின்ற போதும் அத் தடைகளை நீக்கவும் ஐயப்பாடுகளை போக்கவும் நாம் ஆய்வினைப் பயன்படுத்துகின்றோம்.

ஜோன் டூயி (John Dewey) எனும் அறிஞர் ஆய்வில் காணப்படும் பல்வேறு படிகளைத் தந்துள்ள விளக்கம் தெளிவானதாவும் பயனுள்ளதாகவும் அமைந்துள்ளது. ஆய்வு 5 படிகளை கொண்டுள்ளது. அவை முறையே

i பிரச்சினையை உணர்தல்

ii இப்பிரச்சினையை தீர்க்க பயன்படக் கூடிய செய்திகள்யாவற்றையும் தேடித் தொகுத்தல்

iii இச் செய்திகளிலிருந்து எம்மை எதிர்நோக்கி உள்ள பிரச்சினைக்கு தீர்வு காண உதவக் கூடிய பல்வேறு கருதுகோள்களை அமைத்தல்.

iv இக் கருதுகோள்களைச் சரிபார்த்து உண்மைக் கருதுகோளை தேர்ந்தெடுத்தல்.

v அவ்வாறு தேர்ந்தெடுத்த கருதுகோளைக் கொண்டு பிரச்சினைக்குத் தீர்வு காணல்

பிரச்சினை உணர்தல் என்பதே ஆய்வு எழுவதற்கு காரணமான முதற்படியாகும். பிரச்சனை ஏதும் இன்றி ஆய்வு தோன்றாது. எம் எதிரே உள்ள பிரச்சினை எம்மைப் பாதிக்க கூடிய பிரச்சினை என்று நாம் உணர்ந்தால் மட்டுமே ஆய்வின் மூலம் அதனைத் தீர்க்க முயலுவோம். பாடசாலைப் பாடங்களில் காணப்படும் பிரச்சினைகளுக்கு விடை காண்பது மாணவர்களது இயல்பான தேவைகளை நிறைவு செய்வது அவர்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

பிரச்சினையை முழுவதாக உணர்ந்த பின் ஆய்வின் அடுத்த கட்டமாக அமைவது செய்திகளைத் தேடித் தொகுத்தல் ஆகும். பிரச்சினையை தீர்ப்பதில் உதவக்கூடிய பல செய்திகள் எமக்கு ஏற்கனவே தெரிந்தவையாக இருக்கக்கூடும். எல்லாவற்றையும் நாம் திட்டவட்டமாக நினைவுபடுத்திக் கொள்கிறோம். பெரும்பாலும் ஒரு பிரச்சினைக்கு தீர்வு காண பயன்படக் கூடிய செய்திகளை நாம் புதிதாக தேடிப்பெற வேண்டி இருக்கும். இவ்வாறு சேகரித்த செய்திகள் யாவற்றையும் தொகுத்து ஒழுங்குபடுத்திக் கொள்வது பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு இன்றியமையாதது. தமது விருப்பச் செயல்களிலும் செய்முறைப் பாடங்களிலும் எழும் நடைமுறைப் பிரச்சினைகளைத் தீர்க்க ஆசிரியர் களைக் கேட்டும், தாமே படித்தும் பல்வேறு செய்திகளை மாணவர் எளிதில் பெறுவர். இதனாலும் செயல் மையக் கல்வி முறைகள் சிந்தனையையும் அறிவு வளர்ச்சியினையும் தூண்ட வல்லது என்பது தெளிவானதாகும். ஆய்வின் மையமாக அமைவது கருதுகோள் ஆகும். நாம் பெற்றுள்ள செய்திகளை அலசி ஆராய்ந்து அவற்றிலிருந்து நாம் அக்கறை கொண்டுள்ள பிரச்சினையை தீர்க்கக்கூடிய கருத்துக்களும் செயல்களுமே கருதுகோள் எனப்படும். கருதுகோள் நாம் பெற்றுள்ள செய்திகள் இடையே நமக்கு பயன்படக்கூடிய புதிய தரவுகளை கண்டு பிடிப்பதால்தோன்றுகின்றது.

ஒரு பிரச்சினை பற்றிய பல கருதுகோள்கள் ஒரே சமயத்தில் உள்ளத்தில் எழக்கூடும். இவற்றில் ஒரு எடுகோள் மட்டுமே உண்மையிலேயே பிரச்சினையின் விடையாக அமையும். இதனைக் கண்டறிவதற்கு உள்ளத்தில் உருவாகிய எல்லாக் கருதுகோள்களையும் சரிபார்த்து மதிப்பிடுதல் இன்றியமையாதது. இதுவே ஆய்வின் அடுத்த கட்டமாக அமையும் மேலும் செய்திகளை தேடிப்பெறல், சோதனைகளை நடத்துதல் போன்றன கட்டத்தில் இடம்பெறும்.

ஆய்வின் இறுதிக்கட்டம் கருதுகோள்களைக் கொண்டு பிரச்சினை தீர்த்தலாகும். சரிபார்த்து உண்மையானது என மதிப்பிடப்பட்டுள்ள கருதுகோள்களைக் கொண்டு ஆய்வைத் தோற்றுவித்த பிரச்சினையையும் இதனுடன் தொடர்புபட்ட இதுபோன்ற வேறு சில பிரச்சினைகளையும் தீர்த்தலாகும். இக்கட்டத்துடன் ஆய்வு முடிவடைகின்றது.

ஆய்வுச் செயன்முறையின் இவ் ஐந்து கட்டங்களையும் அறிவியல் தொடர்பு கொண்ட சிந்தனைகளில் மடடுமன்றி எமது வாழ்க்கையில் அன்றாடம் எழும் எளிய, சிறிய பிரச்சினை

களுக்கு தீர்வு காண நாம் மேற்கொள்ளும் சிந்தனைச் செயலிலும் காணக்கூடும்.

ஆய்வுச் செயலின் பல படிகளை கவனித்தோமானால் அதனுள் தொகுத்தறி (விதி வருவித்தல்) பகுத்தறி முறையும் (விதி விளக்கம்) இணைந்தே காணப்படுவதை நாம் அறியலாம். பல செய்திகளை ஒப்பிட்டு ஆராய்ந்து பார்த்து அவற்றிலிருந்து சில பொது விதிகளை வருவித்தல் தொகுத்தறி முறையாகும். இது கருகோள்கள் உருவாகும் கட்டத்தில் பயன்படுகிறது. தாம் அறிந்துள்ள ஒரு பொது விதியை அதனுள் அடங்கும் பல தனிப்பட்ட நிகழ்ச்சிகளுக்கும் நிலைமைகளுக்கும் பயன்படுத்திப்பார்த்தல் பகுத்தறி முறையாகும் இதனை கருதுகோள்களை சரி பார்ப்பதிலும், ஆய்வின் கடைசிக்கட்டமான கருதுகோள்களை பயன்படுத்துவதிலும் நாம் காணலாம்.

மாணவர்களிடையே ஆய்வுத் திறன் வளர்ச்சி அடைய வேண்டுமாயின் இவ் விரு முறைமைகளையும் பயன்படுத்துவதில் அவர்களுக்கு தகுந்த பயிற்சி அளிக்கப்பட வேண்டும். அதிலும் முக்கியமான தொகுத்தறி முறையையும் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் ஏனெனில் இம்முறையின் வழியே தான் புதுக் கருத்துக்களும் பொது விதிகளும் தோன்ற முடியும். மேலும் இம்முறையை பயன்படுத்தி சிந்திக்கும் மாணவன் தனது முயற்சியின் விளைவாக புதுக்கருத்துக்கள் எழும்போது பெருமகிழ்ச்சி அடைகின்றான். இது அவனிடம் தன்னம்பிக்கையை வளர்த்து சிந்தினையை தூண்டுகிறது. பிரச்சினை முறை ( Problem method) , கண்டறிமுறை (Heuristic method), செயல்திட்ட முறை (projet method) ஆதாரக் கல்வி முறை போன்ற புதிய கல்வி முறைகள் யாவும் மாணவர்களது சிந்தனைத்திறனை வளர்க்கவல்லன. சிந்திக்கும் பொருள் பற்றி தெளிவான எண்ணங்களையும் உண்மையான கருத்துக்களையும் பெற்றிருத்தல் சிறந்த சிந்தனைக்கு அடிப்படையாகும். சிந்தனைத் திறன்மிக்க மாணவர்கள் தாமும் நல்வாழ்வு வாழ்ந்து, தங்களது சமுதாயமும் நல் முறையில் முன்னேற்றமடைய உதவுவார்கள்.

# விஷ்ணுவின் விடியல்

*ஆ. இராஜபாலசிங்கம்*
*ஆசிரியர் (M.A)*
*யாழ்/ புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்*

அகவை அறுபதில் கால் பதிக்கின்றது
ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்
மருத மண் வளம் கொழிக்க,
புவனேஸ்வரி அம்மாள் துணையிருக்க
மண் வாசனை கொண்ட
மாண்புறு மக்கட் கூட்டத்தின் - மத்தியில்

உதயமானான் ஸ்ரீ விஷ்ணு
1957இல் அவதரித்த மழலை
2017இல் அறுபதாவது ஆண்டில்
காலடி பதிக்கின்றது.
இயற்கை அழகுகள் நிறைந்த
இனிய சூழல் தனில்

இதமான மென்காற்றின் வருடலுடன்
இன்பமயமாக கல்வி பயில
சிறந்த இடம் ஸ்ரீ விஷ்ணு
ஆழமான அறிவு கொண்ட
அதிபரின் வழி நடத்தலில்
அன்பான ஆசிரிய

உள்ளங்களின் கவனிப்பில்
கட்டுப்பாட்டுடன் கல்வி பயிலும்
மாணவர்களின் கண்ணியத்தை
என்னென்பேன்!
அறுபது வருடத்தில்
அளப் பரிய மாற்றம்
பண்பில் மட்டுமா?
கல்வியிலும்.

வைரவிழா ஆண்டில்
மகத்தான சாதனை படைத்தான் - கவிஸ்ணா.
அவனது எட்டு "A" தரச் சித்தி
விஷ்ணுவின் புகழை
வான் வரை எட்ட வைத்தது.

வளருகின்ற விஷ்ணுவின் குழந்தைகளும்
குவலயம் போற்ற வாழும்
பார் புகழ் ஓங்க உயரும்
என்பதில் இல்லை ஐயம்

உயர்ந்த இலட்சியத்தோடு
சிறந்த விஷ்ணுவின் விடியலுக்காய்
அத்தனை மாணவச் செல்வங்களும்
அயராது உழைக்க வேண்டும்.
வரலாற்றுச் சாதனை படைக்க வேண்டும்.
வானம் உள்ள வரை
மங்கா புகழுக்கு
உரித்துடையதாக வேண்டும் "ஸ்ரீ விஷ்ணு"
அதற்கு எல்லாம் வல்ல
ஆண்டவனின் திருப் பாதங்களை
வணங்கி விடைபெறுகின்றேன்.

# கல்விச் செயற்பாடுகளும் பெற்றோரும்

*மா. கருணாநிதி*
*பேராசிரியர்*

கல்விக்கும் குடும்பத்தின் தொழிற்பாடுகளுக்கும் இடையிலான தொடர்புகள் நீண்ட காலமாகச் சமூகத்தின் கவனத்தை ஈர்த்து வந்துள்ள முக்கியமான விடயங்களில் ஒன்றாகும். பிள்ளைகளின் உள விருத்தி, உடல் விருத்தி, வாழ்க்கைப் பழக்கவழக்கங்கள், சமூக ஊடாட்டத்துக்கான கல்வி, கலாசாரம் பற்றிய அடிப்படை விளக்கங்கள், சமயம் மற்றும் ஒழுக்கக் கல்வி, மொழியறிவு, தொழில்சார் அறிவு போன்றவற்றை வழங்குவதில் பெற்றோர் முக்கிய பங்கேற்கின்றனர். குறிப்பாக கூறுவதானால் ஒரு பிள்ளையின் சமூகமயமாக்கலுக்குத் தேவையான அடிப்படைகளை வழங்குவதில் முன்னிலை வகிக்கின்றனர். கல்வியடைவு மட்ட வேறுபாடுகளின்றி நகரங்கள் மற்றும் கிராமங்களில் வாழும் பெற்றோர் தமது பிள்ளைகளின் விருத்தியில் கொண்டுள்ள ஆர்வமேலீட்டினால் பிள்ளைகளுக்கு போதிய ஊக்குவிப்பினை வழங்கிவருகின்றனர்.

நவீன கல்வியின் உலகளாவிய செல்நெறிகள் உத்வேகம் பெற்றுவரும் வேளையில் கற்பித்தலுக்கான முக்கிய பொறுப்பு பாடசாலைக்கு மட்டுமன்றி அது பெற்றோருக்கும் மாற்றப்பட்டுள்ளது. பாடசாலைகளில் முறைசார் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கத் தொடங்கிய வேளையில், அவை சமூகத்தின் மீது கொண்டுள்ள பொறுப்புக்களும், வகை சொல்லலும் விரிவடைந்துள்ளன. பாடசாலைகளில் கற்கும் மாணவர்தொகை அதிகரித்து வந்துள்ளன. புதிய பாடங்கள் அறிமுகமாயின. மாணவர் கற்றலின் தரம் மற்றும் வினையாற்றல்களில் கவனம் செலுத்தும் கொள்கைகள் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன. கல்வியில் சமத்துவம் சமவாய்ப்பு என்பவற்றை வழங்கும் பொருட்டு கல்வி நடவடிக்கைகள் பரவலாக்கப்பட்டுள்ளன. கல்வியில் போட்டிநிலை தோன்றியது. பாடசாலைகளின் நோக்கம் குறிப்பிட்ட சில பரீட்சைகளுக்கு மாணவர்களை ஆயத்தம் செய்வதாக மாறிய பொழுது, அதற்கென பாடசாலைகளை முழுமையாக நம்பியிருக்க வேண்டிய நிலை மறைந்து செல்லத் தொடங்கியுள்ளது. பாடசாலைகளின் மரபுகள் சம்பிரதாயங்களுக்கு புதிய சவால்கள் எழுந்துள்ளன. மாணவரின் நடத்தைகளில் திசைமாறிய போக்குகள் தோன்றத் தொடங்கியுள்ளன. பாடசாலைக்கும் பெற்றோருக்கும் இடையில் நிலவியிருந்த உறவுகள் நலிவடைந்து செல்கின்றன. இவற்றை கிராமப்பாடசாலைகளிலும் இன்று பரவலாகக் காணலாம்.

இவ்வாறான நிலைமைகள் பாடசாலையில் வழங்கப்படும் கல்வியையும் ஏனைய செயற்பாடுகளையும் மீளாய்வு செய்வதற்கு தூண்டுதலளித்துள்ளன. இவ்வேளையில் அனைத்துச் செயற்பாடுகளின் தராதர மேம்பாட்டிற்கு மாணவர், ஆசிரியர், பெற்றோர், பாடசாலை அதிபர் உள்ளிட்ட சகல தரப்பினரும் இணைந்து செய

லாற்ற வேண்டும் என்பது வலியுறுத்தப்படுவது டன் அச்செயற்படுகள் பற்றிய புதிய எண்ணக் கருக்களும் உருவாகி வருகின்றன. இதற்கான பல சான்றுகள் ஆய்வு மூலம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

**வகுப்பறை செயற்பாடுகளில் மாற்றங்கள்**

உலகளாவிய நோக்கில் அபிவிருத்திய டைந்து வரும் நாடுகளில் வகுப்பறைக் கல்வி தோல்வியடைந்து வருகின்றதா என்ற வினா இன்றைய நிலையில் பரவலாக எழுப்பப்படு கிறது. இத்தகைய வினாக்களிலே கல்வியில் சம வாய்ப்பு, கல்வியின் தராதரம், கல்வியில் சமூக வகுப்பு பேதம், சமூக மற்றும் பொருளாதார ரீதியாகப் பிள்ளைகளை ஓரங்கட்டுதல், வளப் பகிர்வில் வேறுபாடுகள், ஆளணி வளப்பற்றாக் குறை, கல்விச் செயற்பாடுகளை முகாமைத் துவம் செய்வோரிடையில் காணப்படும் வேறு பாடுகள், மாணவரின் வினையாற்றலில் ஏற்பட் டுள்ள வீழ்ச்சிப் போக்கு முதலியன எல்லோர் மத்தியிலும் மேற்கூறிய வினாக்களை ஏற்படுத்தி யுள்ளன. இத்தகைய பிரச்சினைகளிலிருந்து மீள்வதற்கு, அபிவிருத்தியடைந்த நாடுகளும் நீண்ட காலமாக போராடி வருகின்றன. ஆயினும் சரிசெய் நடவடிக்கைகள் அப் பிரச்சினைக்குரிய தீர்வுகளை கண்டுகொண்டபாடில்லை. வேறு பாடுகள் விரிவடைந்தே செல்கின்றன.

இவ்வாறான விடயங்களை கருத்தில் கொண்டு இலங்கையில் 1972 இன் பின்னர் தொடர்ச்சியாக நிகழ்ந்து வரும் புதிய கல்விக் கொள்கை ஆக்கங்கள் மரபு வழியாக நிலவி வந்த பாட வேறுபாடுகளில் பல மாற்றங்களை உருவாக்கியுள்ளது. வகுப்பறைகளிலே அபிவி ருத்திக்கு மட்டும் முக்கியத்துவம் வழங்காமல் பிள்ளைகளை வாழ்க்கை அனுபவங்களுடன் இணைப்பதற்கும் வழிமுறைகளை மேற்கொண் டனர். கல்வியின் சகல நிலைகளிலும் பிள்ளை கள் தாமதமாக கற்க வேண்டிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. வகுப்பறைச் செயற் பாடுகள், செயற்றிட்டங்கள் மற்றும் ஒப்படைகள் மூலம் மாணவரின் தேடலுக்கு வழி கோலியுள்ள னர். புதிய கற்பித்தல் முறைகளின் அறிமுகத் தோடு மரபு வழி வந்த கற்பித்தல் முறைகள் முக்கியத்துவம் இழக்கின்றன. மாணவரின் கற் றல் திறன்களை விருத்தி செய்யும் நோக்கில் தேர்ச்சியை அடிப்படையாக கொண்ட கற்றல் கற்பித்தலுக்கும் கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டு முறைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப் படுகின்றன.

மாணவரின் கல்வி பற்றிய பெற்றோர், சமூகம் என்பவற்றின் எதிர்ப்பார்ப்புகளும் புதிய மாற்றங்களுக்கு வித்திட்டுள்ளன. முக்கியமாக போட்டிகளால் உண்டான எதிர்ப்பார்ப்புகள் கற் றல் நடவடிக்கைகளில் திறன்பட ஈடுபட வேண் டும் என்ற எதிர்ப்பார்ப்பைத் தூண்டியுள்ளன.

**பாடசாலைகளில் அண்மைக்காலச் செயல் நெறிகள்**

பாடசாலையின் அண்மைக்காலப் போக்குகளை அவதானிக்கும் போது, அவற்றின் நாளாந்த செயற்பாடுகளில் பல மாற்றங்கள் இடம்பெற்று வருவதை காணலாம். ஒவ்வொரு பாடசாலையும் தமது தனித்துவத்தைப் பேணும் வகையில் அவற்றின் செயற்பாடுகளை விரிவு படுத்தி வருகின்றன. ஆயினும் பல பாடசாலை கள் சமூகத்தின் எதிர்பார்ப்புக்களை நிறை வேற்ற முடியாமையால் தோல்வி அடைந்து செல்வதை யும் காணலாம். பாடசாலைக்கு வெளியே உள்ள கல்விசார் நிறுவனங்களும், பெற்றோரின் எதிர்பார்ப்புக்களும் ஆசிரியரின் சிந்தனைகளும் ஒன்றுக்கொன்று முரண்படுவதால், பல சிக்கல் கள் எழுந்துள்ளன. மறுபுறத்திலே கல்விசார் நடைமுறைகளில் நிகழ்ந்துவரும் மாற்றங்கள் ஆசிரியரின் தொழில்சார் விருத்தித்தேவைகளை

அதிகரித்துள்ளன. பாடசாலைகளில் ஆசிரியர் களுக்கான தேவைகள் அதிகரிக்கும்போது, பல்வேறுபட்ட துறைகளுக்கும் பல்வேறுபட்ட தகைமைகளுடன் நியமனம் பெறும் ஆசிரியர் கள், தொடர்ந்தும் கல்வியையும் பயிற்சியையும் பெறவேண்டும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றனர். ஆசிரியர் மத்தியில் நிலவும் ஆற்றல் வேறுபாடு கள், கல்வி முறைமையில் மாற்றங்கள், மாணவர் மற்றும் தொழில் பற்றிய மனப்பாங்குகள் என்பன ஆசிரியர் மத்தியில் மாற்றங்களை தோற்றுவிக் கின்றன. மாறிவரும் வகிபங்குகளுக்கு ஏற்ப தம்மை மாற்றிக்கொள்ளாமல், வினைத்திறனற்ற வர்களாகச் செயற்பட முற்படுகின்றனர். இன்னொரு வகையில் வேலைச்சுமையினால் ஆசிரியர்கள் மன அழுத்தங்களுக்கு உள்ளா கின்றனர். கல்வி அமைச்சு வழங்கியுள்ள அறி வுறுத்தல்களுக்கேற்ப வகுப்பறைச் செயற்பாடு கள், ஒப்படைகள் மற்றும் கணிப்பீடுகளை நடத்தி, அவை தொடர்பான அறிக்கையை பேணு தல், பெற்றோருக்குத் தேவைப்படுமிடத்து, மாணவர் முன்னேற்றம் பற்றிய அறிக்கைகளை தெரிவித்தல் என்றவாறு வேலைச்சுமையின் அதிகரிப்பினால் தொழில்சார் மனவழுத்தம் உண்டாவதாக ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர். ஆயினும் அண்மையில் நிகழ்ந்த ஓர் ஆய்வு அறிக்கையின்படி மேலே கூறப்பட்ட விடயங்கள் பாடசாலைகளில் சரியாக முன்னெடுக்கப்பட வில்லை என்பதும் கண்டறியப்பட்டுள்ளது. (NEC, 2014)

உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப் பட்ட கல்விச் சமூகவியல் ஆய்வுகள் வெற்றிகர மான பெற்றோர் பற்றியும் கல்விச்செய்பாடுகளில் பங்கேற்பதால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் எடுத்துக்காட்டியுள்ளனர். தமது பிள்ளைகளின் கல்வியில் பெற்றோர் காட்டும் ஆர்வத்துக்கும், வழங்கும் ஊக்கங்களுக்கும் பிள்ளைகளின் பெறுபேறுகளுக்கும் இடையில் இணைவு உள்ளது. வீட்டிலே கற்கும் சூழல் நன்கு அமையும் போது, பிள்ளைகள் கல்வியறிவில் முன்னேற்றம் காண்கின்றார்கள். ( மஸ்கிறேவ் Masgrave,1996) இவரது ஆய்வின் படி வீட்டுச் சூழலானது பெற்றோரின் சமூக, வகுப்பு, தொழில், வருமானம் என்பவற்றின் அடிப்படையில் வேறு படுகின்றமை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

### கல்வியில் ஈடுபாடு கொண்ட பெற்றோரின் இயல்புகள்

கல்வியில் ஈடுபாடு அல்லது வகிபங்கு பெரும்பாலும் பாடசாலைகளால் தீர்மானிக்கப் படுகின்றன. ஈடுபாடுடைய பெற்றோர் தமது பிள்ளைகள் கற்கும் பாடசாலைகள் எவ்வாறு தொழிற்படுகின்றன, கல்விக்கொள்கைகளில் ஏற்படும் மாற்றங்கள், வகுப்பறைச் செயற்பாடு களில் ஏற்படும் மாற்றங்கள் என்பவற்றை கவனத்திலெடுப்பர். வலுவான ஊக்குவிப்பு வழங்குதல், ஆசிரியர் கூறும் விடயங்களைப் புரிந்துகொள்ளல், அவற்றில் கவனமெடுத்தல், பாடசாலை நிகழ்ச்சித் திட்டங்களில் விருப்பத் தோடு பங்கேற்றல் எனும் பண்புகளுடன் காணப்படுவர்.

மேற்கூறியவற்றோடு, பாடசாலைக்குச் சென்று அதிபர் மற்றும் ஆசிரியரின் கவனயீர்ப் புக்கு உள்ளாதல், தமது பிள்ளைகளின் வீட்டு வேலைகளுக்கு உதவுதல், வகுப்பறையில் இடம்பெறும் விடயங்கள் பற்றி ஏனைய பெற்றோ ருடன் கலந்துரையாடுதல், தமது பிள்ளைகளின் கற்றல் தொடர்பான பிரச்சினைகளை ஆசிரியர் களிடம் கேட்டறிதல், அறிவுரை பெறுதல் என்பன வும் முக்கியமானவை.

பெற்றோர் பற்றிய நோக்கில் அவர்கள் கல்வி பற்றிக் கொண்டிருக்கும் கருத்துக்களில் தெளிவு இன்மையால் பாடசாலை நடவடிக்கை கள் அமைய வேண்டிய விதம் தொடர்பான சில

முரண்பட்ட நிலைமைகளும் தோன்றுகின்றன. சில பெற்றோர் பாடசாலைகளில் கற்றல் மட்டும் நிகழ வேண்டும் என எதிர்பார்ப்பர். வேறு சிலர் இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கும் அவற்றில் தமது பிள்ளைகள் பங்கேற்பதைப் பெரிதும் விரும்புவர். சிலர் பாடசாலையில் ஒழுக்கம், கட்டுப்பாடு, பெறுமானங்கள் மற்றும் குணவியல்புகளை மேம்படுத்துவதை முக்கியமாகக் கொள்வர். இத்தகைய செயற்பாடுகளில் சில பாடசாலைகள் வெற்றியடையலாம். சில பாடசாலைகள் தோல்வி அடையலாம்.

கல்விச் செயற்பாடுகளில் பெற்றோரின் பங்கேற்பு அதிகரிப்பதற்கு, பெற்றோரைப் பற்றிப் பாடசாலைகள் மற்றும் ஆசிரியர்கள் கொண்டிருக்கும் கருத்துக்களும் அபிப்பிராயங்களும் முக்கியமானவை. பாடசாலையின் நடவடிக்கை தொடர்பாக பெற்றோர் எல்லோரும் அறிவுடையவர்களாக இருப்பார் என்ற எதிர்பார்ப்பு அவசியமற்றது. ஆயினும் கல்வியில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றங்களுக்கேற்ப பெற்றோரின் உதவியைப் பெற்றுக்கொள்ளும் வகையில் அவர்கள் மத்தியில் விழிப்புணர்வு மற்றும் நம்பிக்கை என்பவற்றை உருவாக்குதல் அதிபர் மற்றும் ஆசிரியர்களின் பொறுப்பாகும். இவ்விடயத்தில் ஏற்படும் முரண்பாடுகளையும் அதிபர் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

சமகால வகுப்பறைச் சூழ்நிலையில் ஆசிரியர்கள் பின்வரும் விடயங்களில் பெற்றோரின் பங்கேற்பைப் பெற்றுக்கொள்ளப் போதிய அளவில் ஊக்குவிப்பினை வழங்கலாம்.

- ☞ பிள்ளைகள் நாளாந்தம் ஈடுபடும் வேலைகளில் கவனஞ்செலுத்தல்.
- ☞ வீட்டு வேலைகளுக்குத் துணை செய்தல்.
- ☞ பாடசாலையில் நடைபெறும் விடயம் பற்றி கலந்துரையாடல்
- ☞ பிள்ளைகளுடன் சேர்ந்து பாடங்களைப் படித்தல்.
- ☞ தேவை ஏற்படுமிடத்து பாடசாலை ஆசிரியர் ஆகியோருடன் தொடர்பு கொள்ளுமாறு கூறுதல்.
- ☞ பாடசாலை, வகுப்பறைக் கூட்டங்களில் பங்கேற்கச் செய்தல்.
- ☞ மாணவரின் ஒப்படைகளுக்கு உதவுதல்
- ☞ பாடசாலை நேரத்தில் ஆசிரியருக்கு உதவும் வகையில் இயலக்கூடிய பணிகளில் ஈடுபடுத்தல்.
- ☞ குறித்த வகுப்பிலுள்ள ஏனைய பிள்ளைகளின் பெற்றோருடன் கல்வி சார்ந்த விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுதல்.
- ☞ இணைக் கலைத்திட்டச் செயற்பாடுகள், ஓய்வு நேர செயற்பாடுகள் ஆகியவற்றில் தாமாக முன்வந்து உதவிகள் செய்யத் தூண்டுதல்.
- ☞ பெற்றோரிடமுள்ள சிறப்பறிவை பெறத் துண்டுதல்.
- ☞ பெற்றோரைக் கற்றல் வளமாக பயன்படுத்த ஊக்குவித்தல்.

பிள்ளைகளின் முதல் 5 வயதுகளில் கல்வியை வழங்குவதற்கான பிரதான பொறுப்பு பெற்றோரைச் சாருகின்றது. இவ்விடத்தில் பெற்றோர் தகைமையும் தேர்ச்சியும் கொண்ட ஆசிரியர் போல இருக்க வேண்டும் எனக் கருதுவதை விடுத்து அவர்களுடைய உதவிகளையும் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் பெற்றுக் கொள்ள முயற்சிக்க வேண்டும். பெற்றோர் பிள்ளைகளுக்கு உதவும் ஆற்றலை விருத்தி செய்தால் பிள்ளைகளின் வினையாற்றல் அதிகரிப்பதுடன் கற்றல் தொடர்பான இருசாராரது மனப்பாங்குகளும் விருத்தியடைய வாய்ப்புகள் உள்ளன.

பெற்றோர் அண்மிய நிலையிலிருந்து உதவிகளை வழங்கும் போது பிள்ளைகள் அதிக நன்மையடைகிறார்கள். குறிப்பாக விசேட உதவி தேவைப்படும் பிள்ளைகளுக்கு கற்பிக்கும் போது வீட்டில் பெற்றோர் மூலம் கிடைக்கும் உதவிகளும் வழிகாட்டல்களுமே அதிகளவில் பயன்தந்துள்ளன.

அண்மைக் காலங்களில் ஏனைய துறைகளில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் கல்வியிலும் பல மாற்றங்களுக்கு உதவுகின்றன. சம காலத்தில் அறிவுப் பெருக்கமானது மிகக் குறைந்த நாட்கணக்கில் இரண்டு மடங்காகிறது. எனவே தற்பொழுதுள்ள அறிவு காலாவதியாகலாம் அல்லது போதாமல் இருக்கும். கல்விக்காக ஆசிரியர்களில் மட்டும் தங்கியிருக்காது வீட்டில் பெற்றோர் மூலம் அறிவைப் பெருக்குவதற்கான வாய்ப்புக்களையும் விரிவுபடுத்த வேண்டும். கல்வியின் புதிய வளங்கள் பற்றிய நோக்கில் ஏனைய வளங்கள் மத்தியில் வீட்டில் கல்வியூட்டுபவர் என்ற வகையில் பெற்றோரின் பங்கேற்பினையும் அதன் நம்பகத் தன்மையையும் அதிகரிக்கும் வகையில் பாடசாலைகள் பெற்றோரை மதித்துச் செயற்படுதல் நன்மைகளை விளைவிக்கும்.



பாடசாலையின் பழையமாணவர் சங்கம்



பாடசாலை அபிவிருத்திக் குழு

# வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

*தொகுப்பு*
*ற.யசாளினி*
*தரம்- 11*

1. மனிதனை மனிதனாக்குவது
உதவிகளும் வசதிகளும் அல்ல
இடையூறுகளும் துன்பங்களும்!
- டபிள்யூ மேத்யூஸ்

2. துன்பங்களால் நொந்து கிடக்கும்
உன் உள்ளத்தை
இறைவனிடம் திறந்து காட்டு
கசிந்துருகி கண்ணீர் விட்டு அழுது
இறைவனிடம் இறைவா! என்னை
உன்பக்கம் இழுத்துக் கொள் எனக்கு
அமைதியைத் தந்தருள் என்று
வேண்டிக்கொள் தொடரந்து இவ்வாறு
செய்து வந்தால் படிப்படியாக
நீ அமைதி பெறுவாய்!
- சாரதா தேவி

3. நிம்மதியைத் தேடி அலைவதில் பயனில்லை
அது உங்கள் நெஞ்சுக்குள்ளே இருக்கிறது!
- பாரதிதாசன்

4. உழைப்பு உடலை வலிமைப்படுத்தும்
கஷ்டங்கள் உள்ளத்தை வலிமைப்படுத்தும்!
- பிளெமிங்

5. வெற்றியை விட தோல்வி தான் அதிக
பாடங்களைக் கற்றுத்தருகிறது!
- கார்ல் மெனிக்கர்

6. வேகமாக முடிவெடுக்கக் கூடாது-ஏனென்றால்
வேகமான முடிவுகள் உறுதியானவை அல்ல!
- ரூஸோ

7. எல்லோரிடத்திலும் சம அன்பு கொள்ளுதல்
கடுமையான ஓர் ஒழுக்கம் ஆகும்
ஆனால் இந்த ஒழுக்கம் இன்றி
முத்தி கிடைக்கது!
- சுவாமி விவேகானந்தர்

8. செயலை விதையுங்கள் பழக்கம் உருவாகும்
பழக்கத்தை விதையுங்கள் குணம் உண்டாகும்
குணத்தை விதையுங்கள் உங்களுக்கு
எதிர்காலம் உண்டாகும்!
-போர்டு ஏமன்

9. முற்பிறவிகளிலிருந்து வந்துள்ளவையான
பற்று, பேராசை, போகநாட்டம் இவையே
உலகில் காணும் துயரங்களுக்கும் வீண்
பெருமைகளுக்கும் காரணம் தனது சுமையை
உணர்கின்ற ஒருவன் தன்னைத் தானே
நன்றாக பாதுகாத்துக் கொள்ள வேண்டும்!
- புத்தர்

10. மனவலிமை இல்லாதவர்களைத் தான்
தீமை துன்புறுத்துகின்றது
மனவலிமை படைத்திருப்பவர்களுக்கு
தீமையுமில்லை துன்பமுமில்லை!
- சுவாமி சித்பவானந்தர்

11. முடிந்தால் சமாதானமாக இரு - ஆனால்
என்ன நேர்ந்தாலும் உண்மையினை
மட்டும் கூறு!

- மாட்டின் லூதர் கிங்

12. மனிதனுக்கு துணிச்சலைப் போல
உலகில் உண்மையான நண்பன்
வேறு யாருமில்லை!

- சாணக்கியர்

13. முயற்சி, முயற்சி! தோல்வி - சரி
மீண்டும் முயற்சி, முயற்சி!
தோல்வியா? சரி அந்த வகை முயற்சி
வெற்றி தராது எனக் கண்டுபிடித்ததில்
வெற்றி பெற்று விட்டோம் - இப்போது
மீண்டும் புது முயற்சி!

- நெப்போலியன்

14. நம்பிக்கை கடவுளையும் அசைக்கும்
பயம் பலசாலியையும் செயலிழக்க வைக்கும்!

- ஜோயன் ஆஸ்டின்

15. நற்பண்பு இல்லாதவனின் அறிவு ஆபத்தானது
அறிவில்லதவனின் நற்பண்பு பயனற்றது!

- நேரு

16. சோம்பல் எல்லா விஷயங்களையும்
கஷ்டமாக்கும்
சுறுசுறுப்பு எல்லாவற்றையும் எளிதாக்கும்!

- ஃ பிராங்கிளின்

17. சக மனிதருக்கு உதவுவது
ஆண்டவனுக்கு உதவுவதாகும்
எனவே எச்சமயத்தாரும் ஏழைகளுக்கு
உதவத் தயங்கக் கூடாது!

- அன்னை தெரசா

18. என்னிடம் எதை வேண்டுமானாலும் கேள்-
ஆனால் நேரத்தை மட்டும் கேட்காதே!

- நெப்போலியன்

19. துன்பத்தை அனுபவித்த காலத்தை மறந்துவிடு
- ஆனால் அது உனக்கு கற்பித்த
பாடத்தை மறந்துவிடாதே!

- அப்துல்கலாம்

20. பிரார்த்தனை செய்யுங்கள் . கடவுளுக்கருகே
நீங்கள் செல்லலாம் - ஆனால் சேவை செய்து
பாருங்கள் கடவுள் உங்கள் அருகில் இருப்பார்!

- அன்னை தெரசா

21. நம்மை வெற்றி பெற யாரும் பிறக்கவில்லை
என்பது பொய். பிறரைத் தோற்கடிக்க
நாம் பிறந்திருக்கிறோம்
என்பது உண்மை!

- மாவீரன் அலெக்சாண்டர்

22. ஒரு முறை வந்தால் கனவு - இரு முறை
வந்தால் ஆசை
பல முறை வந்தால் லட்சியம்!

- அப்துல்கலாம்

23. எளிமையாய் இருப்பது கடினம்- ஆனால்
அதைவிட மகிழ்ச்சி தருவது வேறொன்றில்லை!

- காந்தியடிகள்

24. கால் தடுமாறினால் சமாளித்துக் கொள்ளலாம்
நாக்குத் தவறினால் மீளவே முடியாது!

- பெஞ்சமின்ஃ பிராங்க்ளின்

25. தனது திறமைகளை காலத்தில் பயன்படுத்திக்
கொள்ள தெரிந்தவனே அறிவாளி

- யாரோ



சமூகத்தொண்டன் அமரர் மனல்பகுதி சி.அரியகுட்டி அவர்களின்
நூற்றாண்டு ஞாபகார்த்தமாகவும் பாடசாலையின் வைரவிழாவினை முன்னிட்டு
கௌரவ அ.பரஞ்சோதி (மாகாணசபை உறுப்பினர்)
அவர்களின் நிதியளிப்பில் அமைத்துத்தரப்பட்ட
சரஸ்வதி சிலை




சமூகத்தொண்டன் அமரர் மனல்பகுதி சி.அரியகுட்டி அவர்களின்
நூற்றாண்டு ஞாபகார்த்தமாகவும் பாடசாலையின் வைரவிழாவினை முன்னிட்டு
செல்வயோக நாதன் சந்திராதேவி குடும்பத்தினரின்
நிதியளிப்பில் அமைத்துத்தரப்பட்ட
நுழைவாயில் வளைவு

# Importance of the English Language in Today's World

***K.PREMANANTH***
***TEACHER***
***J|PUTHAKALADDY SRI VISHNU VID.***

***Language***

Language is our primary source of communication. It's the method through which we share our ideas and thoughts with others. Some people even say that language is what separates us from animals and makes us human.

There are thousands of languages in this world. Countries have their own national languages in addition to a variety of local languages spoken and understood by their people in different regions. Some languages are spoken by millions of people, others by only a few thousand.

***Why Learn English?***

English was originally the language of England, but through the historical efforts of the British Empire it has become the primary or secondary language of many former British colonies such as the United States, Canada, Australia, Sri Lanka and India. Currently, English is the primary language of not only countries actively touched by British imperialism, but also many business and cultural spheres dominated by those countries. It is the language of Hollywood and the language of international banking and business. As such, it is a useful and even necessary language to know.

***English is the International Common Tongue***

There are several factors that make the English language essential to communication in our current time. First of all, it is the most common foreign language. This means that two people who come from different countries (for example, a Mexican and a Swede) usually use English as a common language to communicate. That's why everyone needs to learn the language in order to get in touch on an international level. Speaking it will help you communicate with people from countries all over the world, not just English-speaking ones.

*Education*

English is also essential to the field of education. In many countries, children are taught and encouraged to learn English as a second language. Even in countries where it is not an official language, such as the Netherlands or Sweden, we will find many syllabi in science and engineering are written in English. Because it is the dominant language in the sciences, most of the research and studies you find in any given scientific field will be written in it as well. At the university level, students in many countries study almost all their subjects in English in order to make the material more accessible to international students.

*The Internet and Press*

On the Internet, the majority of websites are written and created in English. Even sites in other languages often give you the option to translate the site. It's the primary language of the press: more newspapers and books are written in English than in any other language, and no matter where in the world you are, you will find some of these books and newspapers available. In fact, because it is so dominant in international communication, you will find more information regarding nearly every subject if you can speak this language.

*Resources Make Learning English Easy*

Although many people think that it is very difficult and confusing, English is actually the easiest language of the world to learn because there are so many resources available. As soon as you decide you want to learn, there are thousands of resources on the Internet and in bookstores. I'm not just talking about lessons and grammar books. You can supplement traditional learning materials with children's TV shows and books. I suggest watching as much TV as you can, in English with English subtitles, and you will pick up conversational English in no time.

*Travel and Business*

With good understanding and communication in English, you can travel around the globe. Because it is the international language for foreigners, it's easy to get assistance and help in every part of world. You can test it by online travel. Any travel booking site you can find will have English as a booking option.

English skills will also help you in any business venture you choose to follow. If you visit some offices, companies, governmental organizations, or even math or engineering companies, you will see the importance of English. Any big

company will hire their professional staff after getting to know whether the people they are hiring are good at English or not. Companies who want to function at an international level only consider their staff well educated if they are good English speakers, writers, and readers.

Those who are still unaware of the importance of English should start learning it, as a time will come when everything will be understood, spoken and written in English. In a lot of ways, that time is already here. Go ahead, watch some media, and get an idea of the language. You won't be disappointed.

# ஆலமர விழுதுகளாய்

*உங்களில் நான்*
*திருமதி. துஷ்யந்தி பிரதீபன்*
*யா/புனித திரேசாள் மகளிர் கல்லூரி*
*அச்சுவேலி*

என்னைத் தாயைப் போல அரவணைத்து வளர்ந்து நிற்கும் வழிகாட்டியாக இருந்த எனது விஷ்ணு தாயிற்கு உளம் குளிர மனம் நிறைந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்

**அறுபது ஆனதா! ஆச்சரியம்-அன்று**
**பார்த்த அதே அழகும் பொலிவும்**

மிஞ்சமுடியாத மிடுக்கும் கொண்டவள் என் அன்புத்தாய் புத்தூர் கிராமத்தை புதுப் பொலிவுடனும் மக்களை அறிவுடனும் வளர்ப் பதில் கருத்துடன் திகழும் தர்மத்தாய். சொல்லிக் கொள்ள வார்த்தைகள் ஈடாகாது. என்னையும் இந்தப் பாடசாலையையும் ஒரு பாலமாக இணைத்தவர் மதிப்பிற்குரிய முன்னாள் அதிபர் திரு.ஞா.சிவஞானம் அதிபர் ஆவார்.B.A பரீட்சையினை எழுதிவிட்டு வீட்டிலேயே பெறுபேற்றுக் காக காத்திருந்த வேளை

**"நல்லதோர் வீணை செய்தேன் – அதை**
**நலம் கெட புழுதியில் எறிவதுண்டோ....**
எனப்பாரதியார் பாடிய பாடலடிகளுக்கு அமைவாக என்னை அந்தப்பாடசாலையில் சித்திரை மாத சதுர்த்தியில் ஓர் ஆசிரியராக இணைத்துக் கொண்டவர். நான் இந்தப் பாடசாலைக்கு வந்த பொழுது அங்கே மாணவர்கள் அதிகம் இருந்தாலும் கற்பிக்கும் ஆசிரியர்கள் குறைவாகவே காணப்பட்டனர். மிகவும் ஏழ்மை நிலையின் தோற்றத்திலேயே விஷ்ணுத்தாய் காணப்பட்டார். எத்திசையிலும் வரக்கூடிய பாதை அமைப்பும் கிடுகுகளினால் சில வகுப் பறையின் கூரைகள் காணப்பட்டமையும் மழை காலத்தில் பாடசாலை நீரின் மீது மிதக்கும் ஒரு தோணி போலவும் மின்சார வசதி, குடிநீர்வசதி என எதுவும் இன்றிக்காணப்பட்டது. இங்கு ஒரு மாட்டுவண்டில் இருந்தது. அதில் தான் சாதாரண தரத்தின் வகுப்பினை உடைய மாணவர்கள் நீர் எடுத்து வருவார்கள். அதன் பின் குடிதண்ணீர் வசதியும் மின்சார வசதியும் இப்பாடசாலைக்கு கிடைக்கப்பெற்றன. நான் இப்பாடசாலையிலேயே முதன் முதல் எடுத்த வகுப்பு தரம் நான்கு அந்த வகுப்பறையில் இருந்த மாணவர்கள் அப்பொழுது உபஅதிபராக திரு.நடராசா அவர்கள் இருந்தார். நான் எனது வாழ்நாளிலேயே மறக்க முடியாத ஒரு எளிமையானவரும் இனிமையான வருமான மதிப்பிற்குரியவர். கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டினை அவரிடமிருந்து அறிந்து கொண்டேன். இன்று வரை அவர் அப்பாடசாலையில் வைத்திருக்கும் அன்பினை ஒவ்வொரு விழாவிலும் தவறாது கலந்த கொள்வதன் ஊடாக அறிந்து கொள்கின்றேன். அவருடன் தமிழ் பாட ஆசானாக மதிப்பிற்குரிய திரு.கு.ரவிச்சந்திரன் தற்போது அத்தியார் இந்துக்கல்லூரி அதிபர் அவர்களும் கணிதபாட ஆசானாக காலஞ் சென்ற சிறப்பு பொருந்திய கண்ணன் ஆசிரியர் அவர்களும், திருமதி.தவராசகுமாரி (சரஸ்வதி வித்தியாலயம்) தமிழ் பாடத்திற்கும் சுகாதாரம் உடற்கல்வி, சமயம் என்பவற்றிற்கு ஓய்வு பெற்ற உபஅதிபர் மதிப்பிற்குரிய ஸ்ரீஇராகவன் அவர்

களும் விஞ்ஞான பாடத்திற்கு பெருமையும் மதிப்பும் பொருந்திய திரு.மகேந்திரராசா தற்போது இந்து ஆரம்பப்பாடசாலை அதிபர், யாழ்ப்பாணம் அவர்களும் மனைப் பொருளியல் பாடத்திற்கு இனிமையானவரும் நகைச்சுவை யாளருமான ஓய்வு பெற்ற திருமதி.பாமா உதய குமார் அவர்களும் விவசாய பாடத்திற்கு அமரத் துவமடைந்த ஸ்ரீரஞ்சன் ஆசிரியர் அவர்களும் இடைநிலை ஆசிரியர்களாக கற்பித்தல் செயற் பாட்டை சிறப்பாக நடாத்த ஆரம்பப் பிரிவில் அன்பிற்கினிய வர்களாக துளசி ஆசிரியர், திருமதி.யோகராணி, திருமதி.செல்வறஞ்சினி, திருமதி றஜனி அவர்களுடன் திரு.ரவீந்திரன் ஆசானுடன் நானும் என்னைத் தொடர்ந்து குந்தவி என்னும் ஆசிரியரும் இணைந்து இனிமையாக செயற்பட்டோம். அனைவரதும் ஒன்றிணைந்த செயற்பாடும் தேனீக்கள் சேர்ந்து கட்டிய கூடு போன்றது.

எமது காலத்தில் இன்று புதுப்பொலி வுடன் காணப்படும் முருகேசு மண்டபம் முன் னாள் அதிபர் சிவஞானம் அவர்களின் விடா முயற்சியும் புத்திசாதுரியமான செயற்பாட்டினா லும் தோற்றம் பெற்றது. உண்மையில் அவரது பணியை நான் இந்த நேரத்தில் கூற வழங்கிய சந்தர்ப்பத்திற்கு மனமகிழ்ச்சி அடைகின்றேன். ஏனெனில் அதன் பின் இதுவரை இவ்வாறான ஒரு கட்டடம் தோன்றவில்லை. நிச்சயம் தோன்ற வேண்டும் என்பதிலும் ஐயமில்லை. திரு.சிவ ஞானம் அதிபர் ஓய்வு பெற திரு.கு.ரவிச்சந்திரன் அதிபர் அவர்கள் பொறுப்பேற்றார். இவரது காலத்தில் பல ஆசிரியர்கள் இணைந்து கொண் டார்கள். இணைந்து கொண்டது மட்டுமன்றி பல சாதனைகளை மாணவர்களும் ஆசிரியர்களும் நிலைநாட்டினார்கள். நான் சகலதுறைகளிலும் வளர்ந்து கொள்வதற்கு ஒரு ஊன்று கோலாக இருந்தவர் மதிப்பிற்குரிய திரு.கு.ரவிச்சந்திரன் அதிபர் அவர்கள். இவருடைய இடமாற்றத்திற்கு பின் சிறிது காலம் பதில்அதிபராக கடமையாற் றினார். அது ஒரு வசந்தகாலமாக இருந்தாலும் இடையிடையே சில கலவரங்களும் நடைபெற் றன. திரு.க.ரவீந்திரன் அதிபர் அவர்களும் அடிக் கடி கூறுவார் காய்க்கின்ற மரம் கலலெறிபடும் என்று அதற்கமைவாக கலவரங்களும் நல்வரங் களாகவே மாறின. ஏனெனில் தற்போது வளலாய் பாடசாலையின் அதிபராக திரு.கு.ரவிச்சந்திரன் அதிபர் அவர்கள் திகழ்வது இப்பாடசாலைக் குரிய பெருமைகளில் ஒன்றாகும். விஷ்ணுத்தாய் பெற்ற புகழைக் கூற வார்த்தைகள் இல்லை இங்கு புதிதாக இணைந்த ஆசிரியர் ஒவ்வொரு வரது உழைப்பும் வெற்றியை ஈட்டித்தந்தன. அந்த வகையில் விஞ்ஞான கூட ஆய்வறை பெற்ற மதிப்பு கணனிக்கூடம், ஆங்கிலத்துறை யின் வெற்றி இவ்வாறு கூறிக்கொண்டே போக லாம். அவற்றிலும் இப்பாடசாலையின் கணனித் துறை ஆசிரியரான திரு.பிரகாஷ் அவர்கள் பரீட்சை ஆணையாளராக கடமையாற்றுவதும் தற்போது திரு.வசந்தமாறன் உப அதிபர் அவர் கள் கல்வி நிர்வாக சேவையாளராக பயிற்சி பெறுவதும் பாடசாலையின் பெருமைகளே ஆகும்.

தலைமைத்துவம் என்னும் போது அதனை அன்புடனும் பண்புடனும் வழிநடத்து வதும் அதிகாரத்தைக் கொண்டு. வழிநடத்துவ தும் என இரண்டு வகை உண்டு அதிலே முதலா வதான அன்புடனும் கண்டிப்புடனும் வழி நடாத் தும் மதிப்பிற்குரிய திரு.செந்தில்வடிவேல் அதிபர் அவர்களின் காலத்தில் உப அதிபராக ஸ்ரீராகவன் அதிபர் அவர்களும் அவருடன் இணைந்து திரு.வசந்தமாறன் உப அதிபரும் அவர்களின் கீழ் தழிழை வளர்த்தெடுக்க திருமதி.பத்மினிதேவி ஆசான் கணிதபாடத்திற்கு திருமதி.ஜெயபாலன், விஞ்ஞானதுறையில் திரு.கஜேந்திரன் சமயத்திற்கு திரு. ஸ்ரீஇராகவன் (ஓய்வு பெற்றுவிட்டார்) ஆங்கில அறிவை

வளர்க்க திரு.பிரேமானந் அவர்களும் தேகா ரோக்கியத்திற்கு உடற்கல்விக்கு திரு. சிவசுகிர் தன், வரலாறு புவியியல் திரு. ராஜபாலசிங்கம், அவர்களும் கலைத்துறைக்கு திருமதி.தர்சினி, திருமதி.மரூபியா அவர்களுடன் மனைப் பொருளியலுக்கு திருமதி.ஞானம் ஆசிரியரும், இடை நிலையில் பணிபுரிய ஆரம்பப்பிரிவில் என்னுடன் திருமதி.யோகராணி, திருமதி.பிருத்தி விராஜ், திருமதி.சுதர்சினி. இவர்களுடன் திரு சத்தியநாதன் ஆசிரியரும் நான் பிரியும் வேளை யில் செல்வி கல்பனா ஆசிரியரும் இணைந்து கொண்டார். எல்லோருக்கும் இனியவர்களாக திரு.வ.ஜீவகுமார் (கல்விசாரா ஊழியர்) மற்றும் திரு.வ.சண்முகநாதன் (இரவு காவலாளி) செயற் பட்டனர்


இன்று அறுபதை அகமகிழ்வுடன் கொண்டாடும் தாயின் வெற்றிகள் ஒவ்வொன்றும் விட்டுப்பிரிந்தவர்களின் கைகளிலும் தொடர்ந்து செல்பவர்களின் மனங்களிலும் குடி கொள்ள மென்மேலும் வளர்ச்சி பெற்று சிறப்புபெற வாழ்த்தி தலை வணங்குகின்றேன்.

பாடசாலையின் நிகழ்வுகள் சில...









# முதியோரைப் பேணுவோம்

*ரம்யா உதயகுமார்*

அம்பொன் கமலத்தில் அமர்ந்திருக்கும்
கலைமகளே!
செம் பொன் கவிவரியை சிந்தனைக்கு
விதைப்பவளே!
கற்பனையில் கவியூற தமிழ்தானம்
செய்பவளே!
கற்பகமே உந்தனுக்கே தந்தனன் முதல்
வந்தனங்கள்.

மூவேந்தர் ஆண்டு முடி கொண்ட தமிழே!
பாவேந்தர் பாடி பயன் கண்ட தமிழே!
நாவேந்தர் சொல்லில் நயம் கண்ட தமிழே!
பார் வேந்தர் யாவரும் பாராட்டும் தமிழே

சங்க காலத்தில் சனித்த தமிழே!
வங்கம் சூழ் தேசங்களில் வாழும் தழிழே!
சங்கம் அமைத்து சான்றோர் சுவைத்த தழிழே!
தங்கம் என தகிக்கும் மங்காத் தமிழே!
கவி அணங்கு என் வணக்கம் ஏற்பாய்

புலவர்கள் பலர் பிறந்த
புதுவையின் ஓர் மூலையிலே
கவலைக் கறையற்ற
சலவை செய்த ஊரே!

மதுரை வாழ் மீனாட்சி
மறு பெயர் மாற்றி புவனேஸ்வரியாய்
எழுந்தருளி அருள் வழங்கும்
எழில் நிறைந்த ஊரே!
வான் மகிழ்ந்து மழை தூவும்
நான் பிறந்த ஊரே!

தேன் கமழும் செந்தமிழால்
வந்தனங்கள் தந்தேன்

கனம் பண்ணி நான் இன்று
புனைந்திட்ட கவிதைக்கு
பொருளாகும் முதியோர்கள்
அனைவருக்கும் வந்தனங்கள்

சிற்பங்கள் செதுக்கிய சிற்பிகளை பற்றி
அற்புத வாழ்விற்கு அடிக்கல் நட்டவரைப் பற்றி
கற்பனையில்லாக் கவி படி என்றார்கள்.

நிறைய குறையா வாழ்க்கை மறை அறிந்த
இறையிலும் உயர்ந்த நரை கண்ட உறவை
நறுந் தேன் உமிழும் நற் தமிழ்க் கவியால்
குறை அறிவுடைய குழந்தை யான் பாடுவதோ

பற்பல பரம்பரையின்
முதுகெலும்பாம் முதியவரை
முப்பது தாண்டா
புதியவள் நான் பாடுவதோ

உம்மை பாடும் திறமை அறியேன்
உம்மை வாழ்த்தும் தகமை அறியேன்
உம்மை வணங்கும் உரிமை உள்ளதால்
மென்மைக் கவியுடன் இங்கு வந்தேன்
எம்மை ஈன்றவரே!
ஈன்றவரைப் பெற்றவரே
சாற்றும் கவியின்
கூற்றிலேதும் சரிவிருந்தால்
தூற்றாது பொறுத்திடுவீர்

வித்தொன்று முளையாகி
விழுதிட்டு மரமாக
வேராக நின்றவரே!

சந்ததிக் கோபுரம்
சாயாமல் நிமிர்ந்தெழ
அத்திவாரமானவரே!

வீட்டுக்கொரு
பாட்டன் பாட்டி இல்லையென்றால்
நாட்டுக்கு உதவாத பிள்ளைகளாய்
நாம் வளர்வது நிச்சயமே!

ஏட்டுக்கல்வி ஒரு
எள்ளளவும் உதவாது
பாட்டி சொல்லும்
பக்குவம் அறியாவிடின்
கட்டறுந்த பட்டம் போல்
வெட்ட வெளியில் வாழ்க்கை
தட்டுத் தடுமாறுமே

வட்டம் அது வாழ்க்கையானால்
வயோதிபர் விட்டம் போன்றவர்
பட்ட மரம் இவர்கள்
திட்டிடும் வார்த்தைகள் தான்
தீட்டும் எம் வாழ்வை என
எட்டுக மனமே!

பார் போற்றும் சான்றோராய்
சீர் பெற்று உயர்ந்தாலும்
வேரூன்றி வளர முளையில்
நீரூற்றி வளர்த்தவர்
நீரன்றோ பெரியவரே
நீர் எமக்கு செய்தவற்றை
நினைவு செய்யும் நிகழ்வதனில்
நினைவில் இருப்பதை
புனைந்திட்டேன் கவிதைகளில்

திண்ணையில் உட்கார்ந்து
திரிகையில் தினை அரைத்து
வண்ணமுற நீர் சொன்ன
புனைகதைகள் நினைவிருக்கு

ஆம்பல் அலர் பொழுதில்
சாம்பலிட்டு சிமிலி விளக்கி
லாம்பு கொழுத்துகையில்
தோம்பு சொன்ன நினைவிருக்கு

ஆச்சி ஒன்று அம்புலியில்
காச்சி கஞ்சிவடிக்குது என்று
பொய் மொழிந்து சோறூட்டும்
தெய்வ முகம் நினைவிருக்கு
நல்லெண்ணெய் வைக்காட்டில்
பொல்லால் அடிப்பனென
வல்லமையாய் நீர் செய்த
நல்லதுகள் நினைவிருக்கு

பொக்னக வாயில் பொயிலை போட்டு
பக்கத்தில் அமர வைத்து
பக்கவமாய் நீர் பகர்ந்த
சிக்கனங்கள் நினைவிருக்கு

அறுவடைச் சூடாற முன்பே
வரப்பில் வைத்து நெல்வாங்கி
உரல் குத்தி உமி விலக்கி
சோறு சமைத்த நினைவிருக்கு

பெருங்கடல் நண்டு போட்டு
கருவாடு இறாலும் சேர்த்து
ஒடியல் கூழ் காச்சி அதை
குடிக்க தந்த நினைவிருக்கு
பெரிய பிள்ளை ஆனபோது
கருவேப்பிலை கடுகும் போட்டு
வறுத்து தந்த சுறாமீனின்
நறுமணம் நினைவிருக்கு

எள் இடிச்சு எண்ணெயாக்கி
உழுத்தம்மா குழைச்சு
சமைச்ச போது நீ எனக்கு
சமைச்சு தந்த நினைவிருக்கு

எப்படி மறப்போம்
எம் முது உறவுகளை
சத்தியமாய் உம் வதனம் நீர்
செத்த பின்பும் மறவாது

மாரி கால கரு மேகத் தலை
கோடைக்கால வெண் மேகம் ஆச்சு
நாரியும் வழைஞ்சு போச்சு
நாலு பல்லு மிச்சம் உண்டு

புருவ முடி உதிர்ந்து
சருமமும் சுருங்கி போச்சு
நெருங்கி வாறான் காலன் என
நெருஞ்சி முள்ளு குத்துகிறது.

அச்சம் ஏன் உம் அருகில்
அன்புடன் நாம் இருப்போம்
இச்சகத்தில் இளையவர்கள்
இளைப்பாறல் ஈந்திடுவோம்

அன்று நீர் செய்த
நன்றுகளை இன்று மறக்க
நன்றி கெட்ட இழி
பன்றிகள் நாம் அல்லவே

அடித்திருப்பீர் சிலவேளை
கடிந்திருப்பீர் பலவேளை
கடுகளவும் நினையோம் அதை
உடல் தளர்ந்த வேளையிலே
ஆயிரம் அலுவல்கள்
ஆங்காங்கே இருந்தாலும்
பாயில் நீர் சாய்கையிலே
பார்க்காமல் போவோமா?

நோயில் நீயிருந்து
காயம் கரைகையிலே
நாவினால் சினந்து
நோவினைத் தருவோமா?

வெந்நீரில் குளிக்கவாத்து
வேண்டியது செய்தவரை
கண்ணீரில் கரைய விட்டு
காயத்தில் வாழ்வோமா?

நாதியற்று உங்களை
வீதியில் அலையவிட்டு
பேத்தி நெஞ்சு கல்லென்ற
அபகீர்த்தி அளப்போமா?

உலகத்தில் வாழ்க்கையில்
அவலங்கள் தந்துவிட்டு
இறந்த பின் உமக்கு
விரதங்கள் இருப்போமோ?

போதி மரம் ஒன்றை
வாடிப்போகவிட்டு விட்டு
கோயில் கொலுக்களை
நாடிப்போவோமோ?

நிழல் தரு விருட்சத்தை
இலைஉதிர் காலத்தில்
நீரூற்ற மறுத்து நிற்க
சீரற்றோர் அல்ல நாம்

காவோலை வீழ்கையில்
கரகோசம் செய்ய
வரும் காலம் அறியா
குருத்தோலை அல்ல நாம்

காவோலை நீர் என்று
கலங்காதீர் பெரியவரே
சுவாலை சூழும் வரை
சுகம் தந்து காப்போம்

# கல்லுக்கு உயிர் கொடுத்த கலைஞன்
# ஓவியர் மைக்கல் ஏஞ்சலோ

*திரு. சி. ஜெயகாந்தன்*
*ஆசிரியர்,*
*யா/புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்*




இத்தாலியில் 14ஆம் நூற்றாண்டின் இறுதியில் பிறந்த மாபெரும் சிற்பி , கட்டட கலைஞன், ஓவியர், கலைஞர், கலை வல்லுனர் இவராவார். இவரது தாக்கம் மேற்கத்தேய கலை மரபில் இன்று வரை ஈடு இணையற்றதாக போற்றப்படுகிறது. இவ்வுலகம் கண்ட மாபெரும் சிற்ப கலைஞர்தான் மைக்கல் ஏஞ்சலோ ஆவார்.


இவரது வாழ்க்கையை ஆராய்ந்தால் இவரின் தாய் தந்தை சகோதரர் என யாரவது ஒருவர் கூடக் கலைத்துறையில் ஈடுபாடு கொண்டவர்களாகவோ அல்லது ஊக்கமளிக்கின்றவர்களாகவோ காணப்படவில்லை. கலைத்துறையில் வெறுப்புக்கொண்ட ஒரு தந்தைக்கு இவர் 1475ஆம் ஆண்டு மார்ச் 6ஆம் திகதி இத்தாலியில் உள்ள புளோரன்ஸ் நகரில் காசல் கப்(ய )ல் எனும் இடத்தில் பிறந்தார். இவர் தனது தந்தை கலைஞனாக கூடாதெனத் தடை விதித்தும் ஓவியம் வரைவதில் மிகுந்த ஆர்வம் காட்டினார்.

விசேடமாக மனித உருவங்களையே விரும்பி உருவாக்கினார். சிற்பமாக இருந்தாலும் ஓவியமாக இருந்தாலும் ஒரு பிரிவில் சிறந்து விளங்க வேண்டுமாயின் அடிப்படையாக கோட்டுச் சித்திரத்தில் தேர்ச்சியிருக்க வேண்டும். இதை உணர்ந்த மைக்கல் அஞ்சலோ இதற்கென அதிக பயிற்சி எடுத்துக் கொண்டார். குறிப்பாக மனித உடற்கூறுகளை நன்கு வரைந்து பழகினார். இம்முயற்சியில் வைத்தியசாலைகளில் உள்ள பிணக்கிடங்குகளில் பிணம் அறுக்கும் போது பக்கத்திலிருந்து நன்கு கவனித்து கோட்டுருக்களை வரைந்து தேர்ச்சி பெற்றார். இதன் காரணமாக இவரின் படைப்புகள் வியத்தகு அளவில் நுட்பம் வாய்ந்ததாகவும், உயிரோட்டம் உள்ளதாகவும் மிளிர்வதை கலையுலகம் காண்கிறது.

மைக்கல் ஏஞ்லோவின் பிரமாண்டமான பிரமிக்கத்தக்க படைப்புக்கள் வத்திக்கானிலுள்ள சிஸ்ரைன் தேவாலயத்தில் காணப்படுகிறது. கி.பி 1508இல் யூலியஸ் போப்பாண்டவரின் வேண்டு கோளுக்கிணங்க சிஸ்ரைன் தேவாலயத்தினை அலங்கரிக்கும் பொறுப்பினை ஒப்புக்கொண்டார். குறிப்பாக சிஸ்ரைன் தேவாலயத்தின் 450 பரப்புக்கொண்ட மேற்கூரையினை பல பிரிவுகளாக பிரித்து 449மனித உருவங்களை தத்துருவமாக வரைந்துள்ளார். இதில் உலகைப் படைத்தல் எனும் ஓவியத்தொகுப்பு பிரதானமாகும்.

பைபிளில் கூறப்பட்ட கருத்துக்களைக் கொண்டு வரையப்பட்டதே "உலகைப்படைத்தல்" எனும் ஓவியமாகும். இவ் ஓவியத் தொகுதியில் ஆதாமைப் படைத்தல், ஏவாளைப்படைத்தல் ஆகிய ஓவியங்களும் வரையப்பட்டுள்ளன. இது ஆதி மனிதனான ஆதாம், ஏவாள் இறைவனை சிருஸ்டிப்பதை காட்டுகிறது.








அத்துடன் கிரகங்களையும், சூரியன், சந்திரன் ஆகியவற்றையும் படைக்கும் செய்தியையும் ஒரு தொகுதியில் மைக்கல் ஏஞ்சலோ தத்துருவமாக காட்டியுள்ளார். நான்கரை ஆண்டுகள் முகத்தில் வர்ணங்கள் ஒழுக உயிரோட்டமான ஓவியங்களை கொண்டு சிஸ்ரைன் தேவாலயத்தின் மேல் கூரையை அலங்கரித்த பெருமை இவரையே சாரும்.


மைக்கல் ஏஞ்சலோவின் தொடக்ககாலப் படைப்புகளில் "பியாட்டா" பிரசித்தி பெற்றதாகும். யேசு சிலுவையில் அறையப்பட்ட பிறகு அவரது உடல் இறக்கி விடப்பட்டு அதை அன்னை மேரி தனது மடியில் சுமந்து கண்ணீர் சிந்துவதை சித்தரிக்கிறது. மகத்தான தேவதூதன் சிலுவையில் அறையப்பட்ட துயரத்தை ஒரு தாயின் மூலமாக வெளிப்படுத்தி உலகையே கண்ணீர் சிந்த வைத்த அற்புதப்படைப்பு இது. இதனை வடித்த போது மைக்கல் ஏஞ்சலோவின் வயது 24.



ரோம் நகரிலுள்ள சிஸ்டின் சாப்பல ஆலயத்தின் சிறப்ப வேலைப்பாடுகளில் மைக்கல் ஏஞ்லோவின் படைப்பான "ஏசுவின் கடைசி நியாயத் தீர்ப்பு" பிரசித்தி பெற்றதாகும். யேசு தனது 12 சீடர்களுடன் வாழ்ந்த கடைசி நாட்களைச் சித்தரிப்பதாக இப்படைப்பு அமைந்துள்ளது. இப்படைப் பில் மனிதனின் வீழ்ச்சியையும் தேவனின் வாக்குறுதியையும் இணைத்துப் படைத்துள்ளார்.

இவ் ஓவியம் 300 மனித உருவங்களையுடைய இந்தப் பிரமாண்டமான ஓவியம் மூன்று பகுதி களை கொண்டது. முதல் பகுதியில் கடவுள் இவ்வுலகைப்படைத்த காட்சியும், ஆதாம் ஏவாள் பிறப்பும், இரண்டாம் பகுதியில் மனிதன் கடவுளின் கருணையை இழந்த கதையை கூறுகிறது. மூன்றாம் பகுதியில் உலகை மூழ்கடிக்கும் பிரளயத்திலிருந்து உயிர்களைக் காக்க நோவா படகைச் செலுத்தும் காட்சியும் வரையப்பட்டுள்ளது.






மனிதனுக்கும் கடவுளுக்கும் உள்ள அற்புதமான உறவை இக்காட்சிகள் உலகிற்கு உணர்த்தி வருகின்றன. கலைக்கும் மனிதனுக்குமான உறவுதான் இறைமையுடனான உறவு என்பதை இவை சொல்லாமல் சொல்லுகின்ற அற்புதமான படைப்புகளாகும்.

குறிப்பாக இவரால் செதுக்கப்பட்ட டேவிட் சிற்பம் மிகப் பிரபல்யம் வாய்ந்ததும் கலையம்சம் மிக்கதுமாகும். இதனைப்படைப்பதற்கு ஒன்றரை வருடங்கள் எடுத்ததாக கருதப்படகிறது. மனித உடலின் புற அமைப்பை அழகுற கலை நேர்த்தியுடன் தத்துருவமாக செதுக்கி மகா சிற்பி எனும் புகழைப் பெற்றுக்கொண்டார்.

டேவிட் சிற்பமானது ஒரு வீரனின் ஆரோக்கியமான உடற்கூறுகளைக் கொண்ட வெற்றுடம்புடன் நிற்கின்ற மனித உருவமாகும். கல்லொன்றை சிற்பமாக்கிக் கலாரசிகர்களின் மனங்களில் நிலையாக நடமாடச் செய்த சிற்பியென்றால் அப்புகழ் மைக்கல் ஏஞ்சலோவையே சாரும்.




மைக்கல் ஏஞ்சலோ மனித உருவங்களை அமைப்பதிலும் நிறந்தீட்டுவதிலும் இயற்கையான உயிரோட்டமான பாணிகளையே மிகவும் பயன்படுத்தியுள்ளார். மனித உருவங்களின் முக பாவனை, தசைகளின் அசைவுகள், நிறங்கள், ஒளிநிழல்கள், உணர்ச்சி போன்ற அம்சங்களை தனது ஓவியங்களில் வெளிப்படுத்தியுள்ளார். இது இவரது கலை முதிர்ச்சியை காட்டி நிற்கின்றது.

ஒரு கலைஞனின் ஆற்றல்களையும், திறன்களையும் அவனது படைப்புகளே வெளிப் படுத்துகின்றன. கலைஞன் மரணித்த போதும் அவனது கலைகள் இவ்வுலகில் கலாரசிகர்களின் உள்ளங்களில் என்றென்றும் வாழ்ந்துகொண்டிருக்கும். இதனால் கலைஞனின் வரலாறும் உயிர் வாழ்கிறது. மைக்கல் ஏஞ்சலோவின் ஒவ்வொரு கலைப்படைப்புகளும் வளர்ந்துவரும் சமகால கலைஞர்களுக்கு முன்மாதிரியாக அமைந்துள்ளமை மிகவும் சிறப்பான அம்சமே.

## பாடசாலையின் பெயரை தேசிய மட்டத்திற்கு எடுத்துச்சென்றவர்கள்...



செல்வி க. நந்திகா
உயரம் பாய்தல் தேசியமட்டத்திற்கு தெரிவு 2018



செல்வன் ந .கவிஸ்ணா
சமூக விஞ்ஞான போட்டி தேசியமட்டத்திற்கு தெரிவு 2016
(பாடசாலை வரலாற்றில் முதற் தடவையாக உயர் பெறுபேற்றைப்பெற்றவர்
க.பொ.த சாதாரண தரம் 8A,C)

## ஆசிரிய ஆளணி விபரம்

| இல | ஆசிரியர் பெயர் | கல்வித்தகைமை | தரம் |
|---|---|---|---|
| 01 | திரு.க.செந்தில்வடிவேலு | Principal B,SC,M.SC,PGDE | SLPS2 |
| 02 | திரு.சி.ஸ்ரீஇராகவன் | DeputyPrincipal,Spe.Trd.Hiduism | SLTS2 - I |
| 03 | திரு.கு.வசந்தமாறன் | Deputy PrincipalB.Sc,PGDE | SLPS 3, SLEAS |
| 04 | திருமதி.ப.சகலகலாநிதி | B.A Dip in Edu | SLTS 1 |
| 05 | திரு.ப.கஜேந்திரன் | Dip in Teach(Sci) | SLTS 2 -II |
| 06 | திருமதி.ஞா.ஜெயபாலன் | Spe.Trd.Maths,BED | SLTS 2- I |
| 07 | திருமதி.ஆ.இராஜபாலசிங்கம் | B.A,Dip.in.Ed,Dip.in.Fi,SP.Trd,M.A | SLTS 2- I |
| 08 | திருமதி.ம.இராஜபார்தீபன் | BFA | SLTS 2- II |
| 09 | திருமதி.த.ஜனார்த்தனன் | BFA kalaviththakar | SLTS 2 -II |
| 10 | திருமதி.ஞா.பத்மநாதன் | Trd.Home Eco | SLTS 2 -I |
| 11 | திருமதி.சு.லங்கேஸ்வரன் | B.A Trd Pri | SLTS - I |
| 12 | திருமதி.மே.கி.ஜெயமோகன் | B.A Trd Pri | SLTS 1 |
| 13 | திரு.பா.சத்தியநாதன் | Trd.Pri,B.Ed | SLTS 2- I |
| 14 | திரு.க.பிறேமானந் | Spe.Trd Eng | SLTS 2- II |
| 15 | திரு.சி.சிவசுகீர்த்தன் | P.T Trd Dip in | SLTS 3 - I |
| 16 | திரு.து.சனந்தன் | B.A Eng,Dip Edu,NDT | SLTS 2- II |
| 17 | திருமதி.தசரதன்.கல்பனா | B.A,Dip in Edu | SLTS 2- II |
| 18 | திரு சி. ஜெயகாந்தன் | B.F.A PGDE | SLTS 2- II |
| 19 | திருமதி.சத்தியநிதி பாஸ்கரன் | B.F.A. | SLTS 2- II |
| 20 | திருமதி.றோ.கி. மேரிஜெசிமா | B.F.A. | SLTS 2- II |

## கல்வி சாரா ஊழியர்

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.வ.சண்முகநாதன் | OES | GR I |
| 2 | திரு.கி.ஜீவகுமார் | OES | GR III |

# மனமகிழ்வுடன் மலர்க்குழுவினரின் நன்றிகள்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

யாழ்/புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தின் ஏற்றம் பெறும் அறுபதாவது ஆண்டு வைரவிழா நாள் நீண்ட நாள் கனவோடு எம்மை ஒரு முறை வரலாற்றுப் பாதையில் இணைத்துக் கொண்ட அச்சுப்பயணத்தில் கைகோர்த்தருள எமது கலாசாரம், பண்பாடு, விழுமியம், சாதனைகள், பதிவுகள் என தேடலும் திரட்டலும் நிறைந்த வரலாற்றுப் பொக்கிஷமாக வைரவிழா சிறப்பு மலருக்கு பல உதவிக்கரம் நீட்டி இணைந்து செயற்பட்ட அனைத்து உள்ளங் களுக்கும் நன்றி கூறுவது தலையாய கடமையாகும்.

காலம் கனிவாய் அமைந்து கைகொடுத்ததுடன் எங்களுக்கு சக்தியும் வளமும் சேர்த்து தகவல் பெட்டகமாய் முன்னெடுக்க எம் அருகிலிருந்து ஆசி வழங்கும் புவனேஸ்வரி அம்பாளை உள்ளத்திலிருத்தி உவகை கொள்கின்றோம்.

இப்பாடசாலையின் பழைய மாணவனும் பேராசிரியருமாகிய திரு.இரத்தினம் என்பவர் வைரவிழா மலரை வெளியிடுவதற்கான முழுச் செலவினத்தையும் பொறுப்பேற்று வெளியீடு செய்துள்ளார். அவருக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

இந்த ஈடு இணையற்ற மகிழ்வினையடைய உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள் உரித்தாகட்டும். ஆசிச் செய்திகள், வாழ்த்துச் செய்திகள் என்பன வழங்கி இம்மலர் சிறப்புற வெளிவர வேண்டி நின்ற மதத்தலைவர்கள், சான்றோர்கள், கல்வி மான்கள் அனைவருக்கும் நன்றிகள் .

மலருக்கான ஆக்கங்களை உரியகாலத்தில் வழங்கிய அறிஞர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் அனைவருக்கும் நன்றிகள். விழா சிறப்புற மனம் உவந்து நிதி உதவி வழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும், இம்மலரை சிறந்த முறையில் உருவாக்கித்தந்த "மதி கலர்ஸ்" அச்சகத்தாருக்கும் புகைப்படங்களை சிறந்த முறை யில் எடுத்து உதவிய "லது" புகைப்பட உரிமையாளருக்கும் மேலும் விழா சிறப்புறவும் மலர் சிறப்புறவும் வெளிவர பல வழிகளிலும் உதவியும் ஒத்தாசையும் புரிந்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் எமது உளம் நிறைந்த நன்றிகள்.

நன்றி.

# யா/புத்த கலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்

## 60 ஆவது ஆண்டு

## நிறைவு விழா

## 1957 – 2018

காலம்

**01.10.2018 திங்கட்கிழமை**

நேரம்

**மு.ப 09.00 மணி**

**தலைவர்**

திரு. க. செந்தில்வடிவேலு

(பாடசாலை முதல்வர்)

### பிரதம விருந்தினர்

**நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்**

*கௌரவ முதலமைச்சர், வடக்குமாகாணசபை.*

### இனிய விருந்தினர்கள்

**திரு.அ.பரஞ்சோதி**

*பழைய மாணவர், கௌரவ மாகாணசபை உறுப்பினர்.*

**திரு.இ.ரட்ணம்**

*பழைய மாணவர், விரிவுரையாளர் யாழ் பல்கலைக்கழகம்.*

**திரு நா. சிவநேசன்**

*கோட்டக்கல்வி பணிப்பாளர், கோப்பாய்.*

மலர் மதிப்பீட்டு உரை

செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன்

(பிரதி அதிபர் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

-பாடசாலைச் சமூகம்


விஷ்ணு தீபம்
@Mathi Colours, Nallur.